
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973

CONNEMARA PUBLIC LIBRARY MADRAS
12 AUG 96



ஸ்ரீ தேவி கருமாரியம்மன் தேவஸ்தானம், திருவேற்காடு.

மாலை 11] சௌமிய - ஆடி - ஆகஸ்டு 1969 [மணி 11

தமிழ் நாடு அரசின் அறநிலைய
துறை வெளியீடு



நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு. கலைஞர். மு. கருணாநிதி அவர்கள், தருமையாதீனத்திற்கு வருகை தந்தபோது, கயிலைக் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பொன்னாடை போர்த்துச சிறப்பித்து, வாழ்த்தியருளுதல். (21—6—69)

## பொருளடக்கம்


1. சைவசித்தாந்தத்தில் தளையியல்
2. தணியா அதிமோக தயாபரன்
3. திருவள்ளுவம்
4. அபிராமி அந்தாதி
5. உண்மை விளக்கம்
6. காணபத்தியம்
7. மகாபாரதம்
8. உபதேச நூல்களின் உயர்த்தி
9. வைத்தீசுரன் கோயில் மாட்சி
10. திருமால் திருநெறியும் திருக்குறளும்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

**ஆண்டுச் சந்தா ரூ. 10/-**


**தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.




மாலை 11] சௌமிய - ஆடி - ஆகஸ்ட், 1969 [மணி 11

# சைவசித்தாந்தத்தில் தளையியல்*

**முன்னுரை :** சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை, பதி பசு பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளை விளக்கும். பதி பசு பாசம் என்பனவற்றை முறையே, இறை உயிர் தளை எனத் தமிழில் வழங்குவர். ஆணவம் கன்மம் மாயை என்னும் மூவகைப் பாசங்களையும், **தளை** என்னும் சொல்லால் வழங்குதல் பண்டைய மரபே என்பது,

*விளையாததொர் பரிசில்வரு*
*பசுபாச வேதனை ஒண்*
*தளையாயின தவிரவ்வருள்*
*தலைவன்னது சார்பாம்;*
*களையார்தரு கதிராயிரம்*
*உடையவ் அவனோடு*
*முளையாமதி தவழும்உயர்*
*முதுகுன்றடை வோமே.*

—சம்பந்தர்.

"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள: மறையெலாம் மொழிய நின்றன:
ஆன்ற தொல்பதி; ஆருயிர்த்தொகை!
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே."

—கந்தபுராணம்.

எனவரும் சான்றோர் திருமொழிகளால் தெளியப்படும். உயிரின் அறிவு இச்சை செயல்களை இயல்பாக நிகழவொண்ணாதபடி தடைசெய்து, தளைத்து (கட்டி) வைத்திருப்பனவாதலின், ஆணவம் கன்மம் மாயை என்னும் மலங்களுக்குப் பாசம் (கட்டுவது) எனவும், தளை எனவும் பெயர்கள் வழங்குவனவாயின. தளையாகிய இம் மும்மலங்களையும் பற்றி, இங்கு இயன்ற வரை ஒருசிறிது காண்போம்.

**ஆணவ மலம் :** உயிர் அறிவுடையது. ஆனால் அதனிடம் அறியாமையும் காணப்படுகின்றது. அறிவு அறியாமை என்னும் இரண்டனுள் உயிருக்கு இயல்பாக உள்

* புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலில் நிகழ்ந்த திருக்குடமுழுக்குப் பெருவிழாவில், கயிலைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின்படி நடைபெற்ற திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில், சைவசித்தாந்தத் திருநாளில், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களின் அரிய தலைமையில், ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது. (1—7—69)

—ஆசிரியர்.

ளது அறிவா? அறியாமையா? அறியாமையே உயிருக்கு இயல்பாயின், உயிர் சடப்பொருளாகும். அறிவே இயல்பாயின், உயிருக்கு அறியாமை நிகழலாகாது. அறிவு அறியாமையாகிய இரண்டுமே உயிர்க்கு இயல்பு எனின், ஒன்றினென்று அறவே முரண்பட்ட இரண்டு தன்மைகள், ஒரே பொருளில் யாண்டும் காணப்படுவதில்லை.

அறிவுடையதாகிய உயிரின்பால், அறியாமை நிகழ்வதற்குப் பலர் பலவகைக் காரணங்களைக் கூறுவர். (1) உயிரின் அறிவை உடம்பே மறைக்கின்றது என்பர் சிலர். உயிர் என்றும் உள்ளது (நித்தியம்), பரவியிருப்பது (வியாபகம்); ஆனல் உடம்போ அழிவது (அநித்தியம்), ஓரிடத்திருப்பது (ஏகதேசம்). மேலும், உடம்பு இடையில் வந்தது. ஆதலின், அஃது என்றுமுள்ள உயிரின் அறிவை மறைக்க வல்லதன்று. உடம்பிலுள்ள மெய்வாய் கண் மூக்கு செவி முதலியன, அறிவை விளக்குகின்றனவே யன்றி, மறைக்கவில்லை.

(2) மாயையே உயிரின் அறிவை மறைக்கும் என்பது சிலர் கருத்து. உடல் கருவி உலகு நுகர்ச்சி என்பன, மாயையில் இருந்து தோன்றுவன. இவை காரியம், மாயை காரணம். காரணமும் காரியமும் தம்முள் மாறுபடாமல், ஒரு தன்மையனவாகவே இருக்கும். காரியமாகிய உடல் மறைக்காது எனின், காரணமாகிய மாயையும் உயிரின் அறிவை மறைக்காது. உடலைப்போலவே மாயையும் இடையிலேயே வந்தது (ஆகந்துகம்).

(3) மூலப்பிரகிருதியில் தோன்றும் அவிச்சையே, உயிரறிவை மறைக்கும் என்பது சிலர் கொள்கை. அவிச்சையும் ஒன்றன் காரியமாய் இடையில் தோன்றிய ஆகந்துகமே ஆகும். ஆதலின் அஃது அநாதியே உள்ள உயிரின் அறிவை மறைத்தல் இயலாது. (4) உயிரின் குணம அறியாமையே என்பர் சிலர். அது பொருந்தாது. குணம் அழியக் குணி அழியும். ஆதலின், குணமாகிய அறியாமை அழிந்தால், குணியாகிய உயிரும் அழியும் என முடியும். (5) கயிற்றை அரவு எனக் காண்பதுபோலும் திரிபுணர்ச்சியே, உயிர்க்கு அறியாமையைத் தரும் எனச் சிலர் கூறுவர். கயிற்றை அரவு எனக் காணுதற்குக் கண்ணின் பார்வைக் குறையே காரணம். அதுபோல, உயிரின் திரிபுணர்ச்சிக்கும் ஒருகாரணம் வேண்டும்.

(6) அறிவு இல்லாமை (ஞானபாவம்) தான், உயிருக்கு அறியாமையை விளைவிக்கின்றது என்பது சிலர் கருத்து. அபாவம் ஆகிய இல்லாமை என்பது, என்றும் இன்மை (அத்திபந்தாபாவம்), ஒன்றினென்றின்மை (அந்நியோந்நியாபாவம்), முன்னின்மை (பிராகபாவம்), பின்னின்மை (பிரத்துவம்சாபாவம்) என நால்வகைப் படும். இவற்றுள் உயிரின் அறியாமை எவ்வகையைச் சேர்ந்தது? உயிருக்கு அறிவு இருந்ததாயின், அது பின்னர் இலதாகாது. அறிவு இலதாயின், பின்னர் அஃது உளதாகாது. உள்ளது இல்லதாயும், இல்லது உள்ளதாயும் நிகழும் எனின், அதற்கு ஒரு காரணம் அமைதல் வேண்டும்.

(7) தமோகுணம் முதலியவற்றால் உயிருக்கு அறியாமை நிகழும் என்பது சிலர் கொள்கை. அவையும் ஒவ்வொன்றன் காரியமாய் இடையே தோன்றி அழிவனவாதலின்; பண்டேயுள்ள உயிரின் அறிவை அவைகள் தடைசெய்ய மாட்டா. (8) மாயை கன்மங்கள் உயிருக்கு நலம் செய்ய வருவன ஆதலின், அவையும் உயிரின் அறிவை மறைக்கும் இயல்புடையன அல்ல. (9) சித்துப் பொருள் மற்றொரு சித்துப்பொருளைக் கட்டுப்படுத்த முற்படாதாகலின், சிவசத்தியாகிய திருவருளும் உயிரின் அறிவை மறைக்க முற்படாது.

(10) இனி இவற்றினெல்லாம் வேருக, உயிரின் அறியாமைக்கும் துன்பங்களுக்கும் மூலகாரணமாகஇருப்பதுஎதுவோ, அதுவே ஆணவமலம் எனப்படும். உலகம் அழிவுடையது, துன்பம் பயப்பது; ஆயினும் அதனை உயிர் நிலைபேறுடையது என்றும், இன்பம் விளைவிப்பது என்றும், பிறழக் கொண்டு விழைந்து நிற்கின்றது. இக்

நிலைக்குக் காரணம் எதுவோ, அதுவே ஆணவமலம் எனப்படும். உயிரின் அறிவு இச்சை செயல்களைத் தடைசெய்து கட்டுப்படுத்தும் தன்மையது எதுவோ, அதுவே ஆணவ மலம். கண்ணின் ஒளியை மறைக்கும் புறஇருள்போல, உயிரின் அறிவை மறைக்கும் அகஇருள்தான் ஆணவமலம். புறஇருள் ஒருபொருளையும் காட்டாது ஆயினும், இருண்ட கருநிறமாகிய தன்னியல்பையேனும் காட்டும்; ஆனால் ஆணவமாகிய அகஇருளோ, பிறபொருளை மட்டுமேயன்றித் தன் இயல்பையுங்கூடக் காட்டாது.

இருள் கண்ணொளியை மறைக்குமேயன்றி, ஞாயிற்றின் ஒளியை மறைக்காது; அதுபோல ஆணவமலம் உயிரறிவைத் தடைசெய்யுமேயன்றி இறையுணர்வை மறைக்கலாற்றாது. பித்தம் மேலிட்டால் தித்திக்கும் சுவையுடைய சர்க்கரையும் நாவிற்குக் கசக்கும். அதுபோல, ஆணவ மலம் பற்றுதலால், நலம்பயக்கும் சிறப்புடையனவும், உயிர்களுக்குத் தீயனவாகத் தோன்றும்.

ஆணவமலம் அறிவை மறைப்பதாகலின், அஃது அறிவுடைப் பொருள் ஆகாது; சடப்பொருளேயாம். சடமாய்ப் பலவுமாய் இருக்கும் யாவும் அழியும் தன்மையவாகலின், ஆணவமலம் ஒன்றேயாம். அங்ஙனம் ஒன்றேயாயினும் பல உயிர்களையும் பற்றிப் பிணித்தலின், அதன் ஆற்றல்கள் பலவாக இருக்கும். இடையில் வருவன இடையிலேயே கெடுவதுடன் மீண்டும மீண்டும் பின்னரும் வந்து சேரும்; ஆணவமலம் அத்தகையது அல்லாமல் உயிர்களின்பால் அநாதியே கலந்துநிற்கும். நெல் என்று உண்டாயிற்றோ, அன்றே அதன்பால் உமிஉண்டு. செம்பு என்று உண்டாயிற்றோ, அன்றே அதன்பால் களிம்பு உண்டு. நெல்லில் உமியும் செம்பில் களிம்பும்போல, உயிர்களின்பால் தோன்றுதொட்டே கலந்து அறியாமையை விளைவித்து வருவது ஆணவமலம். நித்த சித்து என்னும் பொருள்பட ஆன்மாஎன வழங்கப்பெறும் உயிர்களைப் பெத்தநிலையிற் சூக்கும தேகத்திற் கட்டுப்படுத்தி அவற்றைச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையதாக்கி அணுத்தன்மைப் படுத்தும் காரணம்பற்றி, இதற்கு ஆணவமலம் எனப் பெயர் வழங்குவதாயிற்று.

ஆணவமலத்திற்கு இருவகை ஆற்றல்கள் உண்டு. ஒன்றுமறைக்கும் ஆற்றல் (ஆவாரக சக்தி); மற்றொன்று கீழ்நோக்கிச் செலுத்தும் ஆற்றல் (அதோநியாமிகா சக்தி). முன்னையது ஆணவமலத்திற்குச் சிறப்பியல்பு (சொரூபலட்சணம்); பின்னையது அதற்குப் பொதுவியல்பு (தடத்தலட்சணம்). ஆணவமலத்தின் மறைப்பாற்றலால் உயிர் தன்னையும் அறியாது, சிவத்தையும் அறியாது; ஆணவத்தையும் அறியாது.

ஆணவ மலத்தின் கீழ்நோக்கிச் செலுத்தும் ஆற்றல், மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என ஏழுவகைகளிற் செயற்படும் என்பர் சிவஞான சுவாமிகள். அருள்நந்திசிவம் தமது இருபாஇருபஃதில், மோகம் அஞர் மதம் நகை விகற்பம் கற்பம் குரோதம் கொலை என எட்டாகக் குறிப்பிட்டுள்ளார்.

> "ஒன்றதாய் அனேக சத்தி
> உடையதாய் உடனாய் ஆதி
> அன்றதாய் ஆன்மா வின்றன்
> அறிவொடு தொழிலை ஆர்த்து
> நின்றுபோத் திருத்து வத்தை
> நிகழ்த்திச்செம் பினிற்களிம்பு ஏய்ந்து
> என்றும்அஞ் ஞானம் காட்டும்
> ஆணவம் இயைந்து நின்றே"
>
> —சித்தியார்.

ஆசிரியர் மெய்கண்டார், தமது சிவஞானபோதத்தின் முதல் நூற்பாவில் "ஒடுங்கி மலத்துளதாம்" எனவும், நான்காம் நூற்பாவில், "சகசமலத்துணராது" எனவும ஆணவமலத்தின் இயல்பினைச் சுட்டியுள்ளார். ஆன்மாவோடு உடன் தோற்றம் (சகசம்) பெற்றுநின்று, அறியாமையை விளைவித்து, அது கருவிகளோடுகூடி நனவு கனவு உறக்கம் பேரு

றக்கம் உயிர்ப்படக்கம் என்னும் ஐந்தவத்தை உறுதற்கு ஏதுவாக இருப்பது ஆணவமலம் என நூல்கள் விளக்கும்.

**கன்மமலம் :** கன்மம் என்பது தமிழில் வினை எனப்படும். வினை என்பதொன்றில்லை என, உலகாயதர்கள் மறுத்தழித்துக் கூறுவர். எனினும் இந்தியநாட்டுப் பழம்பெரும்சமயங்கள் பலவும், வினை உண்டென்றேகொண்டு உடன்படுகின்றன. உயிர்கள்பால் பிறவி-நிலை-அறிவு-வாழ்க்கைத்திறன் முதலியவற்றில், எத்தனையோ பற்பல வேறுபாடுகள் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். இவ்வேறுபாடுகட்குக் காரணம் எதுவோ, அதுவே வினைஎனப்படும். அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகாமைக்குக் காரணம் எதுவோ, அதுவே வினையாகும். வினையென்பதொன்றில்லையாயின், அறநூல்கள் விதித்தன செய்தலானும், விலக்கியன ஒழிதலானும் பயனின்றாய் முடியும். நாடொறும் நாம் இன்ப துன்பங்களை மாறிமாறி எய்துகின்றோம். நாம் அடையும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் வினையே என்பது நூல்களின் துணிவு. நாம் செய்யும் செயல்கள் நல்லனவாக இருப்பின் நல்வினை என்றும், தீயனவாக இருப்பின் தீவினையென்றும் அமையும். இவற்றின் பயன்கள் முறையே இன்பதுன்பங்களாக நமக்கு வரும். மனம் மொழி மெய் என்னும் மூன்றனாலும் நாம் வினைகளைச் செய்கின்றோம். அவ்வினைகளின் பயனை நாம் அனுபவித்தே கழித்தல் இயலும். வினையானது தொகுவினை (சஞ்சிதம்), நுகர்வினை (பிராரத்தம்), வளர்வினை (ஆகாமியம்) என மூவகைப்படும். தொகுவினையும் வளர்வினையும், தீக்கையினாலும் ஞானத்தினாலும் நீங்கும். நுகர்வினையை நாம் அநுபவித்தே கழித்தல் வேண்டும். வினையானது தன்பயனைக் கொடுக்குங்கால், உயர்ந்தோர் தாழ்ந்தோர், கற்றார் கல்லார், செல்வர் வறியர் முதலிய வேற்றுமைகளைப் பாராமல், தனக்குரிய காலத்தில் வந்து தனது பயனைத் தந்தேதீரும்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

எனத் தொல்காப்பியர் வினையின் இயல்பைத், தம்நூலில் அழகுறக் குறிப்பிட்டுள்ளார். பண்டைத் தமிழ் மக்களின் 'வினைக் கொள்கை'பற்றி இந்நூற்பாவால் இனிதுணரலாம்.

தன்மமோ டதன்மம் ஆகித்
தான்இரு பயனும் தந்து
நன்மைதீ மையினும் இன்பத்
துன்பினும் நாடிக் காண
முன்னமே ஆன்மா வின்றன்
மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமும் மூலங் காட்டிக்
கான்மிய மலமாய் நிற்கும்.

—சித்தியார்.

இருவினை அநாதி, ஆதி
இயற்றலால், நுகர்வால் அந்தம்
வரும்மலஞ் சார்ந்து மாயா
உருவுகள் மருவி யார்த்துத்
தருசெயல் முறைமை யாலே
தான்பல பேதங் காட்டி
அருவதாய் நின்று, அரன்றன்
ஆணையின் அமர்ந்து செல்லும்,

—சித்தியார்.

**மாயாமலம் :** வினை உண்மை பெறப்படவே, அதற்குப்பற்றுக்கோடாகியமாயை உண்மையும் பெறப்படும். மா என்பது ஒடுங்குதல், யா என்பது தோன்றுதல். எல்லாப் பொருள்களும் ஒடுங்குதற்கும் தோன்றுதற்கும் காரணமாவது எதுவோ, அதுவே மாயை எனப்படும். உயிர்களுக்கு உரிய உடல் கருவி உலகு நுகர்ச்சி (தனு கரணம் புவனம் போகம்) என்பன, மாயையிலிருந்தே தோன்றுகின்றன என்பது சைவசித்தாந்தம்.

(1) சௌத்திராந்திகர், உலகம் சார்பில் தோன்றும்; காரிய காரணங்கள் இரண்டும் அநித்தியம் என்பர். அநித்தியமாகிய உலகம் தோன்றுதற்குக் காரணமாகிய மாயை நித்தப்பொருளாகும். (2) பூதங்களும் பரமாணுக்களும் உருவமாகவே இருக்கும், அவற்றினின்றே உலகம் தோன்றும்என, உலகாயதரும் நையாயிகரும் கூறுவர். உருவமாகிய உலகம், அருவ

மாகிய மாயையிலிருந்தே தோன்றுகின்றது. (3) சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களிலிருந்து உலகம் உதிக்கும் என்பர் சாங்கிய நூலார். அம்முக்குணங்களுக்கும் மூலமாய் ஏகநிலையாய் இருப்பது மாயை. (4) உலகம் சூனியத்தினின்று தோன்றியதென மாத்தியமிகர் கூறுவர். உண்மையான் நோக்கினுல், மாயை என்னும் நுண்ணிய உள்பொருளே இவ்வுலகத்திற்கு விதையாய்த் திகழ்கின்றது.

(5) சிவாத்துவித சைவர், இறைவனின் சிற்சக்தியே உலகமாய் விரிந்தது என்பர். சித்துப்பொருள் அசித்துப் பொருள் ஆதல் பொருந்தாமையின், அசித்தாகிய மாயையினின்றே உலகம் தோன்றிற்ருதல் வேண்டும் என்பது தெளிவு. (6) வைசேடிகர் பரமாணுக்கள் வியாபகமாய் உள்ளன; அவையே உலகிற்குக் காரணம் என்பர். பரமாணுக்களும் ஒருவகையில் காரியப் பொருள்களேயாம். ஆதலின் அவற்றிற்கும் காரணமாய் நிற்கும் மாயையே எல்லாவற்றிலும் வியாபித்து நிற்கும். (7) பிரமப்பொருளே உலகமாய்ப் பரிணமிக்கும் என்பர் பாற்கரியர். சித்தாகிய பிரமம் சடமாகிய உலகமாகப் பரிணமித்தல் பொருந்தாது. உலகிற்குக்காரணமாய்த் திகழ்வது சடப்பொருளாகிய மாயையே. அது இறைவனுக்கு உரிய வைப்புத்துணை (பரிக்கிரகசக்தி) என விளங்கும். (8) இத்தகைய மாயை சொல்லொணுதது (அநிர்வசநம்) என்பர் சிலர். அது பொருந்தாது. மாயையே உயிர்களுக்குத் தனுகரண புவன போகங்களைத் தருகின்றது. இருளிற்செல்ல ஒளி நல்கும் விளக்கைப்போல ஆணவமலத்தில் அழுந்தியுள்ள உயிர்களுக்கு ஒருசிறிதேனும் அறிவு விளக்கத்தைக் தந்துதவுவது மாயையே ஆகும். நான் இன்புறுகின்றேன் வருந்துகின்றேன் என, ஒரோவழி உயிரை அவ்வவ் வுணர்வுகளில் அழுந்தச்செய்தல்பற்றி, மாயையை 'மயக்கமும் செய்யும்' என்றும், மலம் என்றும் நூல்கள் நுவலும்.

*நித்தமாய் அருவாய் ஏக*
*நிலையதாய் அகிலத் துக்கோர்*
*வித்துமாய் அசித்தாய் எங்கும்*
*வியாபியாய் விமல னுக்கோர்*
*சத்தியாய்ப் புவன போகம்*
*தனுகர ணமும் உயிர்க்காய்*
*வைத்ததோர் மலமாய் மாயை*
*மயக்கமும் செய்யும் அன்றே.*

—*சித்தியார்.*

**மும்மலங்கள் :** ஆணவம், கன்மம் மாயை என்னும் மும்மலங்களாற் பற்றப்பட்டு, அவற்றில் அழுந்திக்கிடக்கும் உயிர்களின் நிலையை, ஒருவகையில் நெல்லுக்கு ஒப்பிடலாம். நெல்என்பது, அரிசி உமி தவிடு முளை என்பன சேர்ந்த ஒன்ருகும். உமி தவிடு முளைகள் அரிசியின் உண்மை வடிவை மறைக்கின்றன. அது போல ஆணவம் மாயை கன்மங்கள், உயிரின் உண்மை இயல்பைத் தடைசெய்கின்றன. உமி ஆணவ மலம், தவிடு மாயை, முளை கன்மம் எனக் கூறலாம். உமியானது அரிசியின் வடிவம் தெரியாமல் அதை முழுவதும் மறைத்தல் போல, ஆணவமலம் உயிரின் இயல்பை முழுவதும் மறைக்கின்றது. தவிடு அரிசியின் தன்மையைச் சிறிது விளக்குதல் போல, மாயையும் உயிரறிவைச் சிறிது விளங்கச் செய்யும். முளைதோன்றுங்கால் அரிசியின் வடிவம் விளங்காது ; அதுபோலக் கன்மமாகிய நல்வினை தீவினைகள் செய்யப்படுங்கால், உயிர் அவ்விருவினையில் உணர் விழந்து மயங்கி நிற்கும்.

உயிர்க்கு வினைமுதலாந்தன்மை (போத்திருத்துவம்), விளைவிப்பது ஆணவமலம். உடல் கருவி உலகு நுகர்ச்சிகளை அளிப்பது மாயாமலம். இன்ப துன்பங்களை நுகர்விப்பது கன்மமலம். உயிர்களைக் கட்டுப்படுத்தும் வகையால், இவை முறையே பிற்கட்டு (அநுபந்தம்), நற்கட்டு (சம்பந்தம்), எதிர்க்கட்டு (பிரதிபந்தம்) எனப்படும்.

உயிர்தோன்றிய அன்றே, அதனேடு உடன் பிறந்தது (சகசம்) ஆதலின், ஆணவ மலத்திற்குச் சகசமலம் என்றும், உயிரின் எல்லாத் துன்பங்களுக்கும் மூல

காரணமாதலின், மூலமலம் என்றும் பெயர் வழங்கும். ஆணவ மலத்தினின்று உயிர் தப்பி உய்வதற்கு. உடல் கருவி முதலியன வாகத் துணைபுரிவது மாயாமலம். உடல் கருவி முதலியவற்றால் இன்ப துன்பங்களை நுகரச் செய்வது கன்மமலம். இவை இரண் டும் ஆணவ மலத்திற்குப்பின்னர் இடையே வருவதனால், ஆகந்துக 'இடையில் வரு கின்ற' மலங்கள் எனப்படும்.

உயிரின் அறிவைத் தடைசெய்வதனால், ஆணவம் எதிர்க்கட்டு (பிரதிபந்தம்); உயி ரின் தடையுண்ட அறிவைஒரு சிறிதுவிளங் கச் செய்ய உதவுவதனால், மாயை நற்கட்டு (சம்பந்தம்); உயிர் உடல் கருவிகளைப் பெற்றபின், உயிர்க்கு இன்ப துன்பங் களைத் தருதற்கு வருவதனால் கன்மமலம் பிற்கட்டு (அநுபந்தம்); என்று சொல்லப் படும்.

இம்மும்மலங்களோடு, மாயேயம் திரோ தாயி என்னும் வேறு இரு மலங்களையும், சேர்த்து எண்ணிப் பாசங்களாகிய மலங் கள் ஐந்து என்றும், நூல்கள் கூறும். காலதத்துவம் முதல் பிருதிவி ஈறான தத்து வங்களும், புவனங்களும், புவனத்துப் பொருள்களும் மாயேயம் எனப்படும். இதனைப் "புவனபோகச் செயல் ஆரும் மாமாயைத் திரட்சி" என்பர் உமா பதி சிவம். மாயை உயிரறிவை மயக்கும்; மாயேயம் அம்மயக்கத்திற்கு முன்னிலைப் பொருளாய் இருக்கும்.

திரோதாயி என்பது ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களையும் செலுத்தி, உயிரின் அறிவு இச்சை செயல் களை மறைக்கும்படி செய்வது. "ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும் தூயவன் தனதோர் சத்தி திரோதான கரியது" என்றபடி, இறைவனின் திருவரு ளாகிய சத்தியும், கட்டு நிலையில் உயி ரறிவை மறைக்கும். அதுபற்றி அதற்கு மறைப்பாற்றல் (திரோதான சத்தி) எனப் பெயர் வழங்கும். மலம் பக்குவம் எய்திய நிலையில் இம்மறைப்பாற்றலே அருளாற்ற லாக மாறி, நலம் விளைவிக்கும். இவ்வுண் மையினையே மணிவாசகர் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என் னும் திருவெம்பாவைத் தொடரால் புலப் படுத்தியருளினர். 'பாகம் மிக உதவு திரோதாயி' என்றும், 'முற்சினம் மருவு திரோதாயி கருணையாகித் திருந்திய சத் தினிபாதம் திகழும்' என்றும் உமாபதி சிவம் குறிப்பிடுவர். இங்ஙனம் மாயேயம் திரோதாயி என்னும் இரண்டையும் சேர்த்து, மலங்கள் ஐந்து எனவும் கூறுவ துண்டு. ஆயினும் மும்மலம் என்றலே பெருவழக்காக நூல்களிற் குறிப் பிடப்பெறும்.

இறை உயிர் தளை என்னும் மூன்றும், நிறைவு (வியாப்தி) உடைய பொருள்கள். நிறைவு மூன்று வகைப்படும்: மேலிடு நிறைவு (வியாபக வியாப்தி), உட்படு நிறைவு (வியாப்பிய வியாப்தி), நிகர்நிறைவு (சமவியாப்தி) என்பன அவை. இறைவன் ஏனையவற்றைத் தம்முள் அடக்கித் தாம் அவற்றில் அடங்காமல் யாண்டும் நீக்க மறப் பரவியிருக்கின்றார். அது மேலிடு நிறைவு. மாயை கருமங்கள் உயிரில் அடங்கியிருப்பன. அஃது உட்படுநிறைவு. ஆணவம் உயிருக்கு மேலிடு நிறைவாயின் உயிர் வீடுபேறு அடையாது. உட்படு நிறைவாயின் உயிரைக் கட்டுப்படுத்தாது. ஆதலின் உயிரும் ஆணவமும், தம்முள் நிகர் நிறைவு உடையனவாகும். கடல், கடல்நீர், கடல் உப்பு என்பனவற்றை முப் பொருள்களுக்கு உவமையாகக் கொள்ள லாம். கடல் சிவம், கடல் நீர் உயிர்கள், கடல்நீரிற் கலந்துள்ள உப்பு ஆணவமலம் என்றல் பொருந்தும். கடல் நீரும் உப்பும் நிகர் நிறைவுப பொருள்கள். கடல் நீரும் உப்பும் பண்டே கலந்திருப்பன வாயினும், பிரியும் தன்மையுடையவை. அதுபோல, உயிரில் ஆணவம் பண்டேஒன்றிக கலந்து நிற்பினும், உயிரினின்று ஆணவம் அகன்றொழியற்பாலது. ஆணவம் அகன் றால், மாயை கன்மங்களும் தாமே அகன்று விடும்.

தளைநீக்கம்: இங்ஙனம் மும்மலங்கள் எனப்படும் தளைகளை விடுவித்து, மக்களை உய்யச் செய்வதே, சமய நெறிகளின் நோக்கமாகும். சமய நூல்கள் பலவும் தளையாகிய மலங்கள் நீங்கிக் கெடுதற்

குரிய வழிகளை விளக்குவனவே ஆகும். புராணங்களும் சாத்திரங்களும், மலநீக்கத் திற்குரிய வழி முறைகளை வகுத்து உரைப் பனவே ஆகும் எனலாம்.

(1) புராணங்களுள் சிவபிரான் செய்தன வாகப் பலவீரச் செயல்கள் குறிப்பிடப் பெறும். அவைகளுள் முதன்மையானவை எட்டு. அவ் எட்டு வீரச் செயல்கள் நிகழ்ந்த தலங்களே அட்டவீரட்டானம் (வீரத்தானம்) என வழங்கும். "அட்டானம் என்று ஓதிய நாலிரண்டும்" என்பர் நாவுக் கரசர். அவற்றுள் மிகப் பழமையானது ஆகிய முப்புரம் எரித்த வரலாறு, மும்மல நீக்கத்தைக் குறிக்கும் உருவகமே ஆகும். அதனை,

*அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்*
*முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்*
*முப்புரம் ஆவது மும்மல காரியம்*
*அப்புரம் எய்தமை யார்அறி வாரே*

எனத் திருமூலர், தமது திருமந்திரம் என் னும் சிறந்த நூலில் அருளிச் செய்திருத் தல் காணலாம்.

(2) மற்றும் சிவபுராணங்களுள் தலை சிறந்த ஒன்றாகிய கந்தபுராணத்தின் கருத் தும், மும்மலமாகிய தளைநீக்கம் குறித்ததே ஆகும். சூரபதுமன் சிங்கமுகன் தாரகா சுரன் என்பவர்களை அழித்து, அவர்களால் சிறை செய்து துன்புறுத்தப்பட்டுவந்த தேவர்களை, முருகப் பெருமான் சிறைவிடு வித்துக் காத்தருளினான் என்பதே கந்த புராண வரலாறு. சூரபதுமன் ஆணவம். சிங்கமுகன் மாயை. தாரகாசுரன் கன்மம். தேவர்கள், இம்மும்மலங்களாற் கட்டப் பெற்ற உயிர்த் தொகுதிகள். அஞ்ஞா னத்தை ஞானம் வெல்லும். ஆணவமலம் என்னும் அஞ்ஞானமாகிய சூரபதுமனை, முருகனின் ஞான சக்தியாகிய வேல் வெற்றி கொண்டது.

முத்தி நிலையிலும் நித்தியப் பொருளா கிய ஆணவம் அழிவதில்லை என்பது சைவ சித்தாந்தம். அதன்படியே, சூரபதுமன் அழியவில்லை. கட்டு நிலையில் துன்பத்தைக் கொடுக்கும் இயல்பினதாகிய ஆணவ மலம், வீட்டுநிலையில் உயிர்க்கு இன்பத்தை விளைவிப்பதாக அமையும் என்பது, தத் துவநூற் கொள்கை. அம் முறையில் பகைவனாக இருந்த சூரபதுமன், அடியவ னாக மாறினான். ஆணவமலம் மறைப்புத் திறன், கீழ்ச் செலுத்தும் திறன் என்னும் இருவகை ஆற்றல்களை உடையது என்பர். அதனாலேயே சூரபதுமனும் இரு கூறாகப் பிளந்து சேவற் கொடியும், மயில் ஊர்தியு மாக அமைந்தான். முருகனை வழிபட்ட தேவர்கள் உய்ந்து நலம் பெற்றார்கள். தன்னையே விருப்பிப்பற்றி வழிபடும் பக்கு வம்மிக்க நல்லுயிர்க்கு, இறைவன் எளி வந்து அருள் செய்தலையே, வள்ளியம்மை யின் வரலாறு தெள்ளிதின் நயம்மிக உணர்த்துகின்றது.

(3) சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராண வரலாறு ஒன்றில் வைத்தும் மும்மலமாகிய தளைநீக்கம்பற்றிய கருத்துக் களை விளக்குதல் கூடும். பெரிய புரா ணத்துள் எறிபத்த நாயனார் வரலாறு, யாவ ரும் அறிந்ததொன்று. கருவூரில் ஆனிலை என்னும் கோயிலில் விளங்கும் பசுபதீசு வரருக்குச் சிவகாமி ஆண்டார் என்பவர் பூத்தொண்டு செய்து வந்தார். வழக்கம் போல் பூப்பறித்துத்தொகுத்தபூக்குடலையை ஒரு கழியிற் கோத்துத் தோளில் வைத்து அவர் சென்று கொண்டிருந்தபொழுது, உவாநாளில் நீராட்டுவிக்கக் காவிரிக்கு அழைத்து செல்லப்பெற்ற சோழ மன்ன னின் பட்டத்து யானை, மதம்கொண்டு சிவ காமி ஆண்டாரின் பூக்குடலையைப் பறித்துவீசி, மலர்களைச் சிதறி அவற்றை மிதித்துச் சென்றது. அது கண்ட எறிபத் தர் யானையையும், பாகர்களையும், பரிக் கோற்காரர்களையும், தமது மழுப்படையால் தடிந்து கொன்றார். அதுகேட்ட அரசன் முதலிற் சினந்தெழுந்து வந்து, பின்னர்ச் செய்தியறிந்து தன்னைத் தண்டிக்குமாறு எறிபத்தரை வேண்டினான். இறையருளால் பின்னர்ப் பாகரோடு யானை உயிர் பெற் றெழுந்தது என்பது வரலாறு.

இதன்கண் கருவூர் உடல். ஆனிலை என் னும் கோயில், புருவநடு. அங்குள்ள பசு பதி ஈசுவரர் சிவபிரான். சிவகாமி யாண்

டார், பக்குவம் எய்திய நல்லுயிர். பூக்குடலை, மனம். பூக்கள், கொல்லாமை ஐம்பொறியடக்கம் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் எண்வகை நல்லெண்ணங்கள் சிவகாமியாண்டார் தமது மலர்க்கையில் கொண்டு சென்ற தண்டு, யோகப் பயிற்சிக்குரிய வீணைதண்டு (Spinal Cord). யானை, ஆணவமலம். பாகர், இருவரும் இருவினைகள். பரிக்கோற்காரர் மூவரும், சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் என்னும் மூவகை மாயைகள். சோழ அரசன், திரோதானசத்தி எறிபத்தர், ஞானசிரியர். அவர் தாங்கியிருந்த பரசு, ஞானம் என்னும் வாள் என, இங்ஙன மெல்லாம் உள்ளுறைப் பொருள் (Allegorical Suggestion) கொள்ளவும், பற்பல குறிப்புக்கள் சேக்கிழார் சுவாமிகள் பாடலில் அமைந்துள்ளமை காணலாம்.

(4) அம்பிகை மகிடாசுரவதம்செய்ததும், விநாயகர் கயாசுரனை வென்றதும் ஆகிய செய்திகளும், ஆணவமல அழிப்பைக் குறிக்கும் கருத்துடையனவே ஆகும்.

**மலநோய் :** உயிர்களைத் தளைசெய்துள்ள மும்மலங்கள், நோய் எனவே நூல்களிற் கூறப்படும். ஐ வளி பித்து என்னும் மூன்றனுல், உடலுக்கு நோய் ஏற்படுகின்றது. அதுபோல ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களால், உயிர்க்குப் பிறவிநோய் உண்டாகின்றது. உடல் நோயைத் தீர்க்க வல்லவர் வைத்தியர் எனப்படுவர். உயிரின் பிறவிநோயைத் தீர்க்க வல்லவன் வைத்தியநாதப் பெருமானேயாவன்.

**வைத்தியநாதன் :** மக்களாகிய நாம் நோயாளிகள். மும்மலங்களால் நமக்குப் பிறவிநோய் ஏற்பட்டுள்ளது. அந்நோய் நீங்குதற்குரியவைத்தியச்செயல்முறைகள், சரியை கிரியை யோக ஞானங்கள். வேத சிவாகமங்கள், அம்முறைகளை விளக்கும் வைத்திய நூல்கள். அவற்றை அருளிச் செய்தவன், வைத்திய நாதன் ஆகிய சிவபெருமான். நாம் செய்யும் பாவ புண்ணியங்களைத் தீர்க்க, முறையே நரகம் சுவர்க்கம் ஆகிய மருந்துகளை, அவன் ஏற்ற பெற்றி அளிக்கின்றுன்.

அருளினுல் உரைத்த நூலின்
வழிவாராது அதன்மம் செய்யின்,
இருள்உலாம் நிரயத் துன்பத்து
இட்டு, இரும் பாவம் தீர்ப்பன்;
பொருள்உலாம் சுவர்க்கம் ஆதி
போகத்தாற் புணியம் தீர்ப்பன் :
மருள்உலாம் மலங்கள் தீர்க்கும்
மருந்து, இவை ; வைத்யன், நாதன்.

என்பது சிவஞான சித்தியார். இறைவனைப் பலவகைகளிற் சிறப்பித்துக் கூறும் இருக்கு வேதம். அவனைப் பலவிடங்களில் ஆங்காங்கே 'வைத்தியநாதன்' என்று புகழ்ந்தோதிப் போற்றுகின்றது.

**மணி மந்திரம் மருந்து :** அவ் இருக்கு வேதம் வழிபட்டுச் சிறப்புற்ற புள்ளிருக்கு வேளுர் என்னும் இத்தலத்தில், எல்லாம் வல்ல நம் சிவபிரான் '**வைத்தியநாதன்**' என விளங்கி, வழிபடும் அடியவர்களுக்குத் தீரா நோய்களை எல்லாம் தீர்த்தருளி வருகின்றுன். வைத்தியர்கள் மணி மந்திரம் மருந்து என்னும் மூன்று பொருள்களைக் கொண்டு நோய்களைத் தீர்ப்பர். சிவபெருமானும் உருத்திராக்கம் ஆகிய மணியும், திருவைந்தெழுத்து ஆகிய மந்திரமும், திருநீறு ஆகிய மருந்தும் கொண்டு நம்மனோரின் உடல்நோய் உயிர்நோய்களைத் தீர்த்து அருள் புரிகின்றுன். "பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பான் ; தீராநோய் தீர்த்தருள்வான்" என்பது திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ ?
பரத்துறை சீலத் தவர்வாழ்வே !
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே !
வரத்துறை நீதர்க் கொருசேயே !
வயித்திய நாதப் பெருமாளே !

என அருணகிரி நாதர், தமது மலப்பிணியைத் தீர்த்தருளுமாறு வைத்தியநாதப் பெருமானை இத்தலத்திற் பாடிய திருப்புகழில் வேண்டுகின்றுர்.

## முடிவுரை :

புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியுள்ள வைத்தியநாதப் பெருமானின் திருக்குட முழுக்குப் பெருவிழாவைக் கண்டு களித்து வழிபடும் பேறு பெற்ற நாம் அனைவரும், அப்பெருமானின் திருவருளால் மும்மைமலம் நீங்கிச் செம்மை நலம் பலவும் எய்திச் சிறப்புறுவோமாக !

—ஆசிரியர்.

# "தணியா அதிமோக தயாபரன்"*

## முன்னுரை :

தணிகை, முருகப்பெருமான் எழுந்தருளி விளங்கும் தலங்களுள் மிகவும் தலைசிறந்த ஒன்று. சூரபதுமன் முதலிய அசுரர்களுடன் போர் முடித்து வெற்றிகொண்டு, சினம் தணிந்த இடமாதலின், இத்தலத்திற்குத் தணிகை எனப்பெயர் அமைந்தது, என இதற்கு விளக்கம் கூறுவர் பெரியோர்.

செங்கண் வெய்ய சூர்ச்செருத்
 தொழிலினும், சிலைவேடர்
தங்க ளிற்செய் யும்செருத்
 தொழிலினும் தணிந்திட்டே,
இங்கு வந்துயாம் இருத்தலால்
 செருத்தணி என்றுஓர்
மங்க லம்தரு பெயரினைப்
 பெற்றது இவ்வரையே

—கந்த புராணம்.

இது மிக்க பொருத்தமும் சிறப்பும் உடைய விளக்கமே ஆகும். எனினும், அதற்கு வேறு ஒரு வகையிலும் நாம் விளக்கம் கூறுதல் கூடும். முருகப்பெருமான் தனது தணியா அதிமோகம் தணியப்பெற்ற தலமே, 'தணிகை' என்று நாம்பொருள் கூறின், அதுவும் மிக்க பொருத்தமும் சிறப்பும் உடையதாகவே விளங்கும்.

முருகப் பெருமான் வள்ளியம்மையின் பால் தணியா அதிமோகம்கொண்டு பற்பல திருவிளையாடல்கள் புரிந்து, அவ்வம்மையை மணந்துகொண்டு மகிழ்ந்து, தன் ஆற்றுமை தணிந்த இடமாதல் பற்றியே, இத்தலத்திற்குத் தணிகை எனப் பெயர் அமைந்தது.

"இறைவன் தன் அடியவர்கள்பாற் செய்யும் அருட்சிறப்பு உலகில் ஓர் ஆண்மகன் ஒரு பெண் மகனிடம் கொள்ளும் காதலனைப் போன்றதாகும். இறைவன் தன் அடியவர்களை நேசிக்கும் திறன், மிகச் சிறந்த ஓர் அரசப் பெருமகன், மிகவும் எளிய ஓர் ஏழைக் குடிமகளைக் காதலிப்பது போன்ற இயல்பினது. அரசன் அக்குடிமகளைத் தன்நிலைக்கு உயர்த்துதல் ஒல்லாது; ஏனெனில் அங்ஙனம் செய்யின், அவள் தனக்கேஉரிய இயல்பான நிலையையும் பண்பையும் இழந்து போவாள். தனது அரச இயல்புகள் எல்லாம் பொலியச் செல்லின், அவ் எளிய ஏழைக் குடிமகள் மிகவும் அச்சம் கொண்டு அயர்ந்து மறைந்து கொள்வாள். அதனுல் அவன் தன்னை மிகவும் எளியவனுக்கிக் கொண்டு, தான் விரும்புகின்ற அவ் ஏழைப்பெண், தன்னுடன் சமநிலையிற் கலந்து பழகிக்

---

* திருத்தணிகையில், தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர வழிபாட்டுக் கூட்டத்தில், வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் தலைமையிற் பேசியதனைத் தழுவியது. (31-7-69) —ஆசிரியர்.

காதலிக்கும் வாய்ப்பைப் பெறுவதற்கே ஏக்கற்று முயல்வான்."(1)

இத்தகையதொரு நிலையில் முருகப் பெருமானாகிய அரசப் பெருமகன், வள்ளியம்மையாகிய ஏழை எயினர் குலப்பெண்களிடம், தனது அளப்பரிய காதற் பிரிவின் மிகுதியாகிய கருணைத்திறனைக் காட்டியருளிய திறமே, திருத்தணிகையில் நிகழ்ந்ததாகக் கூறப்பெறும் வள்ளியம்மை திருமண வரலாறாகும்.

"புராணங்கள் உயரிய தத்துவ நுட்பங்களைக் கதைகள் அல்லது புனைகதைகளின் வாயிலாக, அழகும்சுவையும் அமையச் செய்து அறிவுறுத்துகின்றன. அவ்வாற்றால் கடினமும் சிக்கலும் ஆன உயரிய தத்துவ நுட்ப உண்மைகளைப் பெரும்பாலான பொது மக்களின் எளிய உணர்விற்கும் எட்டிப்பதிந்து புலனாகும்படி புராணங்கள் புரிகின்றன. கல்வியறிவற்ற பாமர மக்களுக்குத் தத்துவக் கலையின் கருத்து நுட்பங்களில் ஆவலும் ஆர்வமும் ஏற்படச் செய்யும் கடினமான வேலையினை, இந்தியநாடு எளிதாகச் செய்துமுடித்து வெற்றி கண்டுள்ளது"(2)

இவ்வுண்மையை வலியுறுத்தும் சான்றாக, வள்ளித் திருமண வரலாறு ஒப்புயர்வற்று ஒளிர்கின்றது என நாம் தயங்காது கூறலாம். இவ்வரலாற்றில் அமைந்து கிடக்கும் தத்துவ நுட்பங்களை, ஈண்டு இயன்ற அளவு ஒரு சிறிது காண்போம்:

*உலைப்படும் மெழுகது என்ன*
*உருகியே ஒருத்தி காதல்*
*வலைப்படு கின்றான் போல*
*வருந்தியே இரங்கா நின்றான் :*
*கலைப்படு மதியப் புத்தேள்*
*கலங்கலம் புனலில் தோன்றி*
*அலைப்படு தன்மைத் தன்றே ?*
*அறுமுகன் ஆடல் எல்லாம்!*

(1) வள்ளியம்மை முருகனை மணம் புணர்ந்த கதை, ஓர் உயிரானது இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேற்றைப் பெறும் நிலையினை உணர்த்துகின்றது. எனவே, வள்ளியம்மை உயிர், முருகன் இறைவன், மணம்புணர்தல் இரண்டறக் கலத்தல் எனத் தெளியலாம்.

(2) வள்ளியம்மை 'தழைபுனைந்து தன துணர்வின்றியே உழைவயின்வந்து உதித்தனள்' என்பது உயிரானது திருவருளினாலே மாயா தத்துவங்களாகிய உடம்பிற் புகும் எனவும், அவ்வுடம்பிற் புகுந்தபின் உயிர் தன் பழைய உணர்ச்சிகள் நீங்கப் பெறும் எனவும் குறிப்பிக்கின்றது.

(3) வள்ளி மான் வயிற்றில் தோன்றினாள் என்புழி, மான் என்பது மூலப்பிரகிருதியைக் குறிக்கும் பரியாயச் சொல்லாதல் காணலாம்.

(4) அவள் வள்ளிக் குழியில் கிடந்தாள் என்பது, தூலசரீர கர்ப்பம் அல்லது 'காரிட்ட ஆணவக் கருவறை' என்பதன் கண், உயிர் தங்கிக் கிடக்கும் நிலையைக் குறிக்கும்.

(5) ஏனைய வேடர்களாகிய பரிசனங்கள் சூழப்போந்த வேடர் குலத்தலைவனாகிய நம்பிராசன், வள்ளியினைக் கண்டெடுத்துச் சென்று மனைவியிடம் கொடுத்துத்தன்

---

(1)"Kierkegaard describes the encounter in terms of a love affair. He compares the revelation of the divine love to a human courtship whereby a king would woo a peasant girl. He cannot raise her to his own rank, for this would cause her to cease to be herself. He Cannot come to her in all his own splendour, for this would Cause her to hide from him. So he chooses to come to her in the form of great humility, seeking equality only with the one he loves"

—Pauline M. Webb

We Believe in God, P. 116.

(2) "The Puranas contain the truth dressed up in myths and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitude in the metaphysics is achieved in India"

—Dr. S. Radhakrishnan,

Indian Philosophy, P. 26.

வீட்டில் வளர்த்தான் என்பழி, பரிசனங்களாகிய வேடர்கள் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களேயும், நம்பிராசனின் வீடு உலகத்தையும், அவனது மனைவி திரோதான சத்தியையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

(6) திருமாலின் மகளாகிய சுந்தரவல்லி நம்பிராசனின் மகளாய், வள்ளி என்ற பெயருடன் வேட்டுவச் சிறுகுடியிற் சேர்ந் வளர்ந்தாள்.

"முல்லைப் புறவ முதல்வன் திருமடந்தை
கொல்லைக் குறிஞ்சிக் கிழவன் மகளாகிச்
சில்லைப்புன் கூரைச் சிறுகுடியில்
சேர்ந்தனளால்
தொல்லைத் தனித்தந்தை தோன்றியமர்
வுற்றது போல்"

என்றது, ஆன்மா எய்தும் கேவல சகல நிலைகளை ஒருவகையிற் குறித்ததாகக் கொள்ளப்படும்.

(7) அம்மை சிறுகுழவியாய்ச் சின்னாள் தொட்டில் வாழ்க்கையளாய்க் கிடந்தமை, உயிரானது அறிவு விளக்கம் சிறிதுமின்றி உலகாயதம் முதலிய புறப்புறச் சமயங்களில் உழலும் தன்மையை உணர்த்துவதாகும்.

(8) அம்மை வேடர்களின் சூழலில் வளர்ந்து வந்தமை, 'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து' எனவும், 'மன்னவன் தன் மகன் வேடர் இடத்தே தங்கி வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்ப' எனவும், முறையே வரும் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் பகுதிகளை நமக்கு நினைப்பிக்கின்றது.

(9) அம்மை பின்னர்ச் சிறிது வளர்ந்து சிற்றில் இழைத்தும், சிறுசோறு அமைத்தும் விளையாடியமை, உயிரானது புறச்சமய நெறிகளில் ஈடுபட்டு உழலுதலை உணர்த்தும்.

(10) பேதைப் பருவம் பெதும்பைப் பருவங்களை அம்மை எய்துதல்; உயிரானது அகப்புறச் சமயத்தும் அகச் சமயத்தும் சார்ந்து வருதலைக் குறிப்பதாகக்கொள்ளப்படும்.

(11) அம்மையார் பன்னிரண்டாம் அகவை நிரம்புதல், உயிரானது பக்குவம் பெற்றுச் சைவச் செந்நெறியைத் தலைப்பட்டு, அவ்வாழ்க்கையினைத் தொடங்குதலை உணர்த்தும்.

(12) காட்டில் எளிதாகத் தற்செயலிற் கிடைத்த ஓர் உயர்ந்த ஒளிமணியைப் பறவை ஒன்று எடுத்துச் சென்று, தன் கூட்டிலுள்ள இருளை ஓட்டுவதற்கு வைத்தாற்போலத் தெய்வநலஞ் சான்ற வள்ளியம்மையை வேடர்கள் தினைப்புனம் காக்க வைத்தார்கள்!

"காட்டில் எளிதுற்ற கடவுள்
மணியைக் கொணர்ந்து,
கூட்டில் இருள் ஓட்டக் குருகு
உய்த்தவாறு அன்றே ?
தீட்டு சுடர்வேற் குமரன்
தேவியாம் தெள்ளமுதைப்
பூட்டு சிலைக்கையர் புனம்
காப்ப வைத்ததுவே"

என்றபடி, அம்மை தினைப்புனம் காக்க முற்பட்டமை, உயிரானது பலவகைப் பசு புண்ணியங்களைச் செய்ய முயலுதலைக் குறிக்கும்.

(13) நாரதர் வள்ளியம்மையைக் கண்டு முருகனுக்குச் சென்று கூறுதலும், வள்ளியை மணம்புரிந்து அருள் செய்க என அவரை வேண்டுதலும், ஆதிசத்தி மலத்தைப் பக்குவப்படுத்தி உயிர்க்கு மல பரிபாக நிலையை முறையே வருவிக்க முற்படுலைத் தெரிவிக்கும்.

(14) முருகன் வேட்டுவ வடிவம்கொண்டு வள்ளியை மணம்புணர வருதல், ஞானசிரியன் மானுட வடிவம் தாங்கித் தனக்கினிய மாணவனை நோக்கித் தலைப்பட வருதலாகும்.

(15) வள்ளியும் முருகனும் உரையாடுங்கால் வேடர்கள் வருதல், ஞானசிரியனைக் கண்டதனால் நன்னெறி தலைப்படப்புகும் உயிரை, 'ஆறுகோடி மாயாசக்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடங்கி' அலைக்க முயலுதல் போல்வதாகும்.

(16) முருகன் வள்ளியின்பாற் பல காதல் மொழிகள் பேசுதல், ஞானசிரியன் முதற் கண் செய்யும் வாசக தீக்கையைக் குறிப்ப தாகும். (வ.தி.ப. 84-88)

(17) முருகன் வள்ளியின் காதலைப்பெற இரப்புரைகள் பல மொழிவது, ஒரு நன் மாணவனைப் பெறுதலில் ஞானசிரியனுக்கு உள்ள அளவிலா ஆர்வத்தினை யுணர்த்து கின்றது.

"மொழியொன்று புகலா யாயின்
முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின்
விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின்
மனமும்சற் றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும்;
பராமுகம் தவிர்தி"

என்று அம்மையின்பால் முருகன் வேண்டு தல் போலவே, ஞானசிரியனும் தன் இனிய மாணவனுக்குப் பரிவுரைகள் கூறிப் 'பரா முகம் தவிர்' என ஞானவுரை பகர்ந்தருள் கின்றான்.

'பராமுகம் தவிர்தி' என்ற ஞானோபதே சம், மாணவனுக்கு 'ஒரு நெறிய மனம் வைத்துணர்' 'இரண்டுற மனம் வையேல்' 'வைத்த உள்ளம் மாற்ற வேண்டா' 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமைக்கு ஊனமில்லை' என்பனபோல வரும் திரு மொழிகளின் பொருளை அறிவுறுத்துவதா கும்.

(18) இனி, வேடர்கள் வருங்கால், முருகன் வேங்கை மரமாகத் தினைப்புனத் தில் நின்றான் என்பது, ஐம்பொறிகள் தன்னை நிலைகலக்க முயலும்போது, ஆட் கொள்ளப் பெற்ற உயிர், வேதாகம சாத் திர நூலறிவால் தன் மனத்தை ஒருவழிப் படுத்தி, நிலையின் நீங்கப்பெறாது உறுதி யாக இருக்கச் செய்ய ஞானசிரியன் முய ற்சி செய்தலைப் புலப்படுத்தும். அடிப்பகுதி வேதங்களாகவும், நடுப்பகுதி சிவாகமங்க ளாகவும், கிளைகள் பலவும் வெவ்வேறுகலை களாகவும் அமைய முருகன் வேங்கை மர மாகி நின்றான் எனக்கூறி,

" ஆங்கது காலை தன்னில்
அடிமுதல் மறைக ளாக
ஓங்கிய நடுவண் எல்லாம்
உயர்சிவ நூல தாகப்
பாங்கமர் கவடு முற்றும்
பல்கலை யாகத் தானோர்
வேங்கையின் உருவ மாகி
வேற்படை வீரன் நின்றான் "

என்னும் பாடலால் கச்சியப்பரும் இக்குறிப் பை விளக்கி யருளி இருத்தல், அறிந்தின் புறற் பால தொன்றாகும்.

(19) இனி முருகன் அம்மையை நோக் கிப் பலவகை விருப்புரைகள் நிகழ்த்த, அம்மை 'இழிகுலமாகிய எயினர் பாவை நான்' எனத் தம்மைக் கூறிக் கொள்ளு தல், கட்டு நிலையில் உயிரானது தன்னைத் தானே அறிந்து கொள்ளாது அறியாமை வயப்பட்டு இருத்தலை விளக்குவதாகும்.

(20) அதுபோது வேடர்கள் மீண்டும் வருதலைக் கண்டுமுருகன் 'நாடு புகழ்சைவ நற்றவ விருத்தவேடம்' கொள்ளுதல், உயிர் புலன்களை அடக்கித் தூயதவ நன் னெறியே சேர்வதற்கு ஞானசிரியன் முயலு தலைக்காட்டும்.

(21) அந்நிலையில் முருகன், குறவர் செம் மலுக்குத் திருநீறு நல்குதல், சிவதீக்கை யிற் செய்யப்படும் முதற்செயலை உணர்த் தும்.

(22) பின்னர் அம்மைமுருகனாகிய முதிய வர்க்குத் தேனோடு கனியும் மாவும் செங் கையாற் கொடுத்தல், ஞானசிரியனுக்கு மாணவன் தன்உடல் பொருள் உயிர்களை ஒப்புவித்து 'ஆத்தும நிவேதனம்' செய்ய முற்படுவதைக் குறிக்கும்.

(23) அதுகாலை, முருகன் வள்ளியை நோக்கி 'ஆகத்தைவருத்துகின்ற அரும் பசி தவிர்த்தாய்! தெண்ணீர்த் தாகத்தை அவித்தாய்! மேகத்தை அனைய கூந்தல் மெல்லியல் வினையேன் கொண்ட மோகத் தைத் தணித்தியாயின் முடிந்தது என் குறை' என்று கூறுதல், 'ஏகபோகமாய்




ஸ்ரீ அகிலாண்டநாயகி, (திருவானைக்கா.)

நீயும் நானுமாய்' என்றபடி, இறைவன் உயிரோடு இரண்டறக் கலந்து நிற்க விரும் பும் பேரருள் நிலையைக் குறிப்பிற் புலப் படுத்துகின்றது.

(24) அம்மை அதனைக்கேட்டு, முதிய வராக வந்த முருகனைக் கடிந்து சினந்து பழித்துப் பேசுதல், ஆன்மா தன்னையும் அறியாது உலகியலில் உழலுதலைக் குறிக் கின்றது; "போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்" வாசனை மலத்தினால் உயிர் தாக்குறுதலை உணர்த்து கின்றது எனக் கொள்ளினுமாம்.

(25) முருகன் விநாயகக் கடவுளைத் துதித்து யானையாக வரச் செய்தல், தற் போத முனைப்புக்கெட ஞானாசிரியன் உயி ருக்குப் பிரணவ மந்திரோபதேசம் செய் தலாகும். பிரணவ மந்திர உபதேசம் செய்ய உயிர்க்குத் தற்போதம் அடங்கும். அப்பொழுது உயிர் எல்லாம் திருவருளின் செயலே தன்செயலன்று எனத் தெளிந்து கொள்ளும்; தெளிந்தால் உயிர் கடவுளை முன்னிட்டுத் தான் அவரில் அடங்கும், ஆணவமலத்தினின்று தப்பி உய்யும். இக் கருத்தையே,

*அன்னதொரு காலை*
*அறுமா முகக்கடவுள்*
*முன்னொருசார் வந்து*
*முதுகளிற்றின் கோடுஒற்றப்,*
*பின்னொருசார் வந்து*
*பிடியின் மருப்புஊன்ற*
*இந்நடுவே நின்றான்*
*எறும்வயிரத் தூணேபோல்*

என்னும் பாடலால் கச்சியப்பர் குறிப்பிட்டு ஒருவகையில் விளக்குதல் காணலாம்

(26) பின்னர் அம்மைக்கு முருகன் காட்சி தருதல், உயிர் எய்தப் பெறும் 'சிவதரிசன' நிலையை விளக்கும். ஆண்டு அம்மைக்குத் தோழியாகக் கூறப்படுபவள், இறைவனின் திருவருளேயாம். முருகன் தோழியை இசைவித்தமை, விசேட தீக்கை எனலாம்.

(27) வள்ளியம்மை மீண்டும் தினைப்புனம் காக்கப் போதல், எஞ்சிநின்ற வினையின் பயனை உயிர் துய்த்தொழித்தலைக் குறிக் கும்.

(28) வேடர்கள் வள்ளியை மீட்க முயல் வது, பொறி புலன்களின் இறுதி மயக்க முயற்சியை உணர்த்தும்.

(29) சேவல் கூவுதல், 'அஞ்சல் ஓம்புமதி' என இறைவன் உயிர்க்கு அருளிச் செய் தலைப் புலப்படுத்தும்.

(30) வேடர்கள் மயங்கி விழுதல், உயிரின் மலபந்தங்கள் அற்றொழிதலைக் குறிப்பிக்கும்.

(31) அங்கு நாரதர் வருதல், அதி தீவிர சத்திநிபாதம் பதிதல் ஆகும்.

(33) முருகன் வள்ளியை முறைப்படி மணம்புணர்தல், இறைவன் எளிவந்து உயிர்களை வலிந்து ஆட்கொள்ளும் அருட்டிறனை அறிவிக்கின்றது.

(34) வள்ளியம்மை முருகனை மணந்து இயைந்து நிற்றல், உயிர் மலங்கள் ஒழிந்த நிலையில் இறையருளின்பிற் கலந்தொன்றித் திளைக்கும் சித்தாந்த முத்தி நிலையைக் குறிப்பதாகும்.

(35) வள்ளியம்மையை மணந்து முருகன் தணிகை மலையைச் சார்தல், ஆருயிர்களை ஆட்கொள்ளப் 'புறம்புறமே திரிந்து' இறைவன் தன் கருணை வெள்ளத்து அலை தலையும்; ஆருயிர்களை ஆட்கொண்டு "சேதனலாபம்" பெற்ற பின்னர் இறைவன் "துயர்அறு சுடர்அடி" உடையனாய் ஆறு தலுற்று மனமகிழ்ந்து நிற்றலையும் சுட்டும்.

(36) முருகன் தன் அன்பர்களிடம் அவர்களினும் மிக்க அன்புடையவனாக விளங்குகின்றான்; தன் அடியவர்களின் குற்றங்களையும் குணமாகக்கொண்டு மகிழ்

கின்றான் (3) ; தன் நிலையில் அரியனும் பெரியனுமேயாயினும், முருகன் தன் அடியவர்களுக்கு மிகவும் எளிவந்து அருள் புரிந்து, அவர்களை ஆட்கொள்கின்றான்; தன்னை அடைவதற்கு அடியவர்கள் கொள்ளும் ஆர்வத்தினும், தான் தன் அடியவர்களைச் சேர்வதற்கு மிகவும் விதுவிதுத்துத் துடிக்கும் தண்ணளி மிக்கவனாய், முருகன் திகழ்கின்றான்; என்னும் அரியபல உண்மைகளையே, வள்ளியம்மை திருமண வரலாறு உணர்த்திக் கொண்டுள்ளது.

**முடிவுரை:** முருகப் பெருமான் வள்ளியம்மையை மணம்புணர்ந்து மகிழ்ந்து, தனது ஆற்றாமை தணிந்துசிறந்து விளங்கும் திருத்தணிகை மலையில், அவனை நாம் இன்று வழிபட்டு மகிழும்பேறு பெற்றோம். முருகனை வழிபட்டுத் தம் குறைபலவும் தீர்த்துக் கொள்ளக் கருதிய முப்பத்துமுக் கோடி தேவர்களும், தனியில் காட்சி முனிவர்முற்புகத் திருவாவினன் குடிக்குச் சென்று வழிபடுவதாக நக்கீரர் நவில்கின்கின்றார். அம்முறையில் நாமும், 'தனியில் காட்சி முனிவர்' ஆகிய நமது தம்பிரான் சுவாமிகள் அவர்களுடன், அவர்களை முன்னிட்டுப் பின்னின்று முருகனை வழிபடும் வாய்ப்பு, இன்று நம்மெல்லோருக்கும் வாய்த்தது. வள்ளியை மணந்து மகிழ்ந்து, தன் ஆற்றாமைதணிந்துதணிகையில்எழுந்தருளி விளங்கும் முருகப்பெருமானை, நாம் நம் மனமொழி மெய்களினால் அன்புடன் வழிபட்டு, நம் துன்ப வெம்மைகளெல்லாம் தணிந்து, நலம்பலவும் பெற்றுஉய்வோமாக.

—ஆசிரியர்.

(3) Christ, through some divine instinct in him, seems to have loved that sinner as being the nearest possible approach to perfection in man... In a manner not yet understood of the world, he regards sin and suffering as being in themselves beautiful, holy things and modes of perfection.''

—Oscar Wilde,
De Profundis.

திணியான மனோ சிலைமீ துனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புதோ ?
பணியா என வள்ளி பதம்பணியும்
தணி யா அதிமோக தயாபரனே!

—கந்தர் அநுபூதி



இராமேசுவரம் ஸ்ரீ இராமநாத சுவாமி கோயிலாரால் கட்டப்பெற்றுள்ள
"விவேகானந்தர் இல்லம்"

# திருவள்ளுவம்

**(29) கள்ளாமை :** (1) பிறரால் ஏளனம் செய்யப்படாதிருத்தலை விரும்புகின்றவன் என்பவன், யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கவர்ந்து கொள்ளக் கருதாதபடி தன் நெஞ்சத்தினைத் தடுத்துக் காப்பாற்றுக. (2) குற்றங்களைச் செய்வது மட்டுமேயன்றி, நெஞ்சால் நினைத்தாலும் குற்றமேயாகும். ஆதலால் பிறனொருவனுடைய பொருளை அவன் அறியாதபடி வஞ்சகத்தால் கவர்ந்து கொள்ளுவேன் என்று கருதற்க. (3) களவு செய்தலால் உளதாகிய பொருள், வளர்வதுபோலத் தோன்றிப் பாவத்தையும் பழியையும் விளைவித்துத் தன் எல்லையைக் கடந்து அறவே அழிந்தொழியும். (4) பிறர்பொருளை வஞ்சித்துக் கொள்ளுதலில் மிக்குள்ள விருப்பம் அங்நேரத்திற்கு இனியதுபோலத் தோன்றினும், பயன்தரும் நிலையில், தொலையாத துன்பத்தைக் கொடுக்கும். (5) அருளினது சிறப்பை அறிந்து அன்புடையராய் ஒழுகுதல், பிறர் பொருளை விரும்பி அவர்கள் ஏமாறும் நிலையை எதிர்பார்த்திருப்பவர்கள்பால் உண்டாகாது. (6) களவு செய்தலின்கண் மிக்க வேட்கையை உடையவர், நன்மை தீமைகளை அளத்தலாகிய நெறியின்கண் நின்று, அதற்கு ஏற்ப ஒழுக முடியாதவர் ஆவர். (7) களவு என்கின்ற இருண்ட அறிவினை உடையராதல், நன்மை தீமைகளை அளந்தறிந்து ஒழுகுதல் என்னும் பெருமையை விரும்பியவர்கள்பால் இல்லை. (8) அளவறிந்து ஒழுகுபவர்களின் நெஞ்சத்தில் அறம் நிலைபெற்றாற்போலக் களவையே பயின்றவர்களின் நெஞ்சத்தில் வஞ்சனை நிலைபெறும். (6) களவு அல்லாத பிறவற்றை அறியாதவர் அளவு அல்லாத தீயநினைவுகளை நினைத்து அப்பொழுதே கெடுவர். (10) களவினைப் பயில்வார்க்கு உடம்பும் தவறும். களவை மனத்தாலும் நினையாதவர்க்குத் தேவருலகமும் தவறாமற் கிடைக்கும்.

**(30) வாய்மை :** (1) வாய்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாது என்றால், அது பிறிது ஓர் உயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல். (2) பிறர்க்குக் குற்றத்தின் நீங்கிய நன்மையை விளைவிக்கும் என்றால், பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் தன்மை உடையனவாகும். (3) ஒருவன் தன்நெஞ்சம் தவறென்று அறிவதனைப் பிறர் கண்டிலர் என்று நினைத்துச் செய்து, பொய்த்து விடாமல் இருப்பானாகை. பொய்த்தானாகில் அவனை அவனுடைய நெஞ்சமே பெரிதும் வருத்தும். (4) ஒருவன் தன் மனச்சான்றின்படி பொய்யாமல் ஒழுகுவானாகில், அவன் உயர்ந்தோர் உள்ளத்தின்கண் எல்லாம் உளனாய் இடம் பெறுவான். (5) ஒருவன் தன் மனச்சான்றினோடு பொருந்தும்படி உண்மையையே பேசுவானாகில் அவன் தவமும் தானமும் ஒருங்கு செய்வாரினும் சிறப்பு உடையவன் ஆவான். (6) ஒருவனுக்கு இம்மையில் பொய்ம்மையைப் போன்ற புகழ்க்காரணம் இல்லை. பொய்யாமையானது, மறுமையில் மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையும் தானே கொடுக்கும். (7) ஒருவன் பொய்யாமையாகிய அறத்தைப் பொய்யாதபடி செய்துவர வல்லவனாயின், அஃது ஒன்றே அவனுக்குப் பல நலங்களையும் தரும். ஆதலின், வேறுபிற அறங்களை

மேற்கொண்டு செய்யாமலிருத்தலும் ஒரு வகையில் நல்லது. (8) ஒருவனுக்கு உடம்பு தூயதாம் தன்மை நீரால் உண்டாகும், அதுபோல மனம் தூயதாகும் தன்மை வாய்மையால் உண்டாகும். (9) புற இருளை நீக்குகின்ற விளக்குகளெல்லாம் விளக்குகள் ஆக மாட்டா; சான்றோர்களுக்கு மனஇருளைக் கடிகின்ற பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும். (10) யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கு நல்லனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்கள் எதுவும் இல்லை.

(31) வெகுளாமை : (1) தன்சினம் செல்லுபடி ஆகின்ற இடத்தில் அதனை எழாமல் தடுப்பவனே, அருளால் தடுப்பவனுவான். செல்லுபடி ஆகாத இடத்தில் சினத்தைத் தடுத்தாலென் தடாது ஒழிந்தாலென்? (2) செல்லுபடி ஆகாத இடத்தில் சினம் கொள்ளுதல் தீங்கு பயக்கும். செல்லுபடிஆகின்ற இடத்திலும் சினங்கொள்ளுதலைப்போன்று தீங்கு விளைவிக்கும் செயல்கள் பிற எதுவும் இல்லை. (3) ஒருவர்க்குத் தீயனஎல்லாம் நேர்வது வெகுளியினுலேயே ஆகும். ஆதலின் எவரிடத்தும் வெகுளி கொள்ளுதலை மறந்துவிடுக. (4) ஒருவர்க்கு இன்பத்தின் மிகுதியால் முகத்தின்கண் நிகழும் மலர்ச்சியையும் அகத்தின்கண் நிகழும்மகிழ்ச்சியையும், கொன்று எழுகின்ற சினத்தினும் கொடிய பிறவாய பகைகளும் உளவோ ! (5) ஒருவன் தன்னைத்தான் துன்பம் எய்தாமல் காத்துக்கொள்ள நினைத்தானுயின், தன் மனத்தில் சினம் வராமல் தடுத்துக்கொள்வானுக; தடுக்காதவழி அச்சினமானது அவனையே அழித்துவிடுகின்ற கடும் துன்பங்களை உண்டாக்கிவிடும். (6)நெருப்புதான்சேர்ந்த இடத்தைக் கொல்லும் தன்மையது; சினம்என்பதும் ஒருவகை நெருப்பு ஆகும். அது தனக்கு இடமானவரையே அன்றி, அவர்க்கு இனமாகிய இன்பத்தெப்பம் போன்ற உறவினரையும் சுட்டு வருத்தி அழிக்கும். (7) சினத்தைத் தன் ஆற்றல் உணர்த்துவதோர் குணம் என்று கைக்கொண்டவன் கேடு அடைதல், நிலத்தின்கண் அறைந்தவனின்கையானது அந்நிலத்தை உறுதல் தவருதவாறுபோலத் தவருது. (8) பலசுடரை உடைய பெரிய நெருப்புவந்து தோய்ந்தாற்போலத் துன்பங்களை ஒருவன் செய்தானுயினும், அவனை வெகுளாதிருத்தல் ஒருவனுக்குஇயலுமாயின், அதுமிகவும்நல்லது. (9) ஒருவன் மனத்தாலும் வெகுளியை ஒருகாலும் நினைக்கமாட்டான் என்ருல், அவன் தான்கருதிய நன்மைகளையெல்லாம் ஒருங்கே அடைவான். (10) சினத்தில் மிக்கவர் உயிருடையவராயினும் செத்தவர்க்கே ஒப்பாவார். சினத்தைத் துறந்தவர் சாதல் தன்மையராயினும், சாதலை ஒழிந்து வீடுபெற்ருர் அளவினர் ஆவர்.

(32) இன்னுசெய்யாமை : (1) யோகம் ஆகிய சிறப்பைத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பெறுவதாயினும், பிறருக்குத் துன்பம் செய்யாதிருத்தல் குற்றமற்ற பெரியோர்களது துணிவு. (2) தன்மீது கறுவுகொண்டு ஒருவன் துன்பங்களைச் செய்த இடத்தும், திரும்பத் தாம் அவனுக்கு இன்னுதவற்றைச் செய்யாமை குற்றமற்ருேரின் துணிவாகும். (3) தான் ஒரு துன்பமும் செய்யாமல் இருக்கத் தன் மேற்செற்றம் கொண்டவர்க்கும் ஒருவன் துன்பம் செய்தலாகாது. செய்யின், அது கடக்கமுடியாத பெருந்துன்பத்தை விளைவிக்கும். (4) தமக்குத் துன்பம் செய்தவரைத் தண்டித்தலாவது, அவர்தாமே நாணம்அடையும்படி அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து, அவர் செய்த துன்பம், தான்செய்த இனியஉவகை ஆகிய இரண்டினையும் மறந்துவிடுதல். (5) பிறிது ஓர் உயிர்க்கு வரும் துன்பத்தினைத் தம் உயிர்க்கு வந்த துன்பம் போலக் குறிக்கொண்டு காவாதஇடத்து ஒருவர்க்குத் தம் அறிவினுல் ஆகக் கூடிய பயன் எதுவும் இல்லை. (6) துன்பம் என்று தான் அறிந்தவற்றை, ஒருவன் பிறரிடம் சிறிதும் செய்யாமல் இருத்தல் வேண்டும். (7) மனம் அறிந்து செய்கின்ற துன்பங்களை எக்காலத்தும் யாவர்க்கும் சிறிதாயினும் செய்யாமையே தலையாய அறமாகும். (8) தன்னுடைய உயிர்க்குப் பிறர்செய்யும் துன்பத்தின் தன்மையினைத் தான் உணர்கின்றவன், நிலைபே

றுடைய பிற உயிர்கட்குத் துன்பங்களைச் செய்தல் எற்றுக்கு? (9) ஒருவர் பிறருக்கு ஒருபகலின் முற்பகுதியில் துன்பங்களைச் செய்தால், அவருக்குத் துன்பங்கள் அப் பகலின் பிற்பகுதியில் தாமாகவே உண்டாகும். (10) துன்பங்கள் எல்லாம், பிற உயிர்க்குத் துன்பம் செய்தவர்கள் மேலேயே வரும். ஆதலால் தமக்குத் துன்பம் வராமல் இருத்தலை விரும்புகின்றவர்கள், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யமாட்டார்கள்.

**(33) கொல்லாமை :** (1) அறங்கள் எல்லாமாகிய செய்கை யாது என்று வினவின், அஃது ஓர் உயிரையும் கொல்லாமை யாம்; அவற்றைக் கொல்லுதல் பாவச் செய்கைகள் எல்லாவற்றையும் விளைவிக்கும் ஆதலால். (2) கிடைத்ததனைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணுதலும், உயிர்கள் பலவற்றையும் பாதுகாத்தலும், அறநூலார் சிறந்தன என்று தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறம் ஆகும். (3) அறங்களுள் ஒப்பற்றதாக விளங்கும் நல்ல அறம், கொல்லாமை. பொய்யாமையானது அதன் பின்னே அதனை அடுத்து நிற்க நல்லது (4) இம்மை மறுமை வீடுபேறுகட்கு நல்லநெறி என்று சொல்லப்படுவது யாது என்று வினவின், அஃது யாது ஓர் உயிரையும்கொல்லாமை யாகிய அறத்தினைக்காக்கக் கருதும் நெறி. (5) பிறவியின் நிலைக்கு அஞ்சித் துறந்தவர் எல்லாருள்ளும், கொலைப்பாவத்திற்கு அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாமற் பாதுகாப்பவனே உயர்ந்தவன். (6) கொல்லாமையை நோன்பாகக் கடைப்பிடித்து நடப்பவனது வாழ்நாளின்மேல், பிறர் உயிரைக் கவர்ந்துசெல்லும் இயல்பினையுடைய கூற்றுவன் செல்லமாட்டான். (7) தன்னுடைய உயிர் உடலினின்று நீங்குவதாக இருப்பினும் ஒருவன் பிறிது ஒன்றின் இனிய உயிரை நீக்குகின்ற தொழிலைச் செய்யாமல் இருப்பான் ஆகுக! (8) இன்பம் மிகும் செல்வம் பெரிதாக உண்டாகும்என்றாலும், சால்புடையவர்க்கு ஓர் உயிரைக் கொல்வதனால் வரும் செல்வம், மிகவும் இழிவுடையதாகும். (9) கொலைசெய்யும் தொழிலினர் ஆகிய, மனவுணர்ச்சி யில்லாத மாந்தர், அத்தொழிலின் இழிவை அறிந்தவர்களின் உள்ளத்தில், மிகவும் இழிந்த தொழிலினரேயாவர். (10) இப்பொழுது நோக்கலாகா நோயுடம்புடன், வறுமை கூர்ந்த, இழிதொழில் வாழ்க்கையுடையவராக இருப்போரை, இவர்கள் முற்பிறப்பில் உயிர்களை அவற்றின் உடம்பினின்று நீக்கிப் பாவம் செய்தவர்கள் என்று, அறிவுடையோர் சொல்லுவர்.

**(34) நிலையாமை :** (1) நிலைக்கும் தன்மை இல்லாத பொருள்களை, நிலைக்கும் தன்மையுடையன என்று கருதுகின்ற புல்லிய அறிவினையுடையராதல், மிகவும் இழிவாகும். (2) ஒருவனிடம் பெரிய செல்வம் திரளுதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கண் காண்போர் குழாம் சிறுகச் சிறுக வந்தாற் போலும் ; அச்செல்வத்தின் அழிவும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் ஒருசேர விரைந்து போயினாற் போலும். (3) நிலையாத இயல்பினையுடையது செல்வம்; அதனைப் பெற்றால் நிலைபெறுவனவாகிய அறச்செயல்களை அப்பொழுதே செய்க. (4) நாள் என்பது, இன்பம் தருவதாகிய ஒருபொருள் போல நம்மை மயக்கி, நம்முடைய உயிரை ஈர்ந்து செல்லும் ஆதலின், அதன்தன்மையினை உணர்வாரைப்பெற்றால் அது நாள் எனப்படாமல், நம்வாழ்வையறுக்கும் வாள் எனவேபடும். (5) பேசமுடியாதபடி நாக்கை இழுத்து விக்கல் மேலிட்டு வந்து இறப்புநேர்வதற்கு முன்னரே, வீடுபேற்றிற்கு ஏதுவாகிய நல்ல அறச்செயல்களை மிகவும் விரைந்து செய்தல் வேண்டும். (6) நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லையாயினான் என்று சொல்லும் நிலையாமை மிகுதியையுடையது, இவ்வுலகம். (7) அடுத்த ஒரு கணநேரமேனும் தாம் வாழ்வது உறுதியா என்பதனை அறிந்து கொள்ள இயலாதவர்கள் எனினும், கோடிக் கணக்கில் அன்றி அதற்கும்மேற் பலவாய நினைவுகளை அறிவில்லாத மக்கள் எண்ணிக் கொண்டிருப்பர். (8) உடம்பிற்கும் உயிருக்கும் உளதாகிய தொடர்பு, தான்இருந்த கூடு தனிமையடைந்துகிடப்ப, அதனுள் இருந்த பறவை பருவம் வந்துழிப் பறந்துசென்ற தன்மையைப் போன்றது. (9) ஒருவனுக்கு இறப்பு ஏற்படுதல், உறக்கம் வருவதைப்

போன்று இயல்பானதாகும்; பிறப்பு உண்டாதல், உறக்கத்தின் பின் வரும் விழிப்பை ஒக்கும். (10) நெடுங்காலமாக உடம்பின் உள்ளே ஓர் ஒதுக்கிடத்தில் இருந்துவரும் உயிருக்கு, எஞ்ஞான்றும் நிலை பெற்றிருப்பதாகிய ஒரு நல்ல இல்லம், இதுகாறும் அமைந்ததில்லை போலும்!

**(35) துறவு :** (1) ஒருவன் எதனிலிருந்து எதனிலிருந்து நீங்கப் பெற்றுன், அவன் அதனுல் அதனுல் துன்பம் அடைதல் இல்லாதவன் ஆவான். (2) ஒருவன் இன்பத்தை விரும்பினுல்காலம் இருக்கும் போதே பற்றுக்களைத் துறக்க; துறந்தால், அவனுக்கு இம்மையிலேயே உண்டாகும் தன்மையையுடைய இன்பங்கள் மிகப்பலவாகும். (3) ஐம்பொறிகளுக்கு உரிய ஐந்து புலன்களின் அவாவையும், வெற்றிகொள்ளுதல் வேண்டும்; அதற்காக முன்பு விரும்பித் தொகுத்த பொருள்கள் எல்லாவற்றையும் ஒருங்கே விட்டொழித்தல் வேண்டும்; (4) பற்றப்படுவதொரு பொருளும் இல்லாமை, தவம்செய்வார்க்கு உரிய இலக்கணம் ஆகும்; ஒருபொருளையேனும் உடையராதல், தவவுணர்வைப் போக்கி மீண்டும் மயக்கம் விளைத்தற்கு ஏதுவாகும். (5) பிறப்பை அறுக்கும் முயற்சியை மேற்கொண்டோர்க்குத் தம்உடம்பும் ஒரு சுமையாகும். அங்ஙனமாயின் அதற்கு மேலும் வேறுபல தொடர்ப்பாடுகள் கொள்ளுதல் எதன் பொருட்டு? (6) யான் எனது என்கின்ற மயக்கவுணர்வை நீக்கிக் கொள்பவன், தேவர்க்கும் கிடைத்தற்கரிய மேலான வீட்டுலகத்தை அடைவான். (7) யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் இறுகப் பற்றிக்கொண்டு விடாமல் இருப்பவரைத் துன்பங்கள் இறுகப் பற்றிக் கொண்டு விடவே மாட்டா. (8) முற்றுகப் பற்றுக்களை விட்டொழித்தவர்கள், வீடுபேற்றை அடைந்து நின்ருர்கள்; அங்ஙனம் அறவே துறவாத மற்றவர்கள், உலகியலில் மயங்கிப் பிறவியாகிய வலையுள் அகப்பட்டுக் கொண்டார்கள். (9) இருவகைப் பற்றும் அற்றபொழுதே, அங்நிலை ஒருவனுக்குப் பிறவித்துன்பத்தை அழிக்கும்; பற்றுக்கள் அற்றிலவாயின், ஒரு நிலையில் நில்லாமையாகிய பிறப்பு இறப்புத் துன்பங்களை அடைந்து வருந்த நேரிடும். (10) எல்லாப் பொருள்களையும்பற்றிநின்றே பற்றற்றவன் ஆகிய இறைவனின் பற்றினைப் பற்றிக் கொள்; பிற பற்றுக்களை எல்லாம் விடுவதற்கு, அவ்விறைவனின் பற்றை மட்டுமே உறுதியாகப் பற்றிக்கொள்ளுக.

**(36) மெய்யுணர்தல் :** (1) மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று கருதிக்கொள்ளும் திரிபு உணர்ச்சியினுல், மாண்பில்லாத இழிபிறப்புத்துன்பங்கள் உளவாகும். (2) அறியாமையின் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வு பெற்றவர்க்கு அம்மெய்யுணர்வு இருளுலகை நீக்கி இன்பவுலகைக் கொடுக்கும். (3) ஐயத்தினின்று விடுபட்டுத் தெளிவு பெற்றவர்க்கு, இந்நிலவுலகத்தினும் வீட்டுலகம் அருகில் உள்ளது. (4) ஐந்தாகிய புலனுணர்வு தம் வயப்பட்டு அடங்கி நிற்பினும், மெய்ப்பொருளை உணராதவர்க்குப் பயன் எதுவும்இல்லை. (5) எந்தப் பொருள் எந்த இயல்பை உடையதாக இருப்பினும் அந்தப் பொருளில் மெய்யாகிய பொருளைக்காண்பதே மெய்யுணர்வு ஆகும். (6) இம்மக்கட் பிறப்பில் ஞானுசிரியனின் அருளுரையைக் கேட்டுச் சிந்தித்து அதனுல் மெய்ப்பொருளை யுணர்ந்தவர் பின்னர் இப்பிறப்பின்கண் வாராத நெறியை அடைவர். (7) ஒருவனின் உள்ளம் ஞானுசிரியனின் அருளுரையினைத் தெளிய ஆராய்ந்து என்றும் உள்ளது ஆகியமுதற்பொருளை உணர்ந்து கொண்டால் அவனுக்கு மீண்டும் பிறப்பு உண்டென்று நினைக்க வேண்டுவதில்லை. (8) பிறப்பிற்குக் காரணமாகிய அறியாமை நீங்கும்படி வீட்டிற்குக் காரணமாகிய செம்மையான பொருளைக் காண்பதே மெய்யுணர்வு ஆகும். (9) எல்லாப் பொருட்கும் சார்பு இடமாக உள்ள செம்பொருளை உணர்ந்து, சார்ந்துள்ள பற்றுக்கள் அழியும்படி, யோக நெறியில்

ஒழுகினுல், சார உள்ள துன்பங்கள் நம்மைச் சாரமாட்டா. (10) விழைவு வெறுப்பு அறியாமை என்னும் இக்குற்றங்கள் மூன்றினுடைய பெயருங்கூட இல்லாமல் அழிந்தால், அவற்றின் விளைவான துன்பங்கள் அழிந்தொழியும்.

**(37) அவாவறுத்தல் :** (1) எல்லா உயிர்கட்கும் எக்காலத்தும் தவருமல் வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து, அவாவே என்று நூலோர் கூறுவர். (2) ஒன்றை விரும்புவதாயின் பிறவாதிருத்தலை விரும்புக; அப்பிறவாமையானது ஒரு பொருளையும் விரும்பாமையைவிரும்பினுல், தானே உண்டாகும். (3) ஒருபொருளையும் விரும்பாமையைப் போன்ற மேலான செல்வம் இவ்வுலகத்தில் இல்லை; மேலுலகத்திலும் அதற்கு நிகரான செல்வம் எதுவும் இல்லை. (4) ஒருவனுக்குத் தூய்மை எனப்படுவது மனத்தில் அவா இல்லாமை; அவ் அவா இல்லாமையானது உண்மையை விரும்பினுல், தானே உண்டாகும். (5) பிறவியற்ருேர் எனப்படுவோர் அவா அற்றவர்களே; பிற குற்றங்கள் அற்றும், அவா அருதவர்கள் அவர்போற் பிறவியற்றவர் ஆகார். (6) ஒருவனை வஞ்சித்துக் கெடுக்கவல்லது அவா. அவாவினை அஞ்சி நீக்கிக் கொள்வதே அறம். (7) அவாவினை முற்ருக நீக்கிக் கொண்டால், கெடாமைக்கு ஏதுவாகிய செயல்கள், ஒருவன் விரும்பும் முறைக்கேற்ப எளிதிற் கைகூடும். (8) அவா நீங்கியவர்க்குத் துன்பம் இல்லையாதும். அவா இருக்குமாயின் எல்லாத் துன்பங்களும் முடிவின்றி மேன்மேற் பெருகிக் கொண்டே நிற்கும். (9) அவா எனப்படும் பெரியதுன்பம் நீங்குமாயின், இவ்வுலகினும்கூட, இன்பம் இடையருது பெருகும். (10) ஒருகாலும் நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்கி விட்டால், அஃது அவனுக்கு அப்பொழுதே என்றும் மாருத பேரின்பத்தைக் கொடுக்கும்.

**(38) ஊழ் :** கைப்பொருள் ஆவதற்குக் காரணமாகிய ஊழால் முயற்சி யுண்டாகும்; அஃது அழிந்துபோதற்குக் காரணமாகிய ஊழால் சோம்பர் உண்டாகும். (2) கைப்பொருளை இழப்பதற்குக் காரணமாகிய தீய ஊழ் வந்து சேர்ந்தால், அஃது ஒருவனை அறிவில்லாதவனுகச் செய்யும்; கைப்பொருள் ஆதற்குக் காரணமாகிய நல்ல ஊழ் வந்து சேர்ந்தால் அஃது ஒருவனது அறிவை வீரிவாக்கும். (3) நுண்ணிய பொருள்களை யுணர்த்தும் நூல்கள் பலவற்றைக் கற்ருலும் பின்னும் தன் ஊழான் ஆகிய இயல்பான அறிவே மேற்பட்டு நிற்கும். (4) உலகத்தின் இயல்பான தன்மை இரண்டு வேறு வகைப்படும்; செல்வமுடையராதல் வேறு, அறிவுடையவராதல் வேறு. (5) செல்வத்தைச் சேர்ப்பதற்கு ஊழால் நல்லவை எல்லாம் தீயனவாய் மாறும்; தீயவை யெல்லாம் நல்லனவாக மாறும். (6) வருந்திக் காப்பாற்றினுலும், ஊழால் உரியன அல்லாத பொருளகள் நிற்கமாட்டா; ஊழால் தம்முடையன ஆகியபொருள்களை, ஒருவர் வெளியே கொண்டுபோய்த் தள்ளினுலும் அவை அவரைவிட்டுப்போகமாட்டா. (7) கோடிக்கணக்கான நுகர்பொருள்களைச் சேர்த்து வைத்திருப்போர்க்கும், தெய்வம் வகுத்துவைத்த படியே யலலாமல், தாம் விரும்பியபடி நுகர முடியாது. (8) ஊழானது அடைவதற்குரிய துன்பங்களைச் செய்யாமல் விடும் என்ருல், நுகரப்படும் பொருள்களைப் பெருதவர்கள் துறவிகளாகியிருப்பர். (9) நல்வினை விளையுங்கால் இன்பங்களை நல்லவை என்று இயைந்து அனுபவிப்போர், தீவினை விளையுங்கால் துனபங்களையும் அவ்வாறு அநுபவியாமல் அவற்றைப் போக்கிக் கொள்ள முயன்று துயரப்படுவது எற்றுக்கு? (10) ஊழ் போல மிக்க வலிமையுடையன யாவையுள ? அதனை விலக்கிக் கொள்ள அதற்கு மறுதலைப்பட்ட ஒரு சூழ்ச்சியைச் செய்தாலும், அவ்வூழே முற்பட்டு நிற்கும்.

(அறத்துப்பால் முற்றும்)

—ஆசிரியர்.

# அபிராமி அந்தாதி

(மூலம் உரையும்)

நாயேனையும்இங்கு ஒருபொருள் ஆக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்; நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்; என்ன பேறுபெற்றேன் !
தாயே மலைமகளே செங்கண்மால் திருத் தங்கைச்சியே

(பொழிப்புரை) உலகுயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்குபவளே ! இமயமலை அரசனின் மகளாகத் தோன்றியவளே ! சிவந்த கண்களையுடைய திருமாலின் சிறந்த தங்கையே ! மிகவும் இழிந்த நாய்போன்ற என்னையும், இங்கே ஒருபொருளாக விரும்பி வந்து, நீயே நினைவு இல்லாமல் ஆளாகக் கொண்டுவிட்டாய். நின்னைப் பேய்போன்ற யான் உள்ளபடி அறிந்து கொள்கின்ற அறிவையும் அளித்தாய். எத்தகைய சிறந்த பேற்றை, யானும் பெற்று விட்டேன் !

(குறிப்புரை) அம்பிகையின் பெருமை கூறுவார், அவளை 'உலகுக்குத் தாய்' 'மலைக்கு மகள்' 'திருமாலுக்குத் தங்கை' எனப் புகழ்ந்து கூறினர். 'ஒன்றாய் அரும்பிப் பலவாய்விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்றவள்' (56) ஆதலின், இங்ஙனம் புகழ்ந்து போற்றினர். மலைக்கு மகள் என்றும், மாலுக்குத் தங்கை என்றும் கூறியவர், இன்னாருக்குத் தாய் என விதந்து கூறிற்றிலர் ; அனைத்துயிர்க்கு மட்டுமே யன்றி, மாலுக்கும் மலையரையனுக்கும்கூட, அவளே தாயாக விளங்கும் சிறப்பினளாதல் கருதி.

மிக இழிந்தவன் என்று தம்மைக் குறித்துக்கொள்ள 'நாயேன்' என்றார். 'புண்ணியர் எண்ணிலர் போற்றுவர்' (97) இருப்ப, அவ்வுயர்ந்தவர்களோடு இழிந்த என்னையும் சேர்த்து ஆண்டு கொண்டனையே என்பார் 'நாயேனையும்' என்றார். இஃது இறந்தது தழுவிய எச்சவும்மை; இழிவு சிறப்பும்மை எனினும் ஆம். 'வான்பழித்து இம்மண் புகுந்து' ஆண்டு கொண்டதனால் 'இங்கு வந்து' என்றார். தமது தகுதியின்மை கருதி அஃறிணை உடைமைகளுள் ஒன்றாகத் தம்மை வைத்து 'ஒரு பொருளாக' என்றார். வெறுத்து ஒதுக்கத்தக்க தம்மை ஆண்டுகொண்ட அருட்டிறனை 'நயந்து' என்ற சொல்லால் வியந்தார், மருள்நெறியிலேயே பயின்று கிடந்த தம்மை, அம்பிகை தானே தனது அருளால் வாவா என்று வலித்து ஈர்த்து அருள் புரிந்ததனாலும், தமது குற்றங்களையே குணமாகக் கொண்டு தண்ணளி சுரந்ததனாலும், 'நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய்' என்றார். இனி ஒருகாலும் விலக்க இயலா வகையில் முழுவதாக ஏற்றருளிய திறம்பற்றி 'ஆண்டாய்' என்னாது 'ஆண்டுகொண்டாய்' என்றார். 'நின்னை' என்றது அறிதற்கரிய நின்னை என்னும் குறிப்பினது. அலைந்துழலும் இயல்புடைமை பற்றிப் 'பேயேன்' என்றார். 'உள்ளவா காண வந்தருளாய்' என அன்பர் பலரும் இரந்து வேண்டும் பேறு, தமக்கு எளிதாகக் கிடைக்குமாறு செய்தமையின் 'உள்ள வண்ணம் அறியும் அறிவு தந்தாய்' என்று போற்றினர். இத்தகைய சிறந்தபேறு, பிறர்க்கு எளிதிற் கிடைப்பதொன்றன்று ஆதலின், அப்பெருமிதம் தோன்ற 'என்ன பேறுபெற்றேன்' என வியந்து மகிழ்ந்தார்.

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும்; எப் போதும்என் சிந்தையதே

(பொழிப்புரை) மேரு மலையாகிய பொன்வில்லைக் கொண்டு, அசுரர்களுக்குரிய மும் மதில்களையும் அழித்து, மதம் பொருந்திய வெம்மையான கண்களையுடைய யானையின் தோலைப் போர்த்துக்கொண்ட, சிறந்த பெரு வீரனாகிய சிவபெருமானின் திருமேனி முழுவதும், குரும்பையைப் போன்ற தனது கொங்கைகளின் அடையாளத்தைப் பதித்த நாயகியாகிய அபிராமி அம்மையின், தாமரை மலர்போன்ற சிவந்த கைகளில் உள்ள கரும்புவில்லும் மலர் அம்புகளும், எக்காலத்திலும் என் மனத்தின்கண் இருப்பனவாகும்.

(குறிப்புரை) இறைவன்பொன்மலையாகிய மேருவையே வில்லாக வளைத்தமையின், அதனைத்'தங்கச்சிலை' என்று சிறப்பித்தார். சேவகம் —வீரம். தன்னைப் புகலடைந்த நல்லோரைக் காத்தற்காகத் தீயவரை வென்று அடக்கிய இறைவனின் வீரம் 'செஞ்சேவகம்' எனப் புகழ்ந்தோதப் பெற்றது. "அத்தர் சித்தம் எல்லாம் குழைக்கும் களபக் குவிமுலை யாமளை" (33), "கொங்கைமலை கொண்டு இறைவர் வலிய நெஞ்சை நடம் கொள்பவள்" (42) ஆதலின், "சேவகன் மெய் அடையக் கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி" என்றார். சிவபிரான் ஆகிய வீரனைத் தோல்வியுறுவித்ததும், அதற்குஅடையாளமாகக் குறியிட்டதும் ஆகிய பெருஞ்செயல் புரிந்தமை பற்றி 'நாயகி' என்று அம்பிகையை வியந்து புகழ்ந்தார். உலகில் இல்லறவாழ்வும் இன்பநுகர்ச்சியும் நடைபெறுதற் பொருட்டு, அம்பிகை இங்ஙனம் அருள் விளையாடல் புரிவாள் என்பதுணர்க. நின் திருவுருவினை என்றும் மறவாமல் மனத்திடை வைத்துப் போற்றுவேன் என்னும் கருத்தில், "கோகனகச் செங்கைக் கரும்பும் மலரும் எப் போதும் என்சிந்தையதே" என்றார். கோகனகம்—தாமரை. அடைய-முழுவதும். மெய்-திருமேனி. குறி-அடையாளம். (62)

தேறும் படிசில ஏதுவும் காட்டி, முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றிற் கொட்டும் தறி; குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்;
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே

(பொழிப்புரை) நூல்கள் குறிப்பிடுகின்ற சமயங்கள் ஆறினுக்கும் உரிய தலைமைத் தெய்வம், அபிராமியம்மை ஆகிய இவளேயாக இருப்பதைக் கல்வி கேள்வி முதலியவற்றால் அறிந்திருந்தும், இவளை அன்றி வேறு ஒரு ஒரு தெய்வத்தைக் கூறும் சமயமும் உண்டு என்று கருதி, அதனைப் பாராட்டிய வீணர்களுக்கு, அவர்கள் உண்மை தெளியும்படி சில காரணங்களை எடுத்துக்காட்டி, அவர்கள் மேலே செல்லும் நன்னெறிக்கு உதவியாக அறிவுறுத்தப்படும் பொருள்கள், மலைப்பாறையில் கொட்டுகின்ற மரத்தூணையே போன்று பயனிலவாகும்.

(குறிப்புரை) தொன்று தொட்டு நூல்களால் அறுவகைத்தெனக் குறிக்கப்படுதலின், 'குறிக்கும் சமயம் ஆறும்' என்றார். 'ஆறுக்கும்' என்பதில் நான்கன் உருபு தொக்கது. 'சமயம் ஆறும் குறிக்கும் தலைவி' என இயைப்பினும் ஆம். 'இவளாய்' என்புழித் தேற்ற ஏகாரம் விரிக்க. அறியாமற் செய்த குற்றத்திலும் அறிந்து செய்யும் குற்றம் பெரிதாகலின் 'அறிந்திருந்தும்' என்றார். 'இனி எண்ணுதற்குச் சமயங்கள் இல்லை" (34) 'அபிராமி சமயமே நன்று' (94) என்று தெரிந்து, அதனையே போற்றிக் கடைப்பிடித்து உய்யாமற் பல்லாற்றுற்

கெடுதலின் 'வீணர்' என்றார். இல்லதனை உள்ளது போலப் பிறழக்கொண்டு மயங்குதலின் "வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய' என்றார். 'கொண்டு+ஆடிய' என இருசொல் லாகவும் பிரிக்கலாம்; இகழ்ச்சிக் குறிப்பு. தெளியாத சிறியவரைத் தெளிவிக்க முற்படுதல் பெரியோர்க்கு இயல்பாகலின், அவர் தெளிவிக்கும் திறம் கூறுவார் 'தேறும்படி சில ஏதுவும் காட்டி' என்றார். பல கூறினாற் கேளார் ஆகலின், 'சில' என்றும்; கூறும் அளவானே புரிந்து கொள்ள வல்லர் அல்லர் ஆகலின், 'காட்டி' என்றும்; தேறும் பேறு உடையவர்க்கு 'ஆப்தவாக் கியம்' என்னும் பெரியோர் அறிவுரையே அமையுமாயினும், இவர் அனையராகாமைபற்றி 'ஏதுவும் காட்டி' என்றும் கூறினார். இங்ஙனம் சில ஏதுவும் காட்டிப் பெரியோர்கள் கூறுதல், அவ்வீணர்களின் நலன் குறித்தே யாகலின், அதனை 'முன் செல்கதிக்குக் கூறும் பொருள்' என்று விதந்தோதினார். என்னகூறி மற்று எங்ஙன் உணர்த்தினும், அஃது அவர்கள் செவியில் நுழையாது என்பார், 'குன்றிற் கொட்டும் தறி' என்றார். குன்றில் மரத்தூணை வைத்துக் கொட்டினால் மரத்தூண் குன்றின் உள்ளே புகாதவாறு போல, இவ்வீணர்களின் செவிகளிலும் பெரியோர்களின் அறிவுரைகள் நுழையா என்பது கருத்து. 'காணாதாற் காட்டுவான் தான் காணான்' என்னும் குறள் இங்குக் கருதற்பாலது. (63)

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன்; உனக்குஅன்பு பூண்டுகொண்டேன்; நின் புகழ்ச்சிஅன்றிப்
பேணேன் ஒருபொழு தும்; திரு மேனிப்ர காசம்அன் றிக்
காணேன் இருநில மும்,திசை நான்கும், ககன மமே!

(பொழிப்புரை) அபிராமி அம்மையே! வீணாக உயிர்ப்பலியை ஏற்றுக்கொள்ளும் புல்லிய சிறுதெய்வங்களிடம் சென்று, அவற்றின்பால் மிகுந்த அன்புகொள்ள மாட்டேன். நினக்கே அன்புசெய்யும் உறுதியை மேற்கொண்டு விட்டேன். ஆதலின், நின்னுடைய புகழைக்கூறும் துதியை அல்லாமல், எக்காலத்திலும் வேறொன்றை விரும்பமாட்டேன். பெரிய உலகிலும், நான்கு திசைகளிலும், வானத்திலும், எங்கும் நின்திருமேனியின் ஒளியையே அல்லாமல்,வேறு எதனையும் காணேன்.

(குறிப்புரை) வழிபடுவோர்க்கு அருள்புரியும் திறனின்றி, அவர் படையலிடும் பொருள் களைமட்டும் விரும்பியுண்டு மகிழும் புல்லிய சிறு தேவதைகள் பல ஆதலின்,அவற்றை 'வீணே பலிகவர் தெய்வங்கள்' என்றார். 'வீணே அன்பு பூணேன்' என இயைப்பினும் ஒக்கும். 'தெய்வம் இகழேல்' என்பது சான்றோர் அருளுரையாதலின், 'அன்பு பூணேன்' என்னாது 'மிக்க அன்பு பூணேன்' என்றார். 'உனக்கே மிக்க அன்பு பூண்டு கொண்டேன்' எனக் கொண்டு கூட்டினும் பொருந்தும். அம்பிகையின் புகழே பொருள் சேர் புகழ் ஆகலின், 'நின் புகழ்ச்சி அன்றிப் பேணேன் ஒரு பொழுதும்' என்றார். அம்மையின் அருள்வாய்க்கப் பெற்றவர்க்கு எங்கும் எதிலும் அவளது திருவுருவத்தின் ஒளிப்பிழம்பே புலனாகித் தோன்று மாதலின், 'திருமேனிப் பிரகாசம் அன்றிக் காணேன்' என்று மகிழ்ந்துரைத்தார். "பரஞானத் தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்" என்பது சிவஞான சித்தியார். பலி-வழிபாடு; உயிர்ப்பலியும் ஆம். ககனம்-மேலுலகம்.

ககனமும் வானும் புவனமும் காண,விற் காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்,செம்
முகனும், முந் நான்கு, இரு மூன்றுஎனத் தோன்றிய, மூதறிவின்
மகனும்உண் டாயதன்றோ? வல்லி! நீ செய்த வல்லபமே

(பொழிப்புரை) அபிராமியம்மை ஆகிய வல்லியே! மேலுலகங்களும், விண்ணுலக மும் மண்ணுலகமும் காணும்படி, வில்லையுடைய மன்மதனின் உடலை முன்பு ஒரு காலத்தில்

எரியும்படி செய்த, தவத்தில் வல்ல தலைவன் ஆகிய சிவபெருமானுக்கு, மிகப்பெரிய திருக்கைகளும், சிவந்த திருமுகங்களும், முறையே பன்னிரண்டும் ஆறும் எனும்படி தோன்றியருளிய, பேரறிவினையுடைய முருகன் ஆகிய சிறந்த புதல்வனும் உண்டாகும்படி செய்தது, நீ செய்தருளிய வல்லமைச் செயலே அன்றோ!

(குறிப்புரை) சிவபெருமான் செய்த சிறந்த வீரச் செயல்கள் எட்டனுள் ஒன்றாகக் காமதகனம், உலகமெல்லாம் ஒருங்கு வியந்து புகழ்ந்து போற்றப்பெறுதலின், "ககனமும் வானும் புவனமும் காணக் காமன் அங்கம் முன் தகனம் செய்த பெருமான்" என்று இறைவனைச் சிறப்பித்துக் கூறினர். காமத்தை விளைவிப்பவன் காமன்; அவனுக்குரிய படையும் அடையாளமும் வில்; ஆதலின் 'விற் காமன்' என்றார். யோகிகளுள் எல்லாம் தலைசிறந்த பரமயோகி யாதலின், சிவபெருமானைத் "தவப்பெருமான்" என்று குறிப்பிட்டார். 'தாழ் சடைப் பொலிந்த அருந்தவத்தோன்' என்பது சங்கப்பாடல். அருந்தவத்தோனை மனம் மாற்றி, மணம் புணர்ந்து தழுவியது மட்டுமேயன்றி, அவனுக்குச் சிறந்த மகனையும் பெற்றுக் கொடுத்த பெருஞ்சதுரப்பாடு உடையவள் அம்பிகையாதலின், அவளது அரும்பெறற் சதுரப்பாட்டினை 'வல்லபம்' என்று வியந்து புகழ்ந்தார். 'தவப்பெருமாற்கு மகனும் உண்டாயது நீ செய்த வல்லபமே யன்றோ' எனக் கூட்டுக. 'அறிவறிந்த மகப்பேறு' என்பார் 'மூதறிவின் மகன்' என்றார். 'தம்மில் தம் மக்கள் அறிவுடைமை இனிது' என்றபடி, தந்தையினும் மைந்தன் பலவகையிற் சிறந்தவனாகத் திகழ்தல் விரும்பத் தக்கதாகலின், ஐம்முகமும் எண் கையுமே உடைய சிவபெருமானுக்கு, அம்பிகை ஆறுமுகமும் பன்னிருகையும் உடைய பிள்ளையைப் பெற்றளித்தாள். அம்பிகையின் அச்செயலை, ஆசிரியர் "நீ செய்த வல்லபம்" என்று வியந்து புகழ்ந்து போற்றி மகிழ்ந்தார். காமதகனம் செய்தபின்னரே குமாரசம்பவம் நிகழ்ந்த திறம் ஊன்றியுணரற்பாலது!

"உள்ளதன் தன்மை, சத்தி. நல்லதன் தன்மை, சிவம். இவை இரண்டும் பிரிந்திருந்த நிலையில் தீமைகள் குதூகலித்துக் குதித்தன; சுவர்க்கம் இழக்கப்பெற்றது. உண்மையும் நன்மையும் (சத்தியும் சிவமும்) மணந்து, ஒன்றுபடுதல் வேண்டும். அப்போது தான் உலகை உய்விக்கும் தனிப்பெருந் தலைமகன் (முருகன்), தோன்றுவான். உண்மையையும் நன்மையையும் ஒன்றுசேர்ப்பதற்குக், காம உணர்ச்சியின் மூலம் முயற்சி நிகழ்ந்தது. அது கண்டு இறைவனுக்குச் சீற்றம் எழுந்தது. அதன் விளைவு ஏமாற்றமாய்ப் பெரும் துன்பத்தில் முடிந்தது. இறுதியில் தவத்தினால் பெற்ற தூய்மையின் வாயிலாக, உண்மையும் நன்மையும் இணைந்து மணந்தன. தனிப்பெரும் தலைமகன் தோன்றியருளினான். தீமைகளை எதிர்த்து அழித்தான். சுவர்க்கம் மீண்டும் கிடைக்கப் பெற்றது" என்று இரவீந்திரநாத தாகூர் அவர்கள், தாம் எழுதிய 'மனிதனின் சமயம்' என்னும் நூலிற் குறிப்பிடுவது, இங்கு நாம் அனைவரும் குறிக்கொண்டு போற்றத்தக்கதாகும்.

—ஆசிரியர்.

---

"This is the eternal problem of man. The evil spirit is exultant and paradise is lost when Sati the spirit of Sat (Reality) is disunited from Siva, the Spirit of Goodness. The Real and the Good must meet in wedlock if the hero is to take his birth in order to save all that is true and beautiful. When the union was attempted through the agency of passion, the anger of God was aroused and the result was a tragedy of disappointment. At last, by purification through penance, the wedding was effected, the hero was born who fought against the forces of evil and paradise was regained."

—RABINDRANATH TAGORE,

The Religion of Man.

# உண்மை விளக்கம்

(முற்ருெடர்ச்சி)

எனினும் 'மாயை' என்னும் சொல்லுக்கு இயல்பான பொருள் வேறு ஒன்று உண்டு. 'மா' என்பது ஒடுங்குதல், யா என்பது வருதல். இவ்வாற்ருல், எல்லாப் பொருள் களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்று தோன்றுதற்கும் காரண மாய் நிற்றலின், மாயை என்னும் பெயர் பெறுதற்கு ஓராற்ருல் இயைபுடையதாதல் தெளியப்படும்.

காலம் நியதி முதலிய தத்துவங்கள் ஏழும், ஆன்மாக்களுக்கு வித்தையை (அறிவை) எழுப்பும் தத்துவங்களாதலின், வித்தியாதத்துவங்கள் எனப் பெயர் பெற்றன.

"காலம் நியதி கருதும் கலை வித்தை
ஏலஅரா கம் புருடனே மாயை..."

"எல்லை பலம்புதுமை ; எப்போதும் [நிச்சயித்தல்;
அல்லல் தரும்கிரியை ஆன்மாவுக்(கு);ஒல்லை
அறிவு, ஆசை ஐம்புலனும் ஆரவரும் காலம்
குறியா மயக்கென்று கொள்"

**சிவ தத்துவங்கள் 5 :** மாயை என்ப தொன்றே தூலம் சூக்குமம் பரம் என மூவகைப்படும் தூலமாய் நின்ற அவத்தை யிற் பிரகிருதிமாயை என்றும், சூக்குமமாய் நின்ற அவத்தையில் அசுத்தமாயை என்றும், பரமாய் (அதிசூக்குமமாய்) நின்ற அவத்தையிற் சுத்தமாயை என்றும் வழங் கப்படும். சுத்தமாயையினின்றே சிவதத் துவங்கள் ஐந்தும் தோன்றும். இவற்றைச் சுத்த தத்துவங்கள் என்றும் வழங்குவர்.

**சுத்தவித்தை :** சுத்தமாயையில் தூல காரியம் தோன்றுதற்கு ஏதுவாக முதல் வனின் ஞானசத்தி மிகுந்தும், கிரியாசத்தி குறைந்தும் நிகழ்வது. தூலஈசுரம் தூல அதிகாரம், தூலப் பிரவிருத்தி, தூல சகனம் எனவும் இது பெயர்பெறும். உருத் திரன் மால் அயன் இந்திரன் முதலி யோருக்கும், அவர்களின் தநுகரணுதி களுக்கும் இஃது இடமாகும்.

**ஈசுரம் :** சுத்தமாயையிற் சூக்குமமாய்க் காரியம் தோன்றுதற்குக் கிரியை மிகுந்து ஞானம் குறைந்து நிகழ்வது. சூக்கும அதிகாரம், சூக்குமப் பிரவிருத்தி, சூக்கும சகளம் எனவும் இது வழங்கும். அநந்த தேவர் முதலிய வித்தியேசுரர் எண் மருக்கும் பிறருக்கும் இஃது இடமாகும்.

**சாதாக்கியம் :** சுத்தமாயையைக் காரியப் படுத்துதற் பொருட்டு முதல்வனின் ஞான சத்தியும் கிரியாசத்தியும் தம்முள் ஒத்து நிகழ்வது. இதற்குச் சதாசிவம், உத்தி யுத்தம், போகம், சகள நிட்களம் என்றும் பெயர்கள் உண்டு. பிரணவர் முதலி யோர்க்கும், அணுசதாசிவர் ஆகியோர்க் கும், அவர்தம் தநுகரணுதிகட்கும் இஃது இடமாக அமையும்.

**சத்தி தத்துவம் :** சுத்தமாயை காரியப் படுமாறு முதல்வனது கிரியாசத்தி வெளிப் பட்டு நிற்பது. இதற்குத் தூலலயம், தூல நிட்களம், விந்து என்னும் பெயர்களும் வழங்கும். முதல்வனின் கிரியாசத்திக்கும், நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகட்கும், மல பந்தம் நீங்கித் தூலலயவாசனை மாத்திரம் உடைய முத்தர்களுக்கும், அவர்களுக் குரிய புவன போகங்களுக்கும், இத்தத் துவம் இடமாக நிற்கும்.

**சிவதத்துவம் :** சுத்தமாயை காரியப் படுதற்கு ஏதுவாகும் வண்ணம், முதல்வன் தனது ஞானசத்தி மாத்திரையால் நோக்கி நிற்கப்பெறுவது. இதற்கு இலயம், நிட்

களம், சத்திமான், நாதம் என்றும் பெயர்கள் கூறப்படும். சூக்கும மலவாசனை மட்டும் உடைய முத்தான்மாக்களுக்கும், அவர்களுக்குரிய புவன போகங்களுக்கும் முதல்வனின் ஞானசத்திக்கும் இஃது இடமாக விளங்கும்.

**ஆன்மதத்துவம்:** (24), வித்தியாதத்துவம் (7), சிவதத்துவம் (5) என்னும் இம் மூன்றும், முறையே போக்கியகான்டம், போசயித்துருகாண்டம், பிரேரக காண்டம் எனக் குறிக்கப்படும். இவற்றுள் சிவதத்துவங்கள் சுத்தமும், வித்தியா தத்துவங்கள் சுத்தா சுத்தமும், ஆன்ம தத்துவங்கள் அசுத்தமும் ஆகும.

ஞானமே ஆன போது
சிவன்; தொழில் ஞானம் ஒக்கின்
ஈனமில் சதாசிவன்; பேர்
ஈசன்ஆம் தொழிலது ஏறின்;
ஊனமேற் கிரியை வித்தை;
உருத்திரன் இலய போகம்
ஆனபேர் அதிகா ரத்தோடு
ஆதிகர ணத்தன் ஆமே

—சித்தியார்.

இதுகாறும் கூறிவந்த முப்பத்தாறு தத்துவங்களும் அகக்கருவிகள் எனப்படும். இவற்றின் வேருகப் புறக்கருவிகள் அறுபது உண்டு. அவற்றையும் சேர்த்துத் தத்துவங்கள் தொண்ணூற்ருறு என்பர்.

"பொக்கமாய் நின்ற பொல்லாப்
புழுமிடை முடைகொள் ஆக்கை
தொக்குநின் றைவர் தொண்ணூற்
றறுவரும் துயக்கம் எய்த
மிக்குநின் றிவர்கள் செய்யும்
வேதனைக் கலந்து போனேன்
செக்கரே திகழும் மேனித்
திருக்கொண்டீச் சரத்து ளானே"

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரமும், தத்துவங்கள் தொண்ணூற்ருறு ஆதலை யுணர்த்தும்.

இனி, புறக்கருவிகள் அறுபதும் வருமாறு; பிருதிவியின் கூறு: தோல் எலும்பு நரம்பு தசைமயிர். அப்புவின் கூறு: நீர் உதிரம் மச்சை மூளை சுக்கிலம். தேயுவின் கூறு: ஆகாரம் நித்திரை பயம் மைதுனம் சோம்பல். வாயுவின் கூறு: ஓடல் நடத்தல் நிற்றல் இருத்தல் கிடத்தல். ஆகாயத்தின் கூறு: குரோதம் கோபம் மோகம் மதம் மாச்சரியம். ஆகப் பூதகாரியம் 25. பிருதிவியின் வழித்தான இடைகலை பிங்கலை சுழுமுனை காந்தாரி அத்தி சிங்குவை அலம்புடை புருடன் குகு சங்கினி என நாடிகள் 10. வாயுவின் வழித்தான பிராணன் அபானன் உபானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் என வாயுக்கள் 10. ஆகாயத்தின் வழித்தான அர்த்த ஏடணை புத்திரஏடணை உலக ஏடணை என ஏடணைகள் 3. வாக்காதியின் வழித்தான வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என விடயங்கள் 5. பிரகிருதியின் வழித்தான சாத்துவிகம் இராசதம் தாமதம் எனக் குணங்கள் 3. விந்துவின் வழித்தான சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என வாக்குகள் 4. ஆகப் புறக்கருவிகள் அறுபது ஆதல் காணலாம்.

இத்தத்துவங்கள் பலவும் ஆன்மாவுக்குப் பயன்படும் முறையினை ஞானமிர்தம் என்னும் சைவசித்தாந்த ஞான நூல், இலக்கியச் சுவையமைய உருவக முறையில் இனி தெடுத்து விளக்குகின்றது. ஆன்மா அரசன். உடல் அரண்மனை. புருவநடு திருவோலக்க மண்டபம். கண்டம் நாடக அரங்கு. இருதயம் மந்திராலோசனை மண்டபம். உந்தி அந்தப்புரம். மூலாதாரம் பள்ளியறைக்கட்டில். இவ்விடங்களில் ஆன்மா சாக்கிரம்சொப்பனம்சுழுத்திதுரியம்துரியாதீதம்என்னும்ஐந்தவத்தைகளைஎய்தும்; இவ்வவத்தைகளில் முறையே 35, 25, 3, 2, 1 ஆகிய கருவிகள் தொழிற்படும். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் அமைச்சர்கள். காலம் நியதி கலை வித்தை அராகம் என்பன கவசம். நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐம் பெரும் பூதங்களும் தேர். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும் முறையே ஒற்றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய்காப்பாளர்! வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் தொழிற் கருவிகள் ஐந்தும்

முறையேகுதிரைவீரர், யானைவீரர்தேர்வீரர் காலாட்கள், படைத்தலைவர்! அறிகருவிகளுக்கு நுகர் பொருளாகிய சுவையொளி யூறோசை நாற்றம் என்பன அகப்பரிவாரம். தொழிற் கருவிகளின் வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்பன புறப் பரிவாரம். பிராணன் அபானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பத்துவகை வாயுக்களும், உறுதிச் சுற்றம் என, ஞானமிர்தம் அழகுற விளக்கியிருத்தல் ஈண்டு அறிந்து இன்புறற் பாலது.

**ஆணவ மலம்:** ஒன்றாய் நித்தியமாய் விபுவாய் அநாதியாய், ஆன்மாக்கள் தோறும் ஞானதிரோதகமாய் எண்ணிறந்த சத்திகளை யுடையதாய், செம்பிற்குக் களிம்பு போலவும், நெல்லிற்கு உமி போலவும் ஆன்மாக்களைச் சகசமாய்ப் பற்றி நின்று எல்லா அநத்தங்கட்கும் மூல காரணமாய் நிற்பது. இதற்குப் பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்சனம்அவித்தை ஆவிருதி முதலிய காரணப் பெயர்களும் வழங்குவது உண்டு. இதனை "Pre-existent and pre-cosmic defect" எனவும், "Original sin" எனவும், "Problem of Evil" எனவும் பிறவாறும் குறிப்பிட்டு, ஓராற்றான் மேலை நாட்டாரும் உடன்படுவர். எனினும் ஆணவ மலம் என்பதொன்று உண்டென்பதனை, அகச் சமயம் ஆறும், சைவசித்தாந்த சமயமும் தவிர்ந்த, ஏனைய பிற சமயங்கள் உணரமாட்டா.

ஆணவ மலசத்திக்கு ஆவாரக சத்தி என்றும், அதோநியாமிகா சத்தி என்றும் முறையே சிறப்பியல்பு பொதுவியல்புகள் உண்டு. ஆணவம் கேவல நிலையில் உயிர்களுக்கு அறியாமையை விளைவிக்கின்றது; அவற்றின் இச்சா ஞானக் கிரியைகள் தொழிற்படாமல் தடுத்து நிற்கின்றது. அதனால் உயிர்கள் தம்மையும் அறியாமல் தலைவனையும் அறியாமல், ஆணவ மலத்தையும் அறியாமற் கிடக்கின்றன. இங்ஙனம் மறைத்தலே ஆவாரக சத்தியாகும். சகலத்தில் ஆணவம் கன்மவாசனையுடன் கூடிய உயிருக்கு விபரீத வுணர்வை யுண்டாக்கி அதனைப் பிறப்பு இறப்புகளில் உழலச் செய்கின்றது. இங்ஙனம் கீழ்நோக்கிச் செலுத்தும் தன்மையே அதோ நியாமிகா சத்தி எனப்படும். சுத்த நிலையில் உயிருக்கு ஆணவ பந்தம் விலகும். அப்போது ஆணவம் உயிரை நலியாமற் செயலற்றொழியும். ஆணவ மலத்தின் அதோ நியாமிகா சத்தி ஏழு வகைகளிற் காரியப்படும். மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என்பன அவை. மோகம் அஞர்ம தம் நகை விகற்பம் கற்பம் குரோதம் கொலை என எட்டாகக் கூறுதலும் உண்டு.

> "ஒரு பொருளும் காட்டா திருள், உருவம் காட்டும்;
> இருபொருளும் காட்டா திது.
>
> "பலரைப் புணர்ந்தும், இருட்பாவைக்குண் டென்றும்
> கணவற்கும் தோன்றாத கற்பு."

**கன்ம மலம்;** ஆன்மாவினாற் செய்யப்படும் நல்வினை தீவினைகள் கன்மம் எனப்படும். கன்மம் எனினும் வினை எனினும் ஒக்தும். புவனம் கலை முதலிய ஆறு அத்துவாக்கள் இடமாக, மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றான் ஈட்டப்பட்டு, தூலகன்மமாய் ஆகாமியம் என்னும் பெயர் பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக் கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுள் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய், முறையே சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூர்வம் சஞ்சிதம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப் பெயர் பெற்று, ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதி பௌதிகம் என்னும் முத்திறத்தாற் பலதிறப்பட்டு, பிராரத்தம் எனப்பெயர் பெறும். ஆதி பௌதிகமாவது சடம் வாயிலாக வருவது. ஆதியான்மிகம் உயிர்களான் வருவது. ஆதிதைவிகம் தெய்வம் காரணமாக வருவது. இன்னும் இவ்வினைகள் உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு ஒன்றற் கொன்று ஏற்றமுடைத்தாய், முறையே நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளின் அடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தம் எனப்படும் போகங்களைப் பயப்பிக்கும்.

**உயிரின் இயல்பு :** (நான் ஏது?) பதி பசு பாசம் என்னும் மூன்றில் பதி சித்துப் பொருள். சித்தெனவே சத்தாதலும் பெறப் படும். பாசம் அசித்துப் பொருள்; அசத் துப் பொருளும் ஆம். சித்தாகிய கடவுளின் முன் அசித்தாகிய பாசம் விளங்கித்தோன்றுதாகலின், அது கடவுளை அறிதல் இயலாது. கடவுளோ பாசத்தை அறிய வேண்டுவதில்லை. எனவே பாரிசேடப் பிரமாணத்தால் எஞ்சி யுள்ள ஆன்மாவே பதியையும் பாசத்தை யும் அறிந்து பயன் கொள்ளும். அது பற்றி ஆன்மாவிற்குச் சிதசித்து (சித்து + அசித்து) எனவும், சதசத்து (சத்து + அசத்து) எனவும் பெயர் உண்டு. ஆன் மாவே இங்ஙனம் பதியையும் பாசத்தையும் அறியும் தன்மையுடையது என்பதனை,

> "யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
> சத்தே அறியாது: அசத்து இலது அறியாது:
> இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா"

எனவரும் சிவஞான போத நூற்பாவாலும்,

> "சத்திது என்று அசத்துத்
> தான்அறி யாது; அசத்தைச்
> சத்துஅறிந் தகல வேண்டா:
> அசத்திது சத்திது என்றுஓர்
> சத்து இருள் ஒளி அலாக்கண்
> தன்மைய தாம்; அசத்தைச்
> சத்துடன் நின்று நீக்கும்
> தன்மையாற் சதசத்து ஆமே"

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளாலும் அறியலாம்.

ஆன்மாவானது தத்துவங்களின் ஒன் றன்றி, அவற்றின் வேறாக நிற்பது. நுகர் வோனும் நுகர்பொருளும் ஒரு பொருளே யாதல் இல்லை. கைப்பு கார்ப்பு புளிப்பு இனிப்பு உவர்ப்பு என்னும் ஆறு சுவை களும் தம்மைத் தாமே அறியமாட்டா. அது போல முப்பத்தாறு தத்துவங்களும் தம்மைத்தாம் அறிய வல்லன அல்ல. ஆறு சுவைகளையும் அருந்தி உணரவல்ல வன் அவற்றின் வேறாக உளனாதல் போல, முப்பத்தாறு தத்துவங்களையும் ஒன்றொன் றாக உற்று அறியக்கூடிய பொருள் வேறொன்று உள்ளது. அப்பொருள் அறிவு வடிவமாக நிற்கின்ற ஆன்மா அல்லது உயிரேயாம். சார்ந்ததன் வண்ண மாதலையுடைய உயிர்க்குப் பெத்தநிலையிற் பாசமாகிய உலகப் பொருள்களோடுகூடித் துன்பத்தில் அழுந்துதல் பொதுவியல்பு. முத்தி நிலையில் பதியாகிய சிவத்தோடு கூடி இன்பத்தில் அழுந்துதல் சிறப்பியல்பு.

**பதி இலக்கணம்** (நீ ஏது?): முதல்வன் உயிர்களோடு கலந்துநிற்கும் நிலை, ஒன்று தல், வேறுதல், உடனாதல் என மூவகைப்படும், "ஈறாய் முதல்ஒன்றாய்... வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே" என ஞானசம்பந்தர் அருளிச் செய்தமை, இதனை யுணர்த்தும். சூரியன் வேறு கண்வேறாய் நிற்பினும் கண்ணொளியிற் சூரியவொளி கலந்து நின்று பொருள்களைக் காட்டும்; அது போலப் பொருட்டன்மையால் இறைவன் வேறு உயிர் வேறு ஆயினும், இறைவன் உயிரின் அறிவிற் கலந்துநின்று பொருள் களை யுணர்த்தி நிற்பான். இது **வேறுதல்** என்னும் நிலை. ஐம்பொறிகள் உயிரின் துணைகொண்டே பொருள்களை அறியும். ஆயினும் ஐம்பொறிகள் உயிரை அறிய மாட்டா. அறியா தொழியினும், ஐம்பொறி கள்எனத் தான்என வேறின்றி உயிரா னது அவற்றோடு ஒன்றிநின்று பொருள் களை யுணர்த்தி நிற்கும்; அதுபோல இறை வனும் உயிர்கள்எனத் தானென வேறின்றி ஒன்றிநின்று அறிந்தும் அறிவித்தும் நிற்பன். இதனை,

> "விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
> அளந்துஅறிந் தறியா: ஆங்கவை போலத்
> தாம்தம் உணர்வின் தமிஅருள்
> காந்தம் கண்ட பசாசத் தவையே"

எனவரும் சிவஞானபோத நூற்பாவும் உணர்த்தும். இங்நிலை **ஒன்றுதல்** எனப் படும். அகரமானது மெய்யெழுத்துக் களிற்கலந்துநிற்குமாறு போலவே, ஏனைய உயிரெழுத்துக்களிலும் சார்பெழுத்துக் களினும் கூடக் கலந்து நிற்கும். அது போலவே இறைவன் இயங்குதிணைக் கண் ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவ்வவற்றின் தன்மையாய்க் கலந்து நிற்கின்றான். இஃது **உடனாதல்** என்னும் நிலை,

> "ஈறாகி அங்கே முதல்ஒன்றாய் ஈங்கிரண்டாய்
> மாறாத எண்வகையாய் மற்றிவற்றின்—
> வேறாய்
> உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்
> கடனாய் இருக்கின்றான் காண்"

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுளாலும், இங்ஙனம் உயிர்களோடு ஒன்ருய் வேருய் உடனுய் நிற்கும் பதிப்பொருளின் இலக்கணத்தை யுணரலாம்.

**நாதன் நடம்:** இதுவரையிற் பதிபசு பாசங்களைப் பற்றிய செய்திகளை அறிந்தோம். பாசத்தை நீங்கிப் பதியை அடைவது முத்தி. உயிர்கள் முத்தி அடைதற் பொருட்டு இறைவனது திருநடனம் நடைபெறுகின்றது. இறைவன் உயிர்களின் நலங்கருதி ஐந்தொழிற் கூத்து இயற்றும் திருக்கோலமே நடராச வடிவம் எனப்படும். அதன் அருமை பெருமைகள் அளப்பரியன; நடராச வடிவம் போன்றதொரு சிறந்த வடிவத்தினை இந்நாளில் எத்தகைய பெருங் கலைஞனயினும் படைத்தல் இயலுமோ? (1)

நடராச வடிவம் பக்தர்களுக்கும் பாமரர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் மெய்ஞ்ஞானிகளுக்கு மெல்லாம் பெருவியப்பையும் பேரீடுபாட்டினையும் விளைவித்து மகிழ்வித்து வருகின்றது! காலமும் இடமும் கடந்து, எல்லா நாடு மொழி சமயம் சார்ந்த மக்களாலும் போற்றத தகுந்ததாய்த் திகழ்கின்றது! இத்தகைய அரும்பெருஞ் சிறப்புக்கள் மிகக இத்திருவுருவத்தினை முதன் முதற்கண்டு படைத்துதவிய அருட் சான்ருேர்களாகிய கலைஞர்களின் நுண்மாண் நுழைபுலம் சாலவும் வியந்து பாராட்டுதற்கு உரியது. (2)

---

(1) "No artist of today however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena."

(2) "The conception of the image of Lord Nataraja is a synthesis of science, religion and art. How amazing the range of thought and sympathy of those rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature not merely satisfactory to a single cliqe or race, not acceptable to the thinkers of one century only, but universal in its appeal to the philosopher, the devotee, and the artist of all ages and all countries."

இறைவன் ஐந்தொழிற் றிருக்கூத்து இயற்றுங்கால், அவனது திருமேனி ஐந்தெழுத்தாலேயே அமைகின்றது. திருவடியில் ந; தோளில் சி; முகத்தில் வ; திருமுடியில் ய. இவ்வமைப்பு தூலபஞ்சாக்கரம் எனவும், "இலயாங்கம" எனவும் கூறப்படும்.

இனி சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம் எனவழங்கும். அஃது இறைவனது திருமேனியிற் பின்வருமாறு அமைகின்றது. துடியில் சி; வீசும் கரத்தில் வ; அபயகரத்தில் ய; ஏந்துகின்ற நெருப்பில் ந; அடிக்கீழ் முயலகனில் ம; இவ்வமைப்பு 'போகாங்கம்' எனப்படும். ஓங்காரம் பிரபையாகிய திருவாசியாகவும், 51 எழுத்துக்கள் அத்திருவாசியின் சுடர்களாகவும் திகழ்கின்றன.

முதல்வனின் உடுக்கையால் ஆக்கல்; அமைத்த கையால் காத்தல், ஏந்திய நெருப்பினுல் அழித்தல்; ஊன்றிய திருவடியால் மறைத்தல் (திரோதம்); எடுத்த திருவடியால் அருளல் (முத்தி) ஆகிய ஐந்தொழில்கள் நடைபெறுகின்றன.

இறைவன் தனது துடியைக் கொட்டுதலால் ஆன்மாக்களின் மாயையினை உதறுகின்ருன்; ஏந்திய நெருப்பினுல் கன்ம மலத்தினைச் சுடுகின்ருன்; ஊன்றிய திருவடியால் ஆணவ மலத்தினை அழுத்தித் தேய்விக்கின்ருன்; தூக்கிய திருவடியால் உயிர்களைப் பிறவிக்கடலினின் றெடுத்து இன்பக் கடலில் திளைக்கச் செய்கின்ருன். இத்தகைய திருநடத்தைக் கண்டு விரும்பித் தொழுபவர்களுக்குப் பிறவித்துயர் நீங்கும்.

> "கூடும்கதி; ஒருகால் கும்பிட்டாற் போதுமென
> நாடும் அபிநயத்தை நண்ணிற்ருல்:— ஓடியகட்
> காதனர் காண, ஒரு கால்காட்டிக் கையமைத்து
> நாதனர் ஆடும் நடம்"

எனக் குமரகுருபரர் அருளிச் செய்துள்ள அழகிய பாடலும் பிறவும் ஈண்டுணர்ந்து மகிழற் பாலன.

(தொடரும்)

—ஆசிரியர்.

# காணபத்தியம்

[ திருமதி சௌந்தரா கைலாசம் அம்மையார், சென்னை. ]

*[காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின்படி, அண்மையில் சென்னையில் நடைபெற்ற சங்கரர் ஷண்மத மாநாட்டு விழா வில், காணபத்திய விழா நாளில் (2—6—69), கணபதி வழிபாடு பற்றித் திருமதி* **சௌந்தரா கைலாசம் அம்மையார்** *அவர்கள் இயற்றிப் படித்து, அவையினர் அனைவரை யும் மகிழ்வித்த* **'காணபத்தியம்'** *என்னும் சிறந்த கவிதை, இங்கு வெளியிடப் பெறு கின்றது.*

*ஆசிரியர்.]*

ஆறு மதஞ்சேரும் ஆத்மீகப் பேரவையில்
கூறு கவியொன்று கொண்டுதர—வேண்டும்!
குணநிதியே ! ஞானநெடுங் கோபுரமே ! குள்ளக்
கணபதியே ! நீயெனக்குக் காப்பு !

புறவாழ்வின் மினுமினுப்பில் மனத்தை வைத்துப்
பொழுதெல்லாம் அதற்காகப் போட்டி யிட்டுத்
திறமான விஞ்ஞானத் திறவு கோலால்
திறவாத பலவற்றைத் திறந்து பார்த்தும்,
குறைவாழ்வு வாழ்ந்துவரும் குவல யத்தைக்
கூனல்முது காகிவிட்ட நெஞ்ச கத்தை
நிறைவாழ்விற்கு அமைக்கும்மா நாட்டில், காஞ்சி
நிறைகுடத்துக் கருணையினுல், நிற்கின்றேன் நான்! (1)

ஓயாது கற்றதனுல் உள்ளுக் குள்ளே
ஊறியநல் அறிவுடையார்; நான்மு கத்தில்
பாயாது தம்மனத்தை நிறுத்த வல்ல
பக்குவிகள்; உயிர்க்குலத்தைப் பற்றி யுள்ள
நோ(ய்)யாது ? தீரவழி யாது?என் றுள்ளம்
நோகாமல் சொல்பவர்தம் இடையே, இந்தச்
சே(ய்)யாது சொன்னுலும் பொறுப்பீர் என்னும்
திடங்கொண்ட மனங்கொண்டிங் கிடங்கொண் டேனே (2)

பேரருளும் கூரறிவும் பிணைந்த தென்னப்
பிறந்தமுதற் சங்கரரின் பெருமை தன்னைப்
பாரறியச் செய்திடவும், பார தத்தைப்
பக்திநெறிப் படுத்திடவும் பரிவு கொண்டு,

ஆறுமத மாநாட்டை அமைக்கும் காஞ்சி
அருளொளியின் திருவடியைக் கண்ணில் ஒற்றி
ஏறுமுகங் கொண்டவினை வேக மெல்லாம்
இறங்குமுக மாகநிதம் வணங்கு வோமே ! (௩)

இருந்தபடி இல்லாமல் ஏறிச் செல்ல
ஏணியென வாய்த்ததுதான் தெய்வ பக்தி !
தரந்தரமாய் அவரவர்க்கு வாய்ந்த நெஞ்சத்
தகுதிக்கும் உணர்விற்கும் தகுந்தாற் போலே,
வரந்தருமா றமைந்ததுதான் வடிவ பேதம் !
வடிவத்தை வார்த்தையினைக் கடந்து நிற்கும்
பரம்பொருளில் ஒன்றிரண்டு மூன்று உண்டு ?
பலவழியும் சேருமிடம் ஒன்றே ஒன்று. (4)

ஒருவழியின் தலைவனவன் உய்வு காட்டும்
ஓம்என்னும் மந்திரமாய் உருவம் ஏற்றுத்
தெருவழியில் போவார்க்கும் தெளிவு காட்டத்
தேடிவந்து காத்திருக்கும் தேவ நாதன்;
கருவழியில் வரும்பிறவிப் பிணியை நீக்கிக்
காத்தருளும் கணநாதன்; கால்தான் சென்று
வருவழியில் உள்ளஇடர் முள்ளை நீக்கி
வாழ்வருளும் குருநாதன் பிள்ளை யாரே ! (5)

தினந்தோறும் சரியாகத் திறந்து மூடும்
திருக்கோயில் பலவுண்டு நமது நாட்டில் !
கனமேறும் அடியார்க்கே தெய்வம் அங்குக்
காட்சிதரும் மிகஅருகில் கணக்குப் பார்த்து !
புனலூறும் கண்ணூர்க்குப் புணையாம் தெய்வம்;
போவார்க்கும் வருவார்க்கும் பொதுவாம் தெய்வம்;
மனந்தோறும் குடியேறும் மக்கள்(த்) தெய்வம்;
வழிப்பிள்ளை யார்என்றால் மறுப்பார் யாரே ? (6)

வாய்த்துள்ள முகம்போலும் இலையைக் கொண்ட
மரத்தடியான், குளக்கரையான், மும்ம லத்தைத்
தீய்த்துதவும் திருவிழியான், பெற்றோர் தம்மைத்
தெய்வமெனச் சுற்றியசீர் அடியான், துன்பம்
பேர்த்தருள ஓங்குமொரு தும்பிக் கையான்,
பிறவாத நன்னிலையில் உயிரை ஏற்றிக்
காத்தருளும் கணபதிதன் கழல்கள் போற்றில்,
காலமுந்திக் கிடப்போமா மாயச் சேற்றில் ? (7)

துதியாகப் பாடியபின் ஔவை யாரைத்
தூக்கிவிட்ட கையானை, துணையா னானை,
முதிராத நிலவுப் பல்லானை, யானை
முகத்தானைத், தொழுதுருகும் பத்தர் கட்கு

எதிராக இடரெதுவும் எழுந்தா தாக்கும் ?
    என்னஇது வேடிக்கை ! வெப்ப ஊற்றைக்
கதிரவனைப் பனித்துளியா தொட்டுப் பார்க்கும் ?
    கயிலாயப் பனிமலையை எறும்பா பேர்க்கும் ? (8)

வசையேதும் இல்லாமல் வாழ்வை நல்கும்
    வாரணத்தான், அத்தனைக்கும் கார ணத்தான் !
அசையாத ஓருருவம் போல்இ ருப்பான் !
    அசைவுகளுக் காதார மாயி ருப்பான் !
இசையாத மவுனியென அமர்ந்தி ருப்பான்!
    எவற்றோடும் ஓம்ஆகக் கலந்து இருப்பான் !
திசையாவும் உடையாகப் புனைந்தி ருப்பான் !
    தேடாத சிந்தையிலே ஒளிந்தி ருப்பான். (9)

உலகத்தை மயிலேறிக் கந்தன் சுற்ற,
    உதயத்திற் கருள்செய்த பெற்றோர்க் குள்ளே
சகலத்தைக் கண்டவனாய் வலம்வந் தானை,
    சாதித்த சாதனையால் பழம்கொண் டானை,
அகலத்தை நீளத்தை அளந்து காட்ட
    அரியானை—பெரியானை—ஆத்ம சோதி
நகரத்தின் உள்ளிருந்து நடஞ்செய் வானை,
    நான்குமறைப் பொருளானை நயவார் யாரே ? (10)

விடும்பற்றை; அதுமுடியா தென்றால், நல்ல
    விஞ்ஞானம் அருளுமுறை ஒன்றால் கொஞ்சம்
குடும்பத்தை முக்கோண வரம்பிற் குள்ளே
    கொண்டுவந்து நிறுத்தும்;என எச்ச ரிக்கை
விடும்படிக்குக் கூடியது பிறப்பின் வேகம்;
    மெய்எனினும் ஏதேனும் ஒருகு ழந்தைக்(கு)
இடும்படிக்கு நேர்ந்ததுவா ? பிள்ளையார் என்று
    எடுப்பான பட்டத்தை ! எங்கே காட்டும் ? (11)

பெரும்புலவர் ஞானத்திற் பிறந்து பொங்கிப்
    பெருகுமிசைத் தெலுங்கோடும் தமிழி னோடும்
அரும்புகிற முதற்பாடல் அவனுக் குத்தான் !
    ஆரம்பம் அவன்சுழிதான் பழங்கா லத்தில் !
இரும்புதரும் இதயத்தான் அல்லன்; காட்சிக்
    கெளியனவன்; உண்டியலைக் கையில் ஏந்தி
வரும்படிக்கா ஏங்குகின்றான் ? வாழ்வு காண
    வரும்படிக்குத் தூண்டுகின்றான் நம்மைத் தானே ? (12)

கும்மாளம் இட்டபடி பெண்கள் கூட்டம்
    குளிக்கின்ற குளக்கரையில் இருப்ப தெல்லாம்
அம்மாவைப் போலஒரு பெண்ணைத் தேடி
    அடைதற்கென் றுரைக்கின்றார் ! அல்ல அல்ல !

எம்மாதைக் கண்டாலும் அன்னை போலே
இருப்பதனால் தனிக்கட்டை ஆகி விட்டான் !
சும்மாவே இருக்கின்றான்; நமக்கும் அந்தச்
சுகமடையும் ரகசியத்தைச் சொல்கின் றானே ! (13)

மின்னளவில் அமைந்தஇடை மாத ரெல்லாம்
மேன்மையுள்ள அன்னையெனக் கணத்தின் நாதன்,
தன்னளவில் கொண்டுவிட்ட தன்மை யாலே
தனிப்பொருளாய் விளங்குகின்றான்; எண்ணிப் பார்த்தால்
மன்னுமுயர் சக்தியினை எதிலும் கண்டு
வணங்கியவன் முதற்சீடன் இவனே தானோ ?
கன்னலெனும் தமிழினிலே பாடிப் பாடிக்
கணபதியைப் போற்றிடுவோம் கூடிக் கூடி ! (14)

காய்ந்துவிட்ட கோலெடுப்போம்; காகி தத்தில்
கணபதியின் சுழியிடுவோம்; பிறகு நெஞ்சில்
ஆய்ந்தெடுத்த கருத்தையெலாம் வரிசை யாக்கி
அழகாக வரைந்திடுவோம்; அதனைப் போலே
பாய்ந்தலுத்தோம் பரிதவித்தோம் வெள்ளைக் கொம்பன்
பாதத்தில் குடியிருப்போம்; பெருகும் நீரில்
தோய்ந்தவிழி கொண்டவராய்ப் புதிய வாழ்வைத்
தொடங்கிடுவோம்; அடங்கிடுவோம்; அமரர் ஆவோம் ! (15)

யாப்பிற்கும் அவனுக்கும் சொந்தம் உண்டோ ?
யானைமுகக் காதிற்கும் சந்தம் உண்டோ ?
காப்பிற்கு வாவென்று தமிழ கத்துக்
கவிஞரிலே பெரும்பாலோர் மறவா தென்றும்
கூப்பிட்ட காரணத்தைக் கூற வாநான் ?
கொம்பொடித்து எழுதியவன் கொம்பன் என்றே
ஆட்பட்டு நிற்கின்றார் ஆசிக் காக !
அத்தனையும் கணபதி கைராசிக் காக ! (16)

புரியாத சிறுவர்களும், பல்லுப் போன
பொக்கைவாய்க் கிழவர்களும், பிள்ளை யாரைத்
தெரியாது போட்டதனால், தரையில் மோதித்
தெறித்தாலும், தும்பிக்கைத் தெய்வக் காதல்
முறியாது பாரதத்தில் என்றும்; பக்தி
முனைமழுங்கிப் போகாது; மோத கத்தைச்
சரியாகக் கொடுத்திடுவோம்; காண பத்ய
சம்மதத்தில் வாருங்கள் ! தழைப்போம் நாமே ! (17)

# மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

**பீமன் :** துரியோதனன், பீமன் மாண்டு போனான் என்று கருதி மனம் மகிழ்ந்து நகரத்திற்கு வந்தான். யுதிஷ்டிரர் பீமனைக் காணாது திகைத்தார். அரண்மனை யடைந்து தாயை வணங்கி, "அம்மா ! பீமன் இங்கு வந்தானா ?" என்று கேட்டார். அவள் அது கேட்டுத் திடுக்கிட்டாள்; "மகனே ! அவன் இங்கு வரவில்லை. விரைந்து தேடுங்கள்" என்றாள். நான்கு துணைவர்களும் நான்கு திசைகளிலும் சென்று தேடினார்கள். சோலைகள், முடுக்கு மூலைகள், நதிகள், வனங்கள் எல்லாம் தேடியும் பீமனைக் காணாது வருந்தி நடுக்கமுற்றார்கள்.

தருமர், "துரியோதனனால் கொல்லப் பட்டானோ ?" என்று ஐயுற்றார். பீமனைக் காணாது வீட்டுக்கு வந்து தாயிடம் தெரிவித்தார்கள். குந்திதேவி விதுரரை யழைத்து "அறிவுள்ளவரே ! பீமன் காணப்படவில்லை. அவனுடைய ஆற்றலைக்கண்டு துரியோதனன் அழுக்காறு கொண்டுள்ளான். துரியோதனன் கொடியவன்; தீமை புரிவதில் அச்சமில்லாதவன; அற்பன். என் மனம் சுழல்கின்றது; துரியோதனன் பீமனைக் கொன்றிருப்பானோ என்று சந்தேகப்படுகிறேன்" என்றாள்.

விதுரர், "அண்ணி ! துரியோதனனைப் பற்றி வெளிப்படையாக ஒன்றும சொல்லாதீர். அவன் அறிந்தால மற்ற நான்கு குமாரருக்கும் இடர்புரிவான். அக்கொடியவன் எதையும் துணிந்து செய்பவன். அவனுக்குப் பாவம் என்றால பாயசம். பீமன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்று வியாசர் கூறியுள்ளார். அவன் திருமபி வருவான். உன் புதல்வர்களில் யாரும் அற்பாயுள் உள்ளவன் இல்லை" என்று, பல நல்லுரை கூறினார்.

குந்தி பீஷ்மரைச் சென்று பணிந்து தன் மகன் விஷயத்தைச் சொல்லி அழுதாள். பீஷ்மர் "அம்மா மருமகளே ! நீ வருந்தாதே. நல்ல நிமித்தங்கள் தோன்றுகின்றன. பீமன் வருவான்" என்றார். குந்தி தெய்வத்தை வேண்டிக் கொண்டாள். பீமன் பிரிவினால் பாண்டர் நால்வரும், மற்றும் நகரத்து மக்களும் வருந்தினார்கள். துரியோதனாதியர் மகிழ்ந்தார்கள்.

எட்டாவது நாள் சுகமே எழுந்த பீமன் நீராடி நீறாடி, சிவமந்திரம் கூறி வணங்கினான். வாசுகி அவனைப்பார்த்து, "பீமா ! துரியோதனன் உன்னைக் கொல்ல முயலுகின்றான்; உன்னைக் கங்கையிலிட்டான். அரவங்களைக் கொண்டு கடிப்பித்தான்; நஞ்சுணவு நல்கினான். ஆற்றில் கழுவைப் பதித்துக்கொல்ல முயன்றான். நஞ்சுணவு தந்தும் கயிற்றினால் கட்டியும் பிரமாண கோடியில் வீழ்த்தினான். உனக்கு நாங்கள் நன்மையைச் செய்யும் பொருட்டு ரசத்தைத் தந்தோம். அதனால் நீ பதினாயிரம் யானைகளின் பலத்தைப் பெற்றிருக்கின்றாய். துரியோதனனிடம நீ சிறிதும் நம்பிக்கை வைக்காதே. நம்பாமல் இருப்பதை வெளிக்குக் காட்டிக கொள்ளாதே. திருவருள் உனக்குத் துணைபுரியும; உன்னைக் காணாது உன துணைவர்கள் வருந்துகின்றார்கள். ஆதலால் நீ போய் வா" என்று பற்பல இன்னுரை கூறினான். அவனுக்கு நல்ல உணவு தந்து, நல்ல உடைகளையும்,

நாகரத்தினங்கள் அமைந்த மணிமாலையும், விஷத்தை வெல்லக்கூடிய மருந்துகள பொதிந்த மங்கள கங்கணமும் தந்து அனுப்பினான். கங்கணம் கட்டிக்கொண்டு ஆண்ட அணிகலன்களால் அலங்கரிக்கப் பெற்ற பீமன், வாசுகி முதலிய பெரியோரைத் தொழுது விடைபெற்றுக்கொண்டு நாகர்கள் பூதலத்தில் சேர்ந்தார்கள்.

பீமன் விரைந்து வந்து தாயின் தாமரைத் தாளில் வீழ்ந்து வணங்கினான். தமையனையும் தொழுதான் : அர்ச்சுனன் முதலியோர் பீமனைப் பணிந்தார்கள். எல்லோரும் புதையலைப்பெற்ற வறியவனைப் போல் மகிழ்ந்து துள்ளினார்கள். பீமன் அவர்களிடம் இரகசியமாகத் துரியோதனன் செய்த கொடுமைகளைக் கூறினான். தருமர் இதனை மற்றவர்களிடம் கூறாதே. விழிப்பாக இரு என்றார். அது முதல் அவர்கள் அதிக விழிப்பாக இருந்தார்கள். பீமன் வந்ததை அறிந்து துரியோதனன் பெருந்துயரக்கடலில் முழுகினான்.

விற்பயிற்சி : பாண்டவர்களும் துரியோதனாதியரும இவ்வாறு வீணே ஆடிப் பொழுது கழிப்பது நன்றன்று என்று கருதிய பீஷ்மரும், திருதராஷ்டிரனும் ஆலோசித்து, நாணலில் பிறந்தவரும், வேதங்களிற் கரைகண்டவருமான கிருபாசாரியரை அழைத்து, அவரிடம் பிள்ளைகளை ஒப்படைத்து வில்வித்தை முதலிய கலைகளைப் பயிலுமாறு நியமித்தார்கள்.

ஜனமேஜயர் "முனிநாதா ! கிருபர் நாணலில் ஏன் பிறந்தார் ? அவருடைய வரலாறு என்ன ? அவருக்கு வில்வித்தை எப்படி வந்தது ? கூறும்" என்று வினவினார். அதற்கு வைசம்பாயனர் பின் வருமாறு கூறலுற்றார்.

கிருபர் : கௌதம முனிவருக்குச் "சரத்வான" என்ற ஒரு புதல்வர் உண்டு. அவர் வேதத்தைவிட அதிகமாக வில் வேதத்தையே தெரிந்துகொண்டார். தவஞ் செய்து அநேக அஸ்திரங்களை அடைந்தார். பெருந்தவம் புரிந்தார். அவருடைய தவத்தைக் கண்டு இந்திரன் அஞ்சினான். ஜாலவதி என்ற தேவ கன்னியைத் தவத்திற்கு இடையூறு செய்யுமாறு அனுப்பினான். உறுதியுடன் தவஞ்செய்து கொண்டிருந்த சரத்வான் அவளைக்கண்டு மனஞ்சிறிது சலன முற்றான். அவர் கையிலிருந்த வில்லும் அம்பும் நழுவியது. வீரியமும் நழுவித் தருப்பை மீது விழுந்தது. அவர் மனத்தைத் தளரவிடாமல் உறுதி செய்துகொண்டு, அந்த இடத்தை விட்டு வேறு இடம் போய்த் தவம் செய்தார். தருப்பைப்புல்லின் மீது இரு துளிகளாக விழுந்த வீரியம் வீணாகாமல், ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகளாக ஆயிற்று. சந்தனு மன்னன அக்காட்டில் வேட்டையாடிககொண்டிருந்தான். மன்னனுடைய பணியாளன் இக்குழந்தைகளைக் கண்டு சந்தனுவிடம் கூறினான். அரசன் கிருபை கூர்ந்து அக்குழந்தைகளைக் கொண்டு போய் அரணமனையில் வளர்த்தான். கிருபையோடு வளர்த்தபடியால் கிருபன் கிருபி என்று பேரிட்டான். பின்னர் சரத்வான் என்ற முனிவர் தம் அறிவுக்கண்ணால் தன் குழந்தைகள் சந்தனுவினால் வளர்க்கப்படுவதை யறிந்து, அத்தினபுரம் வந்து, சந்தனுவினிடம் உள்ள மக்களை அழைத்துக் கொண்டு போனார். கிருபருக்கு வேதங்களை ஓதுவித்தார். தன்பால் இருந்த தநுர் வேதத்தையும் பயிற்றுவித்தார். கிருபர் மிக்க அக்கரையுடன் * நான்கு வகையான விற்பயிற்சியிலும் வெகு விரைவாகத் தேறினார்.

---

(1) பிரயோகம் – விடுப்பது; 2. சம்ஹாரம்-திரும்பி எடுப்பது; 3. கல்பம்-மந்திர சித்திக்கு உரிய புரச்சரனை முதலிய விரதம்; 4. ரகசியம்-அவ்வற்றின் சொரூபஞானம்.

(2) முக்தம் - விட்டுவிடத் தக்க பாணம்; விடாமல் உபயோகிக்கத்தக்க கத்தி 3. முக்தாமுக்தம்—விட்டுத் திரும்பி எடுக்கத்தக்க அஸ்திரம், 4. மந்திரமுக்தம்-எடுக்க முடியாமல் மந்திரத்தால் விடும் அஸ்திரம்.

(3) சஸ்திரம் :— வெறும்ஆயுதம். அஸ்திரம்-மந்திரத்துடன் கூடிய ஆயுதம். 3. ப்ரத்யஸ்த்திரம்-அஸ்திரத்தைக் தடுக்கும் அஸ்திரம். 4. பரமாஸ்திரம்-எதிர் அஸ்திரமில்லாஅ அஸ்திரம்.

(4) ஆதானம்-எடுப்பது. ஸந்தானம்-தொடுப்பது; 3. விபோகம்-விடுப்பது; 4. ஸம்ஹாரம்-திருப்புவது.

கிருபாச்சாரியர் குருகுலம் அமைத்து, பாண்டவர்கட்கும் துரியோதனன் முதலிய வர்கட்கும், அவர் வித்தைகளைக் கற்பித் தார். யாதவர்களில் சிலரும், இன்னும் பல தேசத்து அரச குமாரர்களும் வந்து, அவரிடம் பயிற்சி பெற்றார்கள்.

பீஷ்மர் தன் பேரப்பிள்ளைகள், இன்னும் மேலான ஆசிரியரான துரோணரிடமும் பயிலுதல் வேண்டும் என்று விரும்பி, துரோணர் எங்கிருக்கின்றார் என்று உசாவிக் கொண்டிருந்தார்.

துரோணர்: கங்கோத்பத்திக்கு அருகில் பரத்வாஜர் என்ற முனிவர், தவஞ் செய்து கொண்டிருந்தார். கங்கையில் நீராடச் சென்றார். அழகும் இளமையும் பொருந்திய கிருதாசி என்ற தேவலோக அரம்பை அங்கு நீராடிக்கொண்டிருந்தாள். பரத்வாசருடைய மனத்தில் சிறிது ஆசை யுண்டாயிற்று. அதனால் வீரியம் துரோண பாத்திரத்தில் விழுந்தது. அவருடைய தவவலிமையால் உடனே ஒரு குழந்தை யாயிற்று. துரோணம் என்ற குடத்தில் பிறந்ததனால், துரோணர் என்ற பெயர் அவருக்கு உண்டாயிற்று. துரோணர் தன் பிதாவிடத்தில் வேதவேதாங்கங்களையுங் கற்றார்.

காசிப முனிவர் அக்கினிதேவனிட மிருந்து ஆக்நேயம் என்ற அஸ்திரத்தைப் பெற்றார். அதனைக் காசிபரிடமிருந்து பரத்துவாசர் பெற்றார். அந்த ஆக்நேயாஸ் திரத்தைப் பரத்துவாசர் அக்நிவேச்ய முனி வருக்குத் தந்தார். அக்நிவேச்யர் அந்த அற்புதமான சிறந்த அஸ்திரவித்தையைத் துரோணருக்குத் தந்தார்.

பாஞ்சால மன்னனாகிய பிருஷதன் மகப் பேறு வேண்டி, அக்காட்டில் ஒரு புறம் தவஞ்செய்து கொண்டிருந்தான். எதிரில் ஒருதேவமாது சென்றாள். அவளுடைய எழிலால் அந்த மன்னவன் மனத்தில் ஆசையுண்டாயிற்று. உடனே வீரியம் கீழே விழுந்தது. முனிவர்கள் கண்டால் ஏளனஞ் செய்வார்கள் என்று நாணப்பட்ட அவன், வீரியத்தைக் காலால் மூடினான். அந்த விந்துமைந்தனாக ஆயிற்று. துரு வேர், பதம்-கால், மரத்தின் வேரில் கால்வைக்கப் பிறந்ததனால் "துருபதன்" என்று பெயரிட்டான். அவனைப் பரத் வாஜரிடம் ஒப்புவித்து, "தங்கள் குமாரர் ஆகிய துரோணருடன் வளர்ந்து படிக் கட்டும். பின்னர் அழைத்துக்கொள்வேன்" கூறிவிட்டுத் தன்நகரம் போனான் பிருஷத மன்னன்.

துருபதனும் துரோணரும் அக்னிவேச் யரிடம் நெடுநாள் குருகுலவாசம் செய்து படித்தார்கள். துருபதனும் துரோணரும் மிக்க அன்புடன் பழகினார்கள். துருபத னுக்கு மறந்த வித்தைகளைத் துரோணர் சொல்லிக்கொடுப்பார். துருபதன் துரோ ணரை மிகுந்த அன்புடன் நட்புக் கொண் டான். ஒரு நாள் துருபதன் துரோணரைப் பார்த்து "நண்பரே! என் தந்தை எனக்கு முடிசூட்டி நான் பாஞ்சால நாட்டினை ஆளும் போது உமக்குப் பாதி ராச்சியந் தருவேன். தாங்கள் என்னுடன் சிறந்த அரசவாழ்வில் வாழவேண்டும்' என்றான்.

பின்னர்க் குருகுல வாசம் முடிந்து, துரு பதன் தன் நகரம் போய்ச்சேர்ந்தான். பரத்துவாசரும் விண்ணுலகஞ் சேர்ந்தார். துரோணர் பொறிபுலன்களை அடக்கி அவ் வனத்தில் பெருந்தவம் புரிந்து கொண்டி ருந்தார். குலம் வளரும் பொருட்டு சரத் வானுடைய மகளாகிய கிருபி என்ற கன்னி கையை மனைவியாக அடைந்தார். அறி வும் அடக்கமும் கற்பொழுக்கமும் பூண்ட கிருபியுடன் வாழ்ந்த துரோணர், சிவ மூர்த்தியை ஆராதித்தார். சிவமூர்த்தி யின் திருவருளால் துரோணருடைய மனைவி கருவுற்று ஒரு ஆண் மகவை ஈன்றாள். அம மைந்தன் உச்சைஸ்ரவம் என்ற குதிரையைப்போல் கனைத்தான். அப்போது விண்ணிலிருந்து ஒரு பூதம் வந்து "இவன் குதிரையைப்போல் கனைத் தபடியால் * அசுவத்தாமா என்று பேர்பெறு வான்" என்று சொல்லிற்று. புதல்வனைக் கண்டு துரோணர் மிக்க மகிழ்ச்சியடைந் தார். சூரியனுக்கு ஒப்பான அசுவத்தா மாவுக்குத் தாய்ப்பால் இல்லை. தவத்தால் உடல்வற்றியகிருபியிடம்போதுமான அளவு

---

* அச்வம்-குதிரை; ஸ்தாமா-ஒலியுடையவன்; குதிரையைப்போற் கனைப்பவன். இந்தப் பொருள் தெரியாத நல்லாப்பிள்ளை அறிவுக்குப் பொருந்தாத ஒரு கதையைப் புனைந்து எழுதிப் பெரும்பிழை புரிந்து விட்டார்.

பால் அமையவில்லை. அரிசி மாவையிட்டுத் தந்தாள் அங்குள்ள மற்ற முனிவர்களுடைய பிள்ளைகள் ஆவின்பாலைக் குடிப்பதைக்கண்டு, அக்குழந்தை "எனக்கு மாவின்பால வேண்டாம். ஆவின்பால் வேண்டும்" என்று கேட்டு அழுதது. குழந்தையின் இந்த அழுகையைக்கண்டு துரோணருக்குத் திகைப்பே மயங்கியது. உலகத்தையே வெறுத்து ஒன்றையும் வேண்டாது பற்றற்ற தவம் புரியும் அவருடைய மனம், பாலகன் துயரைக்கண்டு பரிதவித்தது.

துரோணர் பாலனுடைய பசியை யகற்றும் பொருட்டு,பசுவை நாடிப்பல இடத்தில் அலைந்தார்; கிடைக்கவில்லை. பின்னர் யவ அரிசியின் மாவினால் பால்போல் செய்து கொடுத்தார். அதைக் குடித்து அவன் பால்குடித்தேன் என்று கூத்தாடினான். பிள்ளைத்தன்மையால் தெரியாமல் அதைப்பால் என்று எண்ணிய குழந்தை குதித்தது மற்ற முனிபுத்திரர்கள் "அடே! துரோணா! இது பாலன்று. மாவின்நீர்" என்று கூறிப் பரிகசித்தார்கள். அதைக் கேட்டு அசுவத்தாமா மிகவும் பதறியழுதான். யாரிடமும் எதையும் கேட்கக் கூடாது என்று விரதம் பூண்ட துரோணருக்கு, இதயம் வெடித்துவிடும் போல் வேதனையாக இருந்தது.

பரசுராமர் தன் பொருள் முழுவதையும் தானம் செய்வதாகக் கேள்விப்பட்ட துரோணர் விரைந்து மகேந்திர மலையை அடைந்தார். அவர் பாதமலர் மீது விழுந்தார். "பெருமையுடையவரே ! நான் பரத்வாஜருடைய மகன் என் பேர் துரோணன். அயோநிஜன்" என்றார்.

பரசுராமர் "அப்பா உனக்கு நல்வரவு. நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் சொல்" என்றார்.

துரோணர் "பரமவீரரே, நீர் எல்லோருக்கும் அளவற்ற நிதிகளை அள்ளி அள்ளித் தருவதாக அறிந்து வந்தேன். என் மகனைக் காக்கும் பொருட்டுப் பொன் வேண்டும்" என்றார்.

"துரோணனே! என்பால் உள்ளன அத்தனையும் இரப்பவருக்கு ஈந்துவிட்டேன். கடல்சூழ்ந்த பூமி முழுவதையும் காசிபருக்குத் தந்துவிட்டேன். இப்போது இந்த உடம்பும் அஸ்திர சஸ்திர வித்தைகளுமே விஞ்சியிருக்கின்றன. நீ இந்த உடம்பையாவது, அஸ்திர சஸ்திரங்களை யாவது கேள், தருவேன்" என்றார்.

துரோணர் ஏற்கனவே வில்வேதம் பயின்றவர் ஆதலால், அதில் மேலும் வளர்ச்சி பெறவேண்டும் என்ற விருப்பம் இருந்தபடியால், பரசுராமரிடம் இருந்து தநுர் வேதத்தையும் அஸ்திர வித்தைகளையும் பூரணமாகக் கேட்டுத்தெரிந்து பெற்றுக்கொண்டு, தன்னைப் பாக்கியசாலியாக நினைத்துக்கொண்டார்.

பின்னர்த் தன் மனைவியுடன் அசுவத்தாமாவையும் அழைத்துக்கொண்டு, துருபதனிடம் சென்றால் கறவைப்பசு கிடைக்கும் என்ற நம்பிகையுடன், பாஞ்சால நகரஞ் சென்றார்.

(தொடரும்)

## நின் மூர்த்தி பரப்பி வைத்தாய்

வணங்கும் துறைகள் பலபல ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி, அவையவைதோறு
அணங்கும் பலபல ஆக்கி, நின் மூர்த்தி பரப்பிவைத்தாய்!
இணங்கும்நின் னோரைஇல் லாய், நின்கண் வேட்கை எழுவிப்பனே!

—நம்மாழ்வார்.

# உபதேச நூல்களின் உயர்த்தி

மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்,
காஞ்சிபுரம்.

நம் ஆசாரியர்கள் அவ்வப்போது எடுத்துக்காட்டும் பிரமாண வசனங்களுள்,

சாஸ்த்ரஜ் ஞாநம் பஹுக் லேசம்
புத்தேச் சலநகாரணம்
உபதேசாத் ஹரிம் புத்வா
விரமேத் ஸர்வகர்மஸு

என்பதும் ஒன்று. இதன்பொருளாவது, சாத்திரங்களை வாசித்து ஞானம் பெறுவதென்பது மிகவும் கடினமானது. சிரமப்பட்டுப் பெற்றாலும் புத்தி சலிப்பதற்கே ஏதுவாகும்; தெளிவு உண்டாகாது. ஆகவே மகாசாரியர்களின் திருவடிவாரத்தில் காத்திருந்து உபதேசங்கள் கேட்டு அவ் வழியாலே பகவானை அறிந்துகொண்டு சகல கர்மங்களிலும் ஓய்ந்திருக்க வேண்டும் என்பதாம். இதனால் சாத்திரங்கள் வாசிக்கக் கூடாதென்று கட்டளை இடுவதாக நினைக்கலாகாது. எத்தனை சாத்திரங்கள் வாசித்தாலும், ஆசாரியர்கள் சாரமான பொருளைத்திரட்டி எடுத்து உபதேசிக்கக் கேட்டால் ஒழியத் தெளிவு பிறவாது. ஆகவே, உபதேசம் கேட்பதுதான் முக்கியம் என்னும் இவ்வளவே இந்த வசனத்தின் கருத்தாகத் தேறும்.

நமது சம்பிரதாயத்தில் ஆசாரியர்கள் பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சீடர்களுக்கு உபதேசங்கள் செய்யவேண்டுமானால், சாத்திரஞானம் நிறைந்தவர்களாய் இருந்தாலொழியச் செய்ய முடியாது. உபதேசம் கேட்கிற சீடர்கள் பிறகு ஆசாரிய பதவியில் அமர்ந்து தாங்கள் தம் சீடர்களுக்கு உபதேசம் செய்யவேண்டுமானால், தாம் சாத்திர ஞானம் நிறைந்தவர்களாய் இருந்தாலொழியச் செய்ய முடியாது. இப்படி ஆசாரிய சீடமுறை தொடர்ந்து வருமிடத்துச் சாத்திரஞானச் செல்வம் இன்றியமையாததாகும். ஆகவே 'சாஸ்திர ஞானம் பகுகிலேசம்' என்கிற இந்த வசனமானது, சாத்திர ஞானத்தைச் சம்பாதிக்கவேண்டா என்று சொல்லவந்தது அன்றென்றும், உபதேசம் பெறவேண்டியது ஆவசியகம் என்பதை வற்புறுத்தவே வந்ததென்றும் கொள்ளக்கடவது.

நம்முடைய சம்பிரதாயத்தில் உபதேச கிரந்தங்கள் என்று சில அருமை பெருமை வாய்ந்த நூல்கள் வழங்குவது உண்டே; முமுட்சுப்படி, தத்துவத்திரயம், ஸ்ரீவசநபூடணம், ஆசாரிய இருதயம் என்றாற்போன்ற திவ்விய கிரந்தங்களுக்கு உபதேச கிரந்தங்கள் என்று பெயர். இவற்றால் உண்டாகும் ஞானம் மிகத் தெளிவாகவே இருக்கும். இவற்றில் அருளிச் செய்யப்படுகிற அரும்பெரும் பொருள்களெல்லாம் பலவேறு சாத்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்டனவேயன்றி, ஒன்றுகூட சுவகபோல கல்பிதமாக அருளிச்செய்ததன்று. அந்த சாத்திரங்களிலிருந்தே நாமும் தெரிந்து கொள்வோமே என்று நம்போன்றவர்கள் நினைக்கலாகாது. அந்த சாத்திரங்கள் நமக்குத் தெளிவான ஞானத்தைப் பிறப்பிக்கமாட்டா. கடல்நீரைக் கொண்டுதான் மேகம் மழை பொழிகின்றது. ஆனாலும் அந்தத் கடல்நீர் நமக்குப் பயன்படுவதில்லை. அது பானத்திற்கும் உதவுவதில்லை. அபானத்திற்கும் உதவுவதில்லை. அதுபோலவே, சாத்திரங்களிலிருந்து நாம் நேராகக்கொள்ளும் பொருள்கள் நமக்குத் தெளிந்த ஞானத்திற்குச் சாதனம் ஆக

மாட்டா. பரம காருணிகர்கள் ஆன பிள்ளை லோகாசாரியார், மணவாள மாமுனிகள் போன்ற பேராசிரியர்கள், தாமே சகல சாத்திரஞான சம்பந்நர்களாக இருந்து நம் போன்ற மந்தமதிகளை உய்வித்தருளக் கோலியே உபதேச கிரந்தங்கள் என்று சிலவற்றை அவதரிப்பித்தருளினார்கள். நாம் தெளிந்த ஞானம் பெறவேணுமானால், நமக்கு அவையே தஞ்சம். அந்தக் கிரந் தங்களை நாம் வரியடைவே கற்றாலும்கூட உபதேசம் புரியத்தக்கவர்களான ஆசாரி யர்களிடமிருந்து சாரமும் சுருக்கமுமான சில உபதேசங்களைத் தனிப்படவும் கேட்டே தெளிவுபெற வேண்டியதாகும்.

ஒரு செய்தியை இரண்டொரு வார்த்தை களாகச் சொல்லாமல், பலபல வார்த்தை களாகச் சொன்னால், அவற்றில் முன்பின் முரண்பாடு இருப்பதுபோல் தோன்றும். உண்மையில் மகான்களுடைய திருவாக்கு களில் ஒரு சிறிதும் முரண்பாடு இராது. மந்தமதிகளுக்கு முரண் இருப்பதுபோல் தோன்றும். ஒரு சிறிய உதாரணம் காட்டு கிறோம் இங்கு :

பிள்ளை லோகாசாரியார், முமுட்சுப்படியின் ஆரம்பத்தில்'மந்திரத்திலும் மந்திரத்துக்கு உள்ளீடான வஸ்துவிலும் மந்திரப்பிரத ஞன ஆசாரியன் பக்கலிலும் பிரேமம் கனக்க உண்டானால் காரியகரம் ஆவது' என்று அருளிச் செய்திருப்பது பிரசித்தம். இதன் கீழிலும் 'திருமந்திரத்தினுடைய சீர் மைக்குப்போரும்படி பிரேமத்தோடே பேணி அநுசந்திக்க வேணும்' என்றார். அவ் விடத்து வியாக்கியானத்தில் 'இப்படி அநு சந்திக்க வேணும் என்கையாலே பிரகார அந்தரேண அநுசந்திக்கலாகாது என்கிற நியமம் தோற்றுகிறது' என்று மணவாள மாமுனிகள் அருளிச் செய்தார். இவற்றால் முறையாக அநுசந்தித்தாலொழிய மந்திரம் காரியகரம் ஆகாது என்று தெரிவிக்கப் பட்டதாகிறது.

இது இப்படி இருக்க,மேலே (17 ஆம் சூர் ணிகை) 'சொல்லும் கிரமம் ஒழியச் சொன் னாலும், தன் சுவரூபம் கெடநில்லாது' என்று அருளிச் செய்யப்படுகிறது. 'பிரே மத்தோடே பேணி அநுசந்தித்தால் காரிய கரம் ஆகும்' என்ற முந்தின வார்த்தைக் கும் கிரமமின்றிச் சொன்னாலும் காரியகரம் ஆகும் என்கிற பிந்தினவாக்கியத்திற்கும் ஒன்றோடொன்று முரண்பாடு உள்ளதாகத் தெளிவாகக் காண்கிறது. இப்படியே மற்றொன்றும் காணலாம். ஸ்ரீவசந பூஷ ணத்தில் பிரபத்திக்குப் பலநியமம் இல்லா மையை விவரிக்கும் சூர்ணையில் 'திரௌ பதிக்குப் பலம் வஸ்த்ரம்' என்றருளிச் செய் தார். முமுட்சுப்படியிலே திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே என்றருளிச் செய்கிறார் ; "திரௌபதிக்கு சித்தித்த வஸ்திர விருத்தியானது பிரபத்தி யின் பலனென்று ஓரிடத்தில் சொல்லி, அது தன்னையே நாம சங்கீர்த்தனத்தின் பலனாக மற்றோரிடத்தில் சொல்லுவது விருத்தமென்று தோன்றக்கூடியது.

இதெல்லாம் சாமானியமாகத் தோன்றக் கூடிய விரோத சங்கைகளே ஒழியப் பேரறி ஞர்களுக்குத் தோன்றக்கூடியவை அல்ல. இவற்றுக்குப் பரிகாரங்களை உபதேச முகத் தாலேயே கேட்டறிய வேண்டும். இங்கு நாம் குறிப்பிட்ட முரண்பாடுகளுக்குப் பரி கார முறை எங்ஙனே என்று,சிறிது எழுது கிறோம் இங்கு.

"திருமந்திரத்தைப் பிரேமத்தோடே பேணி அநுசந்திக்க வேணும்" என்றும், 'பிரே மம் கனக்க உண்டானால் கார்யகரம் ஆவது' என்றும் அருளிச் செய்ததானது, 'மந்திரத்தை அநுசந்திக்க வேண்டிய அதி காரிகளை நோக்கிச் சொன்னது. 'சொல் லும் கிரமம் ஒழியச் சொன்னாலும் தன் சுவ ரூபம் கெட நில்லாது' என்றது, மந்திரத் தின் பெருமை சொன்னது. இவை ஒன் றோடொன்று மாறுபடுபவை ஆக மாட்டா. இதற்கு இணங்க ஓர் உலகியல்உதாரணம் காட்டுகிறோம். காண்மின்:

புக்ககம் செல்லுகிற பெண்ணைக் குறித் துத் தாய் தந்தையர் புத்திமதி கூறும் போது 'பெண்ணே, நீ புக்ககத்தில் மிகவும் குணசாலினியாய் வாழ வேண்டும். தளிகை செய்கையில் மிகுந்த கவனிப்பு டன் இருக்க வேண்டும்;உப்புப் புளி காரங் களைத் திட்டமாகச் சேர்க்க வேண்டும்; இல்லையாகில் மாமியார் மாமனார் கணவர் முதலானவர்களின் அன்பைப் பெற முடி யாது' என்று நன்மைசொல்லுகின்றார்கள்.

இதில் ஒரு தவறும் இல்லை ; யுக்தமான வார்த்தை தானே இது. மற்ருெருகால் மாமியார் மாமனுர் முதலானுருடைய நற்குண நற்செய்கைகளைப் புகழ்ந்துபேசும்போது, 'இவர்கள் எனது பெண்ணின் தளிகையைச் சிறிதும் குறைகூறுவதில்லை ; உப்புப் புளிகாரங்களை இரட்டிப்பாக இட்டு அவள் தளிகை செய்தாலும், பரம போக்கியமாக இவர்கள் அமுதுசெய்கின்ருர்கள்' என்று சொல்லுகின்ருர்கள் என்று வைத்துக் கொள்வோம். இதிலும் தவறுஇல்லை. இவ்வார்த்தைகளில் பரஸ்பர வரோதம் ஏதும் இல்லையன்ருே ? மகள் இருக்கவேண்டிய விதத்தைக் கற்பிப்பது பூர்வின வார்த்தை; பெரியோர்களின் பெருந்தன்மையான இயல்பினைத் தெரிவிப்பது பிந்தின வார்த்தை. நம்முடைய குற்றங்களையும் பெரியோர்கள் குணமாகக் கொள்ளுகின்ருர்கள் என்பதைக்கொண்டு நாம் குற்றம் செய்யலாகாது அன்ருே.

சாத்திரப் பொருள்களில் தெளிவு பிறப்பது எளிதன்று. அடுத்தது திரௌபதியின் ஆடை வளர்ச்சி பற்றிய செய்தி. அவள் திருநாம சங்கீர்த்தன பூர்வமாகப் பிரபத்தி பண்ணினுள். இரண்டும் சேர்ந்து ஒரே செயல். ஒரு கிரந்தத்தில் ஆடை வளர்ச்சியைப் பிரபத்தியின் பயனுகச் சொல்லி, மற்ருெரு கிரந்தத்தில் அதைத் திருநாம சங்கீர்த்தனத்தின் பலனுகச் சொன்னதனுல், யாதொரு விரோதமும் இல்லை. இவ்விதமாகச் சில சங்கைகளுக்கு எளிதாகப் பரிகாரம் கிடைக்கும். சில சங்கைகளுக்குச் சிரமப்பட்டே பரிகார்ம் உணரவேண்டியதாக இருக்கும்.

(தொடரும்)



திருவாரூரான் திருமண மண்டபத் திறப்புவிழாக் காட்சி

# வைத்தீசுவரன் கோயில் சிறப்பு

**தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,**
**தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம், சென்னை–17.**

*கள்ளார்ந்த பூங்கொன்றை*
*மதமத்தம் கதிர்மதியம்*
*உள்ளார்ந்த ச்டைமுடிஎம்*
*பெருமானுர் உறையும்இடம்,*
*தள்ளாய சம்பாதி*
*சடாயுஎன்பார் தாம்இருவர்*
*புள்ளானுர்க்கு அரையன்இடம்*
*புள்ளிருக்கு வேளூரே*

*—சம்பந்தர்.*

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள வைத்தியநாதப் பெருமானைச் சடாயு, இருக்கு வேதம், முருகப்பெருமான், சூரியன் ஆகியோர் பூசித்தமையால்தான், இத்தலத்திற்குப் **புள்ளிருக்கு வேளூர்** என்னும் பெயர் ஏற்பட்டது. இவர்களுள் முருகன் இங்கு செல்வ முத்துக்குமாரர் என்று போற்றப் படுகிறார். இவரைப் பக்தர்கள் **"முத்தையா"** என்றே அன்புடன் அழைப்பாகள். இச் செல்வ முத்துக் குமாரர் வைத்தியநாதரை நாடொறும் வழிபடும் ஐதிகம், வைகறைப் பொழுதிலும் உச்சிக் காலத்திலும் இன்றும் நடைபெற்று வருகிறது. **"முத்துலிங்கம்"** என்று அழைக்கப்படும் முத்தையாவின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய படிகலிங்கத்திற்கும், முத்தையா வழிபாடு செய்யும் பாவனையில், சிவாசாரியார்களால் வழிபாடு செய்யப் பட்டுவருகிறது.

சூரியன் பூசை செய்யும் ஐதிகம், ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் 19, 20, 21–ஆம் நாட்களிலும், மாசி மாதம் 19, 20, 21–ஆம் நாட்களிலும், நடைபெறுகிறது. வைத்தியநாதர் மேற்கு நோக்கிய சந்நிதானமாக எழுந்தருளியுள்ளமையால், மேலே குறிப்பிட்ட ஆறு நாட்களிலும் மாலை 2 மணிக்குச் சூரிய பூசை நடைபெறுகிறது. இப்பூசை சுவாமியின் மூலத்தானத்திலிருந்து ஒருபர்லாங் தூரம் இடைவெளியில்லாத மண்டபங்கள் இருந்தும், சூரியன் தனது ஒளிக்கதிர்கள் இறைவன் மீது படுமாறு பூசிப்பது குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாகும்.

இவ்வாலயத்தின் பூசைகள் காமிக ஆகம விதிப்படி, ஆறு காலங்ககள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரப் பெருவிழா, இங்கு சுவாமிக்கு நடத்தப்பெறும் பிரம் மோற்சவம் ஆகும். இவ்விழாவின் ஐந்தாந் திருநாளில், செல்வ முத்துக்குமாரசுவாமி வைத்தியநாதரைப் பூசித்துச் செண்டு பெறும் ஐதிகம் நடத்தப்படுகிறது. முத்தையாவிற்குத் தைமாதம் திருவிழா நடைபெறுகிறது. கடைசிச் செவ்வாய்க்கிழமை தீர்த்தவாரி நடைபெறும். ஐப்பசி மாதம் கந்த சஷ்டி விழாவும், முத்தையாவிற்குச் சிறப்பாக நடைபெறுகிறது. அம்மை தையல் நாயகிக்கு ஆடிப்பூர உற்சவமும், நவராத்திரி விழாவும் சிறப்பாக நடத்தப்படுகின்றன.

பிரம்மோற்சவத்தில் சுவாமி வலப்பக்கமும், அம்பாள் இடப்பக்கமும், நடுவில் முத்தையாவும் எழுந்தருளச் சோமாஸ்கந்தர் அமைப்பில் திருவீதி உலாவரும் காட்சி, இத்தலத்தில் தனிச்சிறப்பு ஆகும்.

இக்கோயிலில் சொத்துக்கள் எல்லாம் வைத்தியநாதர் பெயரிலேயே இருந்தாலும்

சிறப்புகள் எல்லாம் முத்தையாவிற்குத்தான் நடைபெறுகின்றன. வைத்தியநாதரும் தையல் நாயகியும் தமது செல்வக் குமாரனைப் போற்றும் முறையும், ஸ்ரீமுத்தையா அம்மையப்பரிடம் நடந்து காட்டும் பணிவும், அனைவரும் தரிசித்து மகிழ்ந்து மேற்கொள்ளத் தக்கனவாகும்.

முத்தையா புறப்படுவதென்றால், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானமோ, அல்லது அவர்களின் பிரதிநிதிகளான கட்டளைத் தம்பிரான் சுவாமிகளோ உடன் இருக்க வேண்டும். இல்லாமல் புறப்படும் வழக்கம் இன்றளவும் இல்லை. முத்தையா கிருத்திகை தோறும் அபிஷேகம் கொள்வதற்குச் சந்தனக் குழம்பு மண்டபத்திற்கு எழுந்தருளுவார். நடைப் பாவாடை விரித்து அதன்மீது பவனிவரும் போது, மகாசந்நிதானம் அல்லது கட்டளைச்சுவாமிகள் கைகூப்பியவண்ணம், திரும்பாமல் முத்தையாவைத் தரிசித்தபடி பின் அடியிலேயே நடந்து வருவதும்; முத்தையா சுவாமி சந்நிதியில் நின்று சுவாமியிடம் உத்திரவு பெற்றும், அம்பாள் சந்நிதியில் நின்று அம்பாளிடம் உத்திரவு பெற்றும், மண்டபத்திற்கு எழுந்தருளிக் காட்சி தருவதும், இரவில் மீண்டும் முத்தையா உள்ளே யதாஸ்தானத்திற்கு எழுந்தருளும்போது அம்பாள் சந்நிதியில் முத்தையாவிற்குப் பால் நிவேதனம் செய்வதும் பிள்ளைகளும் தரிசித்துப் பயன்பெறத்தக்க நிகழ்ச்சிகளாகும். கிருத்திகை தோறும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் மூன்று மணி நேரம் ஒன்றுகூடியிருந்து அபிஷேக ஆராதனைகளைத் தரிசிப்பதும் இத்தலத்தின் தனி விசேஷமாகும். பகலில் பன்னிரண்டு நாழிகைவரை கிருத்திகை இருந்தால் அன்றுதான் இத்தலத்தில் கிருத்திகை விழா நடைபெறும்; அபிஷேகம் காலையில் 10 மணிக்குத் தொடங்கப்பெற்று பகல் 1 மணிவரை நடைபெறும். இதுவும் இத்தலத்திற்கே உரிய முறையாகும். கிருத்திகையன்று நடைபெறும் சந்தனக் குழம்பு அபிஷேகம், இத்தலத்திற்கே உரிய தனி அபிஷேகச் சிறப்பாகும்.

இச்சந்தனக் குழம்பைக் கிருத்திகையன்று பெற்றவர்கள், அடுத்த கிருத்திகை வரையில் நாள்தோறும் பருகிப் பயன்பெறுகின்றனர். மகப்பேறு இல்லாதவர்களுக்கு மகப்பேறு வாய்க்கப் பெறுவதால் இதைச் "சந்தானக் குழம்பு" என்றும் போற்றுகின்றனர்.

இங்கு அர்த்தசாம பூசை, முதலில் முத்தையாவிற்குத்தான் நடைபெறும். இதைப் புனுகுக் காப்புத் தரிசனம் என்று சொல்வார்கள். இது மிகவும் முக்கியமானது. இதைப் பலரும் நியதியாகத் தரிசித்துப் பயனடைகிறார்கள். இது இரவு 9 மணிக்கு நடைபெறுகிறது. புனுகு, சவ்வாது, நேத்திரப்பிடி என்னும் சந்தனப்பிடி, இவற்றை முத்தையாவிற்குச் சார்த்துவார்கள். நேத்திரப்பிடி சந்தனம் மருந்தாகவும் பயன்படுகிறது. இங்கு வைத்தியநாதர் கொடுக்கும் மருந்து அங்கசந்தானத் தீர்த்தத்தில் உள்ள மண்ணை எடுத்துச் சித்தாமிர்த தீர்த்தம் கலந்து உழுந்தளவாக உருட்டி அம்மையின் பாதத்தில் வைத்து அர்ச்சித்த மண்ணுருண்டைதான். "வந்தவந்த பேர்களுக்கு மண் மருந்து அளிக்கிறீர்; வாயிலே மண் போட்டு வாங்குவர் காண் அம்மானை" என்ற புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகத்தொடர்களால் இவ்வுண்மையை நன்கு தெளியலாம்.

தல விருட்சம் வேப்பமரம். இது கிரேதா யுகத்தில் கடம்ப மரமாகவும், திரேதா யுகத்தில் வில்வ மரமாகவும், துவாபர யுகத்தில் மகிழ மரமாகவும், இக்கலியுகத்தில் வேப்பமரமாகவும் மாறிவந்துள்ளது என்பர். இதன் பழைமை யாருக்கும் தெரிந்திலது. சித்தாமிர்தத் தீர்த்தமும் ஒவ்வொரு பெயருடன் விளங்கியது என்பர். சதானந்த முனிவரின் சாபத்தால், இன்றும் பாம்பும் தவளையும் இத்தீர்த்தத்தில் வசிப்பதில்லை. பதினெண் சித்தர்களுள் ஒருவரான தன்வந்திரி என்பவர், இத்தலத்தில் அடக்கமாகியுள்ளார் என்பதாகப் பெரியோர்கள் சொல்லிவருகின்றனர்.

இக்கோயில் தமிழகத்திலும், பிறமாநிலங்களிலும் மற்றும் கடல்கடந்த இலங்கை மலேயா தென்னாப்பிரிக்கா முதலிய தேசங்களிலும் உள்ள மக்கட்குக் குல தெய்வமாக விளங்குகிறது. அவரவர்களும் பிரார்த்

தனை செய்துகொண்டு காணிக்கை செலுத்தி வருகின்றனர். முகத்திலும், உடம்பிலும், பரு அல்லது கட்டிகள் ஏற்பட்டால், மிளகு, உப்பு, கடுகு, வெல்லம் இவற்றை வாங்கிச் சந்நிதியில் சேர்ப்பிப்பதாக வேண்டிக் கொள்கிறார்கள். ஒரு மாதத்திற்குள் பருவோ, கட்டியோ மறைந்து விடுகிறது. வேண்டிக் கொண்டபடி பிரார்த்தனைக் காணிக்கையைச் செலுத்தி விடுகிறார்கள். உடலில் எந்தவிதமான நோய்கள் வந்தாலும், அதற்கேற்றபடி பிரார்த்தனை செய்துகொண்டு அடிப்பிரதட்சணம், அங்கப்பிரதட்சணம் செய்து நோய்களைப் போக்கிக் கொள்கிறார்கள். கருச்சிதைவு ஏற்படும் தாய்மார்களும், வயிற்றுக் கோளாறு உள்ள ஆடவர்களும், சுவாமி சந்நிதியில் படுத்துக்கொண்டு வயிற்றில் மாவிளக்குப் போட்டுப் பயனடைகிறார்கள்.

ஆறாயிரம் ஏக்கர் நஞ்சை நிலமும், ஆயிரம் ஏக்கர் புஞ்சை நிலமும், இக்கோயிலுக்குரிய சொத்துக்கள். இரண்டு லட்சம் ரூபாய் மதிப்பிற்குரிய திருவாபரணங்கள் உள்ளன. மூன்றாண்டுகட்கு முன்பு முத்தையாவிற்கும், வள்ளி தெய்வயானைக்கும், இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நவரத்தினக் கவசம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்களின் பெருமுயற்சியாலும், பக்தர்களின் காணிக்கையாலும் சார்த்தப்பட்டுள்ளது. நவரத்தினக் கவசம் கிருத்திகைதோறும் சார்த்தப்படுகிறது. கற்பக விநாயகர், சுவாமி, அம்பாள், அங்காரகன் ஆகியோர்க்குத் தங்கக்கவசங்கள், ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானத்தின் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டுள்ளன. அங்காரக க்ஷேத்திரம் ஆனதால், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் இங்குப் பிரார்த்தனை செய்து கொள்வார்கள்.

யாத்திரிகர்கள் வசதிக்காக இருப்புப் பாதை நிலையத்தை ஒட்டி, எட்டு அறைகள் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வாடகையில் கட்டப்பட்டுள்ளன. சாமான்களை மட்டும் வைத்துக்கொண்டு தங்கக்கூடிய வசதியுள்ளவை இவை. அதையடுத்து நான்கு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டிடத்திலும் சமையலறை, குளிக்கும் அறை, முதலிய வசதிகள் உள்ளன. இவற்றிற்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வாடகை. கோயிலில் பல பாகங்களிலும் குடிதண்ணீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, எப்போதும் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தேவத்தானத்தின் சார்பில் அனாதைக் குழந்தைகளுக்கு இல்லம் ஒன்று நடத்தப்படுகிறது. அதில் 25 ஆண்—பெண் குழந்தைகள், உண்டியும் உறையுளும் பெற்றுப் படித்து வருகின்றனர். பள்ளியில் பயிலும் மாணவர்கள் நூறு பேர்க்கு ஆலயத்தில் நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. விழாக்காலங்களில் பெருந்திரளாக வரும் ஆயிரக்கணக்கான சேவார்த்திகள் தங்குவதற்காகச் சண்முகவிலாச மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் ஐந்தாண்டுகளாகத் திருப்பணி நடைபெற்று வந்தது. இதுவரை நான்கு லட்சம் ரூபாய்ச் செலவில் இராச கோபுரங்கள், சுவாமி, அம்பாள், முத்தையா விமானங்கள் புதுப்பித்தும் பழுதுபார்த்தும் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரையில் இத்திருப்பணிகள் யாவும் கோயில் வருமானத்தினைக் கொண்டே செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த வைத்தீசுவரன் கோயில் மகாகும்பாபிஷேக விழா, உலக நலத்தின் பொருட்டு, வேத சிவாகம முறைப்படி, ஒருவகையான குறையுமில்லாமல், நாட்டுக்கே ஓர் எடுத்துக்காட்டான நிலையில், தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் பெரு முயற்சியினால், மிகவும் சிறந்த முறையில், யாவரும் வியப்பும் விம்மிதமும் அடைந்து மகிழும் வண்ணம், 2—7—69 அன்று நன்கினிது நடைபெற்றது.

ஈடும் எடுப்பும் அற்ற முறையில், தனிப் பெரும் சிறப்பாக, இனிது நிகழ்ந்த இம் மகாகும்பாபிஷேக விழாவில், 27—6—69 மாலை முதல் 2—7—69 காலைமுடிய, நாள்

தோறும் 10 காலங்கள் யாகபூசைகள் நிகழ்ந்தன. வைத்தியநாதப் பெருமான், தையல்நாயகி அம்மை, செல்வமுத்துக் குமாரசுவாமி ஆகிய மும்மூர்த்திகட்கும், நவகுண்ட பட்சயாகம் சிறப்புற நடைபெற்றது. யாக பூசையில் 120 சிவாச்சாரியர்கள் பங்கு கொண்டனர். 50 சாஸ்திரிகள் வேதபாராயணம் செய்தனர். தக்க பக்க வாத்தியங்களுடன் 64 ஓதுவா மூர்த்திகள் பன்னிரு திருமுறைப் பாராயணமும், பண்ணிசைப் பாராயணமும், அகண்ட பாராயணமும், தலப்பதிகப் பாராயணமும், நனி மிகச்சிறந்த முறையில் நடத்தினர்.

புள்ளிருக்கு வேளூர்த் திருநாள், குடமுழுக்குத் தத்துவத்திருநாள், பன்னிரு திருமுறைத் திருநாள், சித்தாந்த சாத்திரத் திருநாள், குடமுழுக்குத் திருநாள், சித்த மருத்துவத் திருநாள் என்பன, முறையே 28—6—69 முதல் 2—7—69 முடிய, மிகவும் எடுத்துக்காட்டான நிலையில் நன்கினிது சிறப்பாக நடத்தப்பெற்றன.

இம்மாநாடுகளில் பலவேறு ஆதீனங்களின் மகாசந்நிதானங்கள், நீதிபதிகள், பேரறிஞர்கள் கலந்துகொண்டு, ஆசியுரையும் வழங்கியருளினர். இசையரங்கு நாட்டிய நாடகம், பண்ணிசை அரங்கு, இசைக்கதைகள் முதலிய கலை நிகழ்ச்சிகளும், மிக விமரிசையாக ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தன.

கோயில் முழுவதும், பலவண்ண மின் விளக்குகளால் அணிசெய்யப் பெற்றிருந்தது. விழா நிகழ்ச்சிகளைத் தலத்தின் எப்பகுதியிலிருந்தும் கேட்டுமகிழத்தக்க வகையில், ஒலிபெருக்கிகள் அமைக்கப் பெற்றன. இலட்சக்கணக்கில் திரண்டிருந்த பொதுமக்கள் அனைவரும், வசதியாகத் தரிசனம் செய்ய எல்லாவகை ஏற்பாடுகளும், மிகவும் நுணுக்கமான முறையில் ஆராய்ந்து செவ்வனே செய்யப் பெற்றிருந்தன. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வரும் லட்சக் கணக்கான அன்பர்களின் வசதியின் பொருட்டு, தனிச் சிறப்பு ரயில் வண்டிகளும், பேருந்துகளும் விடுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. மிக்க பெருந்திரளான மக்கள் வருவதை முன்னிட்டு முதலுதவி (Ambulance) வசதிகளும், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப் பெற்றிருந்தமை, குறிப்பிடத்தக்கது.

எல்லாம் வல்ல வைத்தியநாதப் பெருமான், தையல் நாயகியம்மை, செல்வ முத்துக் குமாரசுவாமிப் பெருமான் திருவருளால், வைத்தீசுவரன் கோயில் மகா கும்பாபிஷேகவிழா மிகச்சிறப்பாக நடைபெற்று நிறைவு எய்தியமை, அன்பர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியும் இன்பமும் அளிப்பதாகும்.

---

பேரா யிரம்பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
**மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்**
**தீராநோய் தீர்த்தருள வல்லான்** தன்னைத்
திரிபுரங்கள் தீஎழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே

—திருநாவுக்கரசர்,

# திருமால் திருநெறியும் திருக்குறளும்

நாவீறர். திரு. நா. ஸ்ரீகாந்தராமாநுஜ சுவாமிகள்,
புனிதநிலையம், காரைக்கால்

**முன்னுரை :** தீதில் நன்னெறியாம் திருமால் திருநெறி, ஒப்புயர்வு அற்றதோர் உயர் நெறி. இயற்கைப் பெருநெறியும் உலகப் பொது நெறியுமான இத்திருமால் திருநெறியே பழம்பெருந் தமிழரின் பழிப்பில் பெருநெறியென, உலகச் சான்றோர்களால் உறுதி செய்யப் பெற்றிருக்கின்றது. முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையான இப்பீடார் பெருநெறியின் பெருமாட்சி பேச்சுக்கு நிலமன்று ! ' கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கும் ' முன்தோன்றி மூத்த குடியினரான, தமிழர்தம் தனிப்பெரும் நெறியான இத்திருமால் திருநெறியின் தொன்மையை, யாரும் நுனித்தறிய வல்லரல்லர். தம்சமயமே மிகத் தொன்மையானது என்பார்தம் நூல்களே, திருமாலைக் குறித்தும், திருமால் திருநெறி குறித்தும் கூறுவன கொண்டு, இதன் தொன்மையை ஒருவாறு உணரலாம். குற்றமற்ற வேதங்கள் முறையிடாநின்ற திருமாலையே, குறியும் நெறியுமாகக் கொண்டு வழிபட்டு, வாழ்ச்சி மிகப் பெற்ற வளர்நெறியே திருமால் திருநெறியாகும். இருபெரும் வேதாந்தத் துறைபோய சான்றோர் அனைவரும், இத்திரு நெறியை நித்தியமானது - சநாதனமானது - நிலைபேறு உடையது என அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

**வைணவம் :** இத்திருநெறியினையே, உலகம் இன்று வைணவம் என்ற பெயரால் வழங்கி வருகின்றது. பாலேய் தமிழர்தம் பழநெறியான திருமால் திருநெறி, உலகப் பொது நெறியாக ஒளிர்வது ஒன்றுகொண்டே, இதன் உயர்வற உயர்ந்த சீர்மையை ஒருசிறிது உணரலாம். அறப்பெரியனான திருமாலால் அருளப்பெற்றஇவ்வுயர் நெறியே, பழந்தமிழ்ச் சான்றோர்களின் பக்குவமுற்ற கடவுட் கொள்கையாக எந்நாட்டவர்களாலும் இன்று கருதப் பெறுகின்றது. நெறி நின்றார் நினையும் நேமியங்கையான் ஆன திருமாலே வேதமுதல்வன் என்பது பெருந் தமிழர் முடிவு. எனவே, வேதாந்த நெறியான வைணவம், பரம பவித்திரமானது, பரம வைதிகமானது , வேதாந்த மதங்கள் மூன்றினுள், கொள்கையால் தலையானது, என்று வைதிக உலகின் சான்றோர் தலைவர்கள் உறுதிசெய்வாராயினர்.

**தொல்காப்பியம் :** தமிழர் நிலப்பரப்பை நானிலம் என்று வகுப்பதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்னரே, தமிழகத்தில் திருமாலுக்கு உரிமையும் தலைமையும் ஊன்றியிருந்தமைக்குத் தொல்காப்பியமே சான்று பகரும்.

தொல்காப்பியர் பெருமான் அகத்தியனாரின் தலை மாணாக்கர். இவர் அருளிய தொல்காப்பியமே, இன்றைக்கு நாம் பெற்றுள்ள பழந் தமிழ் நூல்கள் அனைத்திற்கும் காலத்தால் பழமையானது. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் நானிலங்களையும் அவற்றிற்குரிய கடவுளர்களையும் கூறத் தொடங்கிய முதலில் " மாயோன் மேய காடுறையுலகமும் " என்று கூறும் திறம் ஆழ்ந்து சிந்திக்க உரியது ஒன்றாம். தொல்காப்பியர் முல்லை நிலமக்கட்கு வழிபடு தெய்வம் " மாயோன் " என்பாராயின் இவர்தம் காலத்துக்குமுன் "மாயோன் வழிபாடு " எத்துணைப் பழமை பெற்றதாய் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகும். மேலும், இவர் தாமே " பூவை நிலை " என்னும் துறையுள்,

> " மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
> தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் "

என நாவினிக்க உளமினிக்கக் கூறும் திறமும் குறிக்கொள்ளத் தக்க தாகும்.

இவ்விடத்து, முதற் பெருங் கடவுளின் ஈடும் எடுப்பும் அற்ற புகழ்களை மன், பெருஞ் சிறப்பின், தாவா, விழுப்புகழ் எனத் தம் ஆதரம் பெருகி விஞ்சியது தோன்றச் சிறப்பித்துக்

கூறும் முறை, உன்னுந்தோறும் நம் உள்ளத்தில் தேனூறித் தித்திக்கச் செய்வதொன்ருகும். இதனுல் பழமை தலைமைகளால் மட்டுமன்றி, இளமைக் குணங்களால் நிறைந்து பொருள்சேர் புகழ் படைத்தோனும் திருமாலே என்று கூறியவாறு, வேறு எந்தக் கடவுளரையும் ஆசிரியர் தொல்காப்பியஞர் விதந்து கூருமை, கூர்ந்து ஓர்தற்குரியது.

**சங்க நூல்கள் :** மேலும், பழைய சங்க நூல்களில் திருமால் பற்றியும், திருமாலடியார் ஆகிய முக்கோற்பகவர் பற்றியும், சிறந்த செய்திகள் பல காணப் பெறுகின்றன. அவற்றினும் மிகுதியாகப் பரிபாடல், சிலப்பதிகாரம் ஆகிய இரண்டு நூல்களில், திருமால் கொள்கைகள் மிக அழகாகக் கூறப்பெற்றுள்ளன.

ஈண்டு "மாயோன்" என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொள்ளும் போது, அதன் பொருள் "கருநிற முடையவன்" என்பதாகும். அன்றி, வடசொல்லாகக் கருதின் "மாயங்கள் - ஆனைத் தொழில்கள் வல்லவன்" என்பது பொருளாகும். திருமால் என்ற சொல்லுக்குத் திருவோடு கூடிய பெரியோன் என்பது பொருளாம். திருமால் என்பது ஸ்ரீமந் நாராயணன் என்னும் பொருளில் வந்த தமிழ்ச் சொல்லாகும்.

விண்ணும் மண்ணும் விலைபெருத பேரறிவாளரான சுவாமி நம்பிள்ளை, இச்சொல்லுக்கு இடத்திற் கேற்பப் பலவகைப் பொருள் கூறிச் செல்லும் அழகினை ஈட்டுரையிற் காணலாம். இனி, "புல்லாணித் தென்னன் தமிழை" என்று ஆழ்வார் அருள்மாரி வள்ளல் அருளிச் செய்தருளும், தமிழுருவான திருமால் அறப் பெரியோன் ஆதலின் "நெடியோன்" எனவும், ஆனைத் தொழில் (அகடித கடன சாமர்த்தியம்) வல்லனுதலின் "மாயோன்" எனவும், உயர்வற உயர்நலம் உடையவனுதலின், "தேயா விழுப்புகழ்த் தெய்வம்" எனவும், "கருதரிய உயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துளன்" ஆதலின் "இறைவன்" எனவும், இருந்தமிழ் நூற்புலவர்கள் விதந்து போற்றியுரைக்கும் செய்திகள் பன்னியுரைக்குங்கால் பாரதமாம்.

எனவே, திருமால் திருநெறி அரிய அருட் செல்வவைப்பு, அன்புச் சமயம், அறிவின் பிறப்பிடம், அருளின் உறைவிடம், உலகச் சமயங்களின் உயரிய தாயகம். அதனை மக்களினம் தக்க முறையில் துய்க்க முற்பட வேண்டும். முற்படின் உலகம் ஓர் அருட் குலமாக வாழும். அதனுல், மனிதகுலம் ஒன்ருல் ஒன்றும் குறைவின்றி எங்கும் திருவருள் பெற்று இன்புறும். ஆக, இதுகாறும் கூறியவாற்ருல், திருமால் திருநெறி பழந் தமிழ்ச் சமயம் என்பதனையும், அது தமிழகத்தில் தொன்றுதொட்டு நின்று நிலவும் பெருமைக்கு உரியது ஒன்று என்பதனையும், பெருந் தமிழர் பேணிவளர்த்த பெரும் அருட்செல்வம் என்பதனையும், அச்செங்நெறியின் வழியொழுக உலகம் தீங்கின்றி வாழும் என்பதனையும் ஒருவாறு கண்டோம்.

**திருவள்ளுவர் :** இனி இத்திருமால் திருநெறி, திருக்குறளில் ஏற்ற பெற்றி வேண்டும் அளவு இடம் பெற்றுத் திகழ்கின்ற உண்மையினையும், இவ்விரண்டினுக்கும் உள்ள தொடர்பினையும், ஒழிக்க வொழியாத உறவினையும், திருமால் கொள்கைகளுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் திருக்குறள் அமைந்திருப்பது பற்றியும், ஒரு சிறிது நோக்குவோம். திருவள்ளுவ தேவர், தமிழ் கூறும் நல்லுலகிற்குத் திருமால் திருநெறிபற்றி, தம் திருக்குறள் வாயிலாக வழங்கும் வளமார் செய்திகள், தமிழர்க்கு நல்விருந்தாகும். திருவள்ளுவர் பிறப்பால் இன்னர், இந்நெறி சார்ந்தார் என்று துணிதற்கில்லை ; எனினும் கொள்கையால் வைணவம் என்பதற்குத் திருக்குறளில் அகச் சான்று பலவுண்டு.

*" அறிவினுற் குறைவில்லா*
*அகல்ஞாலத்தார் அறிய*
*நெறியெல்லாம் எடுத்துரைத்த*
*நிறை ஞானத் தொரு மூர்த்தி "*

யான ஸ்ரீகண்ணனெம் பெருமான் அருளிச் செய்தருளிய ஸ்ரீகீதையின் வாழ்வேயாம். ஸ்ரீகீதை உபநிடதங்கள் அனைத்தின் சாரம். அது பாரதமா போரினிடையே திருவவதரித்தது. திருக்குறள் தமிழ்க்கீதை. இது தமிழர் தம் வாழ்க்கைப் போரின் இடையேமலர்ந்தது. அன்பே திருவள்ளுவனுர்தம் வாழ்க்கை, அன்பே அவர்தம் மூச்சு, பேச்சு எல்லாம். 'என்பும் உரியர் பிறர்க்கு' என்பதே வாழ்க்கையின் நியதி என்பர் இவர். இவ்வாழ்வே தியாகம். தியாகத்தின் சிரஞ்சீவிச் சின்னமே வைணவம். "பிறர் துன்பங் கண்டு ஐயோ என்று இரங்குபவனே" வைணவன். இதுவே திருவள்ளுவர் காட்டும் "வாழ்வாங்கு வாழும்" வகை. உண்மையில் வைணவம் என்பதற்குத் தொண்டு என்பதே திரண்ட பொருள். சான்ருேர் தலைவரான சுவாமி நம்மாழ்வார் "தொண்டே செய்து என்றும் தொழுது வழியொழுகப் பண்டே பரமன் பணித்த பணி

வகை" என்று அருளிச் செய்தருளுவர். ஆழ்வார் அடியார்களைத் "தொண்டர்" என்றே அழைத்தருளுவர். அத்தொண்டர் தம் நெறியான, வைணவம் திருவவதரித்தது தமிழகத்தில்தான்.

தமிழர் பண்டைக் காலத்தே, காட்டு நிலத்தில் திருமாலை (மாயோனை)ப் பரம்பொருளாகத் துணிந்து வழிபா டாற்றி, வாழ்ந்து போந்தமையைத் தொல்காப்பியத்தால் தெளிந்துள்ளோம். எந்நாளில் பாரதமாநாடு "அவி சொரிந்து ஆயிரம் வேட்டதோ" அதற்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்னரே "புலால் மறுத்தல்" எனும் பெருநெறி கைவரப் பெற்றது தமிழ் உலகம். வைணவம் தந்தருளிய தமிழகமே, ஒப்பில்லாத் தெய்வப் புலவரையும் "உலகினுக்கே தந்து" வான்புகழ் பெற்ற ஒருமை நயம் உன்னி மகிழ்தற்குரிது.

**திருக்குறள்:** பிறப்பால் உயர்ந்தவன் மனிதன். மனிதன் கற்றற்குரிய சீரிய நூல் ஒன்றின் மாண்பை, வருமாறு வகுத்துள்ளனர், நமது சமயப் பெரியோர்கள்.

1. நூலின் பெருமை (பிரபந்த வைலக்ஷண்யம்.)
2. நூலாசிரியர் பெருமை (வக்த்ரு வைலக்ஷண்யம்.)
3. நூல் நுதலும் பொருளின் மேன்மை (பிரதிபாத்திய வைலக்ஷண்யம்.)

என்பன. இம்மூன்று வகையிலும் விழுமிய மொழிகடந்த பெரும்புகழுக்குரியது திருக்குறள். நூல் வேறு, நூலாசிரியர் நிலைவேறு, என்று எண்ணத்தக்க நூல்கள் பலவுண்டு. அவை போன்று அன்றித் திருவள்ளுவரே திருக்குறள், திருவள்ளுவர், என்று துணிந்து போந்தனர், நம் செந்தமிழ்ச் சான்றோர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் தலை சிறந்தது திருக்குறள். இது தமிழ்மறை, பொதுமறை என்றெல்லாம் போற்றப் பெறுகின்றது. இந்நூல் மக்களின் அன்றாட வாழ்க்கையை ஒட்டியதாய், வாழ்க்கைக்குப் பயன் படுவதாய், எல்லோர்க்கும் ஒப்ப முடிந்ததாய், கற்கக் கற்க இன்பம் பயப்பதாய் இலங்கித் துலங்குவதொன்று.

திருக்குறளை நினையும்பொழுதே, திருமால் நினைவும் நெஞ்சிடங் கொள்ளும். "திருக் குறளப்பன்" என்றே இறைவனுக்கு ஒரு திருப்பெயர் சூட்டுவர், ஞானத் தமிழ்க் கடலான சுவாமி நம்மாழ்வார்.

*"முன்னங் குறளுருவாய்*
*மூவடி மண்கொண்டளந்த*
*மன்னன் சரிதைக்கே*
*மாலாகிப் பொன்பயந்தேன்"*

என்பர் நாற்கவிப் பெருமாளான ஆழ்வார் திருமங்கை மன்னர். அங்ஙனமே, மாணிக் குறளனாய்த் திருவவதரித்தருளிய திருமாலின் எளிவரும் இயல்பினில் காலாழ்ந்து, தாமியற்றிய நூலுக்குத் "திருக்குறள்" என்று பெயரிட்டனர் போலும் திருவள்ளுவர் என்னத் தட்டில்லை.

*"தேவிற் றிருமால் எனச்சிறந்த தென்பவே*
*பாவிற்கு வள்ளுவர் வெண்பா"*

என்பர் கவிசாகரப் பெருந்தேவனார்.

*"மாலுங் குறளுருவாய் வளர்ந்திரண்டு மாணடியால்*
*ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்*
*வள்ளுவரும் தம்குறள் வெண்பாவடியால் வையத்தார்*
*உள்ளுவ வெல்லாம் அளந்தார் ஓர்ந்து"*

என்று திருமாலோடு திருக்குறளை ஒப்பிட்டுப் பாடி, மகிழ்வர் பரணர் எனும் புலவர்.

விழுமிய பேருண்மையொன்றினைவலியுறுத்தத் திருமால் பத்து திருவவதாரங்களைச் செய்தருளியது போன்று, ஒரு பொருளை வற்புறுத்துவான் வேண்டி ஒன்றொன்றுக்கும் பத்துக் குறள் கூறினர் ஆசிரியர் என்பதும், நமது ஆன்றோர் மரபு.

**திருவாய்மொழி:** நங்கைச் சிறுமுனிவன் - உடையநங்கையார் திருவயிற்றில் உலகமெலாம் உய்யத் தோன்றியருளிய வயதால் இளமையும் அறிவாற்பெரிய முனிவருமான சுவாமி நம்மாழ்வார். திருமால் திருநெறியின், சந்தான பரம்பரையின் உலக முதற்குரவர் சுவாமி நம்மாழ்வாராவர். இவ்வுண்மை நாடோறும் வைணவர் அனைவரும் அநுசந்திக்கும், "ஆதி குருவாய்ப் புவியில் அவதரித்தான் வாழியே" என்னும் வாழித்திருநாம அடியொன்று கொண்டு அறியத் தகுந்ததாகும். திருவாய்மொழியை,

*"குருகூர்ச் சடகோபன் என்றொருபேர் கொண்டிங்*
*கருநான் மறை ஆயிரஞ் சிரமும் ஓரோர்*
*திருவாய் மொழியாகச் செந்தமிழால் தென்திக்கு*
*இருணீக்கி மற்றிதுவே இன்பமாகின்ற*
*பரலோக மாகப் பரங்கருணை யாலே*
*தரும் ஆரமிர்து":* (*கலிமடல்*)

என்று பரம அத்வைத மதச் சான்றோரான தத்துவராய சுவாமிகளும் போற்றிப் புகழ்ந்துரைத்தனர். சிறு முனிவன் வாய்மொழி— திருவாய் மொழி. சேய் - குழவி. இது கொண்டும், செந்தமிழ் மறையான திருவாய்மொழியின் குழவியிடத்ததாக வழிநூலாகத் திருக்குறள் கொள்ளப்பெறும் மரபுண்மை அறியலாம். ஈண்டு, ஆழ்வார்க்குத் திருவள்ளுவர் காலத்தால் முற்பட்டவராயிற்றே என்று மயங்கவேண்டுவதில்லை. வடமொழி வேதம், பூர்வம் உத்தரம் என்ற இரண்டு பிரிவுடையது. பூர்வத்தைப் பூர்வமீமாம்சை என்றுங் கூறுவதுண்டு. இதனை இயற்றியருளிய ஆசிரியர் ஜைமினிபகவான். இவர் தான் வேத வியாசபகவானின் சீடர். இவ்வியாசரே, உத்திர மீமாம்சையின் ஆசிரியர்.

இங்ஙனமே தமிழ் வேதமும், பூர்வம் உத்தரம் என்றஇரண்டு பிரிவுகளையுடையதாய் இருக்கும். இதில் பூர்வபாகம் திருக்குறள். உத்தரபாகம் திருவாய்மொழி. ஜைமினி பகவான்ஸ்ரீவியாசபகவானின்சீடராய் அமைந்தது போன்று, திருவாய் மொழித் தேசிகரான ஞானபண்டிதருக்கு, ஞான தசையில் பேரன்பும் பொங்கும் பரிவும் உடையவர் திருவள்ளுவர் என்றும், சொல்லிப் போதருவர் நம் ஆசிரியர்கள்.

திவ்விய சூரி சரிதம், குருபரம்பரை முதலிய நூல்களுள், சுவாமி நம்மாழ்வார் திருவவதாரம் கலி பிறந்த 16ஆம் நாள் என்றும், நங்கைச் சிறுமுனிவரான ஆழ்வாரது 16-ஆம் வயதில் திருவாய் மொழியின் திருவவதாரம் என்றும் கூறப் பெற்றுள்ளது. எனவே திருவவதாரத்தால் ஆழ்வார் திருவள்ளுவர்க்கு முற்பட்டவரென்றும், இடையில் அருகி மறைந்திருந்த திருவாய் மொழி முதலிய திவ்வியப் பிரபந்தங்கள், ஸ்ரீமந் நாத முனிகளின் வாயிலாக வெளிப்பட்டுச் சிறந்ததுதான், காலத்தால் திருவள்ளுவர்க்குப் பிற்பட்ட செய்தியென்றும் முடிவுகட்ட இடையூறு ஒன்றில்லை.

மேலும், சுவாமி நம்மாழ்வார்க்குக் காலத்தால் முற்பட்ட "பொய்கை பூதன் பேயார்" ஆகிய முதலாழ்வார்கள் மூவரையும், திருமழிசையாழ்வாரையும், சுவாமி நம்மாழ்வாரின் திருவுடலின் உறுப்புக்களாக எண்ணிச் செல்லும் சமய மரபு ஒன்றும் உள்ளது. இம் மரபுக் கண்கொண்டு நோக்கின் காலம் பற்றிய முரண்பாட்டிற்கும் சமாதானம் காணலாகும். திருவாய் மொழி அநாதியானது, நித்தியமானது என்ற மரபு ஒன்றும் உண்டு. இச் செய்திகளால் வைணவ சமயச் சான்றோர்கள் திருக்குறளில் எந்த அளவு பற்றும், தோய்வும் ஈடுபாடும் உடையவர்களாய் இருந்திருக்கின்றனர் என்பதை நன்குணர முடிகின்றது. மேலும், இதிகாச சிரேஷ்டமான இராமாயணமும் மகாபாரதமும் மனுவும் மறைநூலும் அன்றித் திருக்குறளுக்கு வேறு நூல்கள் ஒப்பாதல் இல்லை என்பதை,

"எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரும்
—முப்பாற்குப்
பாரதம் சீராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்"

என்று திருவள்ளுவமாலை கூறுவது கொண்டு, இதிகாசங்கள் இரண்டும் திருமால் சார்புடையது போன்று, திருக்குறளும் திருமால் சமயச் சார்புடையது என்று கொள்வதற்கும் இடந் தருமாற்றைக் காணலாம். இனி,

" சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற "

பொய்யில் புலவரான திருவள்ளுவர்தம் பெருநூலுள், வேறு எக்கடவுளர் பற்றியும் குறிப்பிடாத நிலையில், தம் முப்பாலுள் தப்பாது ஒவ்வொரு பாலிலும், "ஆதிபகவன்" "அடியளந்தான்" "தாமரைக் கண்ணன்" என்று திருமால் திருநாமங்களுள் மிகச் சிறந்த இம் மூன்று திருநாமங்களைத் தெரிந்தெடுத்து வைத்துள்ளனர் என்பதை நோக்கி, திருவள்ளுவர் எந்த அளவு திருமால் அன்பும், திருமால் திருநெறிச் சார்பும் உடையவராய் இருந்திருத்தல் வேண்டும் என்பது, தெளிவாகலாம். இதனை உன்னியுன்னி இறும்பூது எய்தத் தமிழ்கூறும் நல்லுலகம் கடப்பாடு உடையதாகும். மேலும், உலகமாந்தர் அனைவர்க்கும் ஏற்ற பெற்றியமைந்துள்ள அற நூலான திருக்குறளுள், திருமால் திருநெறிக்கே வேண்டுமளவு ஆதரவு காணக் கிடக்கின்றது. அவற்றுள் மேல்வரும் ஒரு சில செய்திகள் சிந்தனைக்கு இனிமை பயப்பனவாகும்.

இருஷீகேசன் (இந்திரியங்கட்குத் தலைவன்) என்ற திருநாமத்தின் தமிழாக்கமாக "பொறி வாயில் ஐந்தவித்தான்" என்று கூறும் திறம் சிந்திக்கத் தக்க தொன்று.

" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர்
ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார் "

என்னும் குறளில் வரும், "பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி" என்பது, திருமால் இராமகிருஷ்ணுதி திருவவ தாரங்களைச் செய்தருளி நிலைநிறுத்திய நீதில் நன்னெறி யென்றோ, அல்லது ஸ்ரீ கண்ண னெம் பெருமான் அருளிச் செய்தருளிய ஸ்ரீமத் கீதையின் ஒழுக்க நெறியென்றோ பொருளாமாறு, சொல்லமைதி தோன்றக் கூறியுள்ள நயம்,கவின் மிக உடையதாகும். இவ்வாறே,

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

எனும் குறட்பாவில், ஸ்ரீகண்ணனெம் பெரு மான் தன்னைச் சரணம் அடைந்த பாண்டவர் பக்கலுள்ள அன்பின் மிகுதியால் தான் முன்னுரைத்த மொழி பொய்க்கப் பாரதப் போரில் ஸ்ரீவீடுமற்காகத் திருவாழி ஏந்தின மையால் "யாதும் தீங்கு பயவாது நன்மையே பயந்தது" என்னும் பேருண்மையைக் கூர்ந் தறியுமாறு கூறிப்போதலையும் காணலாம்.

இனி முப்பாலுள் மூன்றிடத்தும் திருமால் திருநாமங்கள் பயிலப்பெறும் மூன்று குறளை யும் முறையே நோக்குவோம்.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு."

என்பது முதலதிகாரத்தின் முதற்குறள். இதன்பொருள்; "எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலையுடையன, அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடையது" என்பதாகும்.

இக்குறளில் முதற்கண் எடுத்தாண்ட அகர வெழுத்தே திருமாலின் முதற்பெயராகும். இது இருமொழித்துறைபோய அறிஞருலகின் ஒருதலையான முடிவு. "எழுத்துக்களில் அகரம் யான்" என்று கண்ணனெம் பெருமான் கீதையில்அருளிச் செய்வது உலகறிந்த தொன்று. "ஈண்டு அகரமுதல வென்னுங் குறளான் அகரமாகிய முதலை யுடைய வெழுத்துக்களெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடைத்துலகமென வள்ளுவனுருவமை கூறியவாற்றானும், 'கண்ணனெழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக்கூறிய வாற்றானும், பிற நூல் நூல்களானும் உணர்க" என்று தொல் காப்பியம் நச்சினார்க்கியம் நூன்மரபில், உச்சி மேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் பணித் துள்ளது அறியத்தக்கதாகும்.

மேலும், "மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத் தின் உரையில், நச்சினார்க்கினியர் அகரம் திருமாலை உணர்த்தும் எழுத்து என்று தெளி வாகக் கூறியுள்ளனர். ஈண்டு, அகரம் திரு மாலின் முதற்பெயர் என்பதை மற்றுமோர் வரலாறும் வலியுறுத்தும். அதாவது வட மொழிக்குச் சிறந்த இலக்கண நூல் "பாணி னீயம்". இதற்கு 'மாபாடியம்' என்னும் உரைஇயற்றப் புகுந்த பதஞ்சலிபகவான், 'முதலும் இடையும் கடையும் மங்கலம் இருத்தல் வேண்டும் என்ற வழக்கின்வழி, நின்று நிலவவேண்டிய உயர்ந்த நூலான பாணினீயம் அமைந்திலது' என்று பிற் பட்டார் கூறிய குறையை மறுப்பான் வேண்டி,

"அ இதி பகவதோ
நாராயணஸ்ய ப்ரதமாபி
தாநம் கிந் நாம
மங்களம் நக்ருதம்"

என்று, "அகரமானது பகவானாகிய நாரா யணனுக்கு முதல் திருநாமம் ஆகையாலே, அவனைக் குறிக்கும் அகரம் முதற்கண் எடுத்திருப்பதினால் எந்த மங்களம்தான் இங்குக் கூறப்படவில்லை"! என்று கூறிக் குற்றத்தை நீக்கினார் என்ற வரலாருகும். இவற்றால் அகரத்துக்குப் பொருளானவன் பகவச்சப்த வாச்சியனான திருமாலே என்பது போதரும்.

இனி "ஆதிபகவன்" என்பதும் திருமாலை யே குறிக்கின்றது ஒன்றாகும். இங்கு பகவன் என்ற சொல்லுக்குமுன் எடுத்த "ஆதி" என்ற சொல்லைப் பாஞ்சராத்திரர் (வைணவர்) பக்கமாகக் கொண்டு, சிவஞான சித்தியார் பரபட்சத்தில் பாஞ்சராத்திரி மத மறுதலையில் மறுப்புக் கூறப்பட்டிருப்பது கொண்டு, "ஆதி" என்ற சொல், வைணவச் சார்புடைய தாதலை அறியலாம்.

அடுத்து, "பகவன்" என்ற சொல்லும், சிறப்பாகத் திருமாலையும், குறிப்பாகக் கண்ணனெம் பெருமானையுமே குறிக்க வல்லது ஒன்று. கண்ணனெம் பெருமானையே பகவான் எனவும், அவன் அருளிச் செய்த நூலையே பகவற் கீதை எனவும், அவனது புகழ் பரவும் நூலே பாகவதம் எனவும், திருமாலடியார்களே பாகவதர் எனவும் கூறப் பெற்றிருத்தலும், உலக வழக்காறும், இதனை வலியுறுத்தும்.

(தொடரும்)